22–2–1999

# உள்ளடக்கம்


**பக்கங்கள்**

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் iii-vi

Personnel of the Government of Tamil Nadu vii-x

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் xiii-xiv

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) xv-xxv

*1.* **அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)--**

(அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 1-2

(ஆ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1999 2

(இ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 1999 3

*2.* **அரசினர் தனித் தீர்மானம்--**

ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்பட்ட மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையில் மாற்றம் செய்யப் படாமலிருக்க அரசமைப்புச் சட்டத் திருத்தம் கோருதல் 3-25

திரு. சோ. பாலகிருஷ்ணன் 4-5

திரு. ஜி. பழனிசாமி 5-6

திரு. ம. அப்துல் லத்தீப் 6-7

*திரு. இரா. தாமரைக்கனி 8-9

திரு. ஐ. கணேசன் 9-10

*திரு. லா. சந்தானம் 10-11

| | பக்கங்கள் |
|---|---|
| 2. அரசினர் தனித் தீர்மானம்--தொடர்ச்சி | |
| திரு. எஸ். திருநாவுக்கரசு | 11-13 |
| *திரு. டி. மணி | 14 |
| திரு. சி. வேலாயுதன் | 14-16 |
| திரு. பி. வெங்கடசாமி | 16 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 16-17 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 17-24 |
| 3. தகவல் கோரல்-- | |
| பேரவை ஒத்திவைக்கப்படுகையில் பேசிய உறுப்பினர் மறுநாள் தொடர்ந்து பேசுதல் | 28-33 |
| 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்--தொடர்ச்சி | 25-28<br>34-119 |
| திரு. பி. வெங்கடசாமி | 25, 100-104 |
| திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் | 26 |
| திரு. சி. ஞானசேகரன் | 27,75-76 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 28 |
| *திரு. இ. புகழேந்தி | 43-47 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 47-55 |
| *திரு. இரா. தாமரைக்கனி | 55-67,69-70 |
| *திரு. ஐ. கணேசன் | 67-75 |
| *டாக்டர் வை. இராமசாமி | 76-80 |
| திரு. கு. மனோகரன் | 80-85 |
| டாக்டர் காஞ்சனா கமலநாதன் | 85 |
| *திரு. டி. மணி | 86-93 |
| *திரு. என்.ஆர். அழகராஜா | 94-100 |
| *திரு. பி.என். வல்லரசு | 104-109 |
| *திரு. ரா. சேதுநாதன் | 109-114 |
| திரு. வி.[illegible]ணன் | 114-119 |
| 5. பேரவை[illegible] வைக்க[illegible] ஏடுகள்-- | 119-121 |


220162



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்--நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.

2. **கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

4. **வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் [illegible]கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

6. **வேளாண்மைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. **பொதுப்பணித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. துரைமுருகன் :**
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. **போக்குவரத்துத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :**
போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. **நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் :**
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. **தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. **உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கா.நா. நேரு :**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. **பால்வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. க. சுந்தரம் :**
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :**
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. **சட்டத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா :**
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. **கைத்தறித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :**
கைத்தறி, துணித் தொழில்.

16. **பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் :**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. **வனத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :**
வனம், சின்கோனா, மற்றும் சுற்றுச்சூழல் மாசுக் கட்டுப்பாடு.

18. **வீட்டு வசதித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

| | | |
|---|---|---|
| 19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :** கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு. |
| 20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :** செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம். |
| 21. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் :** கால்நடைப் பராமரிப்பு |
| 22. சமூக நலத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் :** மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம். |
| 23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :** ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர். |
| 24. சுற்றுலாத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன் :** சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம். |
| 25. கதர்த் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :** கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம். |
| 26. மீன் வளத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :** மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம். |



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. Chief Minister | .. | **The Hon. Kalaignar M. Karunanidhi :** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes. |
| 2. Minister for Education | .. | **The Hon. Prof. K. Anbazhagan :** Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen. |
| 3. Minister for Health and Electricity | .. | **The Hon. Thiru Arcot N. Veerasamy :** Health, Medical Education and Family Welfare and Electricity. |
| 4. Minister for Revenue | .. | **The Hon. Thiru Nanjil K. Manoharan :** Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors. |
| 5. Minister for Rural Development and Local Administration | .. | **The Hon. Thiru Ko.Si. Mani :** Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply. |

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan :** Highways and Ports.

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K. N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N. K. K. Periasamy:** Handlooms, Textiles.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M. R. K. Panneer-selvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Forest** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona and Environmental Pollution Control.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

| | | |
|---|---|---|
| 20. **Minister for Information, Publicity and Printing** | .. | **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press. |
| 21. **Minister for Animal Husbandry** | .. | **The Hon. Pulavar P. M. Senguttuvan:** Animal Husbandry. |
| 22. **Minister for Social Welfare** | .. | **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| 23. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. | **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 24. Minister for Tourism | .. | The Hon. Thiru N. Suresh Rajan: Tourism and Tourism Development Corporation. |
| 25. **Minister for Khadi** | .. | **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| 26. **Minister for Fisheries** | .. | **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி**

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

**திரு. சி.டி. தண்டபாணி**

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்**

**திரு. பெ. ஆசையன்**

**டாக்டர் ஆ. ஞானசேகரன்**

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்**

**திரு. வை. சிவபுண்ணியம்**

*செயலாளர்*

**திரு. டி. சாலமன் ஜெயபால்**

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி அனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 4. | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 5. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 6. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 7. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 11. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 12. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 13. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 14. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 15. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 16. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 17. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| 18. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். .. | துணைச் செயலாளர் |
| 19. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 20. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 21. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 22. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 23. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 24. | திரு. க. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 25. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. .. | சார்புச் செயலாளர் |
| 26. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 27. | திரு. உள.கு. சுப்பிரமணியன், எம்.ஏ... | சார்புச் செயலாளர் |
| 28. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 29. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 30. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். .. | தலைமை நிருபர் |
| 31. | திருமதி சி. கனகவல்லி, டி.சி.பி. .. | தலைமை நிருபர் |
| 32. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. .. | தலைமை நிருபர் |
| 33. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 34. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 35. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 36. | திரு. நா. நடராஜன், பி.ஏ. .. | தலைமை நிருபர் |
| 37. | திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். .. | சார்புச் செயலாளர் |
| 38. | திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். .. | தலைமை நிருபர் |
| 39. | திரு. தி. உமாபதி, பி.ஏ. .. | தலைமை நிருபர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராக, திரு. .. | அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். .. | மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. .. | புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. .. | வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. .. | ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. .. | அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. லி. .. | கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. .. | மேட்டுப்பாளையம் |
| 10. | அழகராஜா, திரு. என்.ஆர். .. | தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. .. | சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், திரு. வ. .. | செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. .. | துறைமுகம் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. .. | ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. .. | பவானிசாகர் |
| 18. | ஆண்டி அம்பலம், திரு. எம். .. | நத்தம் |
| 19. | ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். .. | வில்லிவாக்கம் |
| 20. | ஆலடி அருணா, திரு. .. | ஆலங்குளம் |

21. ஆல்பன், டாக்டர் வே. .. திருவட்டாறு
22. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்
23. ஆறுமுகம், திரு. தி.ப. .. திருச்செங்கோடு
24. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
25. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)
26. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
27. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்
28. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
29. இராசன், திரு. வி. பி. .. ராஜபாளையம் (செ.வ.)
30. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்
31. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி
32. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
33. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
34. இராமச்சந்திரன், திரு. சி.இரா. .. தொண்டாமுத்தூர்
35. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
36. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
37. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
38. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். .. பள்ளிப்பட்டு
39. இராமஜெயம், திரு. ந.பூ. .. மயிலாப்பூர்
40. இராஜரெட்டி, திரு. ச. .. தளி
41. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்
42. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)
43. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)



44. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்
45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
46. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
47. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்
48. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
51. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
52. கன்னையன், திரு. க. .. தொட்டியம்
53. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
54. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
55. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
56. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி
57. கிருஷ்ணன், திரு. சீ. வெ. .. வேடசந்தூர்
58. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்
59. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்
60. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
61. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. .. கும்மிடிப்பூண்டி
62. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்
63. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
64. கோபால், திரு. பா. .. மேட்டூர்
65. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு
66. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)

| | | |
|---|---|---|
| 67. | கோவிந்தன், திரு. ப. | .. தாரமங்கலம் |
| 68. | கோவிந்தன், திரு. வெ. | .. பேரணாம்பட்டு (செ.வ.) |
| 69. | சக்ரபாணி, திரு. ஆர். | .. ஒட்டன்சத்திரம் |
| 70. | சண்முகம், திரு. கோ. | .. திருப்பத்தூர் |
| 71. | சண்முகம், திரு. சி. | .. ஆலந்தூர் |
| 72. | சண்முகம், திரு. ம. | .. கிணத்துக்கடவு |
| 73. | சந்தானம், திரு. லா. | .. சோழவந்தான் |
| 74. | சந்திரசேகரன், திரு. சி. | .. சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 75. | சந்திரசேகரன், திரு. துரை. | .. திருவையாறு |
| 76. | சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. | .. சமயநல்லூர் (செ.வ.) |
| 77. | சம்பத், திரு. ஏ.ஜி. | .. முகையூர் |
| 78. | சரஸ்வதி, திருமதி ஆர். | .. தாராபுரம் (செ.வ.) |
| 79. | சற்குணபாண்டியன்,<br>திருமதி எஸ்.பி. | .. டாக்டர்<br>இராதாகிருஷ்ணன் நகர் |
| 80. | சாமிநாதன், திரு. மு.பெ. | .. வெள்ளக்கோவில் |
| 81. | சிங்காரவேலு, திரு. வி.பி. | .. வால்பாறை (செ.வ.) |
| 82. | சிவபுண்ணியம், திரு. வை. | .. மன்னார்குடி |
| 83. | சிவராமன், திரு. ஆர். | .. திருப்பத்தூர் |
| 84. | சிவராஜ், திரு. சு. | .. ரிஷிவந்தியம் |
| 85. | சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். | .. பனமரத்துப்பட்டி |
| 86. | சிவானந்தம், திரு. ஆர். | .. ஆரணி |
| 87. | சிவாஜி, திரு. இ.ஏ.பி. | .. திருத்தணி |
| 88. | சின்னய்யா, திரு. வெ. | .. திருமயம் |



| | | |
|---|---|---|
| 89. | சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். | .. விருதுநகர் |
| 90. | சுகவனம், திரு. இ.ஜி. | .. பர்கூர் |
| 91. | சுடலைமுத்து, திரு. அ. | .. போடிநாயக்கனூர் |
| 92. | சுதர்சனம், திரு. டி. | .. பூந்தமல்லி |
| 93. | சுந்தரம், திரு. க. | .. பொன்னேரி (செ.வ.) |
| 94. | சுந்தரம், திரு. ந. | .. காரைக்குடி |
| 95. | சுந்தரம், திரு. பி.ஆர். | .. ராசிபுரம் |
| 96. | சுந்தர், திரு. கே. | .. உத்திரமேரூர் |
| 97. | சுப்பராயன், திரு. கே. | .. திருப்பூர் |
| 98. | சுப்பிரமணி என்கிற<br>சி.சு. மணி, திரு. சி. | .. திருவள்ளூர் |
| 99. | சுப்பிரமணி, திரு. பி.என். | .. ஆற்காடு |
| 100. | சுப்பிரமணியன், திரு. அ.லெ. | .. திருநெல்வேலி |
| 101. | சுப்புலட்சுமி செகதீசன், திருமதி | .. மொடக்குறிச்சி |
| 102. | சுரேஷ் ராசன், திரு. என். | .. கன்னியாகுமரி |
| 103. | செங்குட்டுவன், புலவர் பூ.ம. | .. மருங்காபுரி |
| 104. | செங்கை சிவம், திரு. | .. பெரம்பூர் (செ.வ.) |
| 105. | செல்லக்குமார், டாக்டர் அ. | .. தியாகராய நகர் |
| 106. | செல்வம், திரு. ரெ. | .. குளித்தலை |
| 107. | செல்வராஜ் என்கிற<br>கவிதைப்பித்தன், திரு. | .. கொளத்தூர் (செ.வ.) |
| 108. | செல்வராஜ், திரு. து. | .. உடுமலைப்பேட்டை |
| 109. | சேகரன், திரு. ஆர்.ஆர். | .. ஓமலூர் |
| 110. | சேதுநாதன், திரு. ரா. | .. திண்டிவனம் |

158. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை
159. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
160. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
161 புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
162. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
163. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
164. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
165. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
166. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
167. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா)
168. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
169. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
170. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
171. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
172. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
173. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
174. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
175. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
176. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
177. மணி, திரு. டி. .. விளவங்கோடு
178. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
179. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்



180. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்
181. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
182. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
183. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
184. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
185. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
186. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
187. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
188. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி
189. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
190. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
191. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
192. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
193. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
194. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
195. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
196. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
197. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
198. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
199. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
200. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
201. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
202. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்

111. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை
112. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
113. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
114. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
115. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
116. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
117. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
118. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
119. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
120. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
121. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
122. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
123. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
124. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
125. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
126. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
127. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
128. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
129. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
130. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
131. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
132. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்
133. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
134. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்



135. துரைமுருகன், திரு. .. காட்பாடி
136. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
137. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
138. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
139. நடராஜன், திரு. த. .. செஞ்சி
140. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
141. நன்னன், திரு. கொ. வீ. .. செங்கம் (செ.வ.)
142. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
143. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
144. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
145. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்
146. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
147. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
148. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
149. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
150. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
151. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
152. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
153. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
154. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
155. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
156. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
157. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி

| | | |
|---|---|---|
| 203. ரவி அருணன், திரு. கே. | .. | தென்காசி |
| 204. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திகுளம் |
| 205. ராசேந்திரன், திரு. ஏ. | .. | போளூர் |
| 206. ராணி, செல்வி க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 207. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 208. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 209. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 210. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 211. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | .. | காங்கேயம் |
| 212. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 213. வல்லரசு, திரு. பி. என். | .. | உசிலம்பட்டி |
| 214. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 215. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 216. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 217. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 218. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலர்மலை |
| 219. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 220. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 221. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | .. | பாலக்கோடு |
| 222. வெங்கடேசன், திரு. ச.க. | .. | மதுராந்தகம் |
| 223. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 224. வெங்கிடு, திரு. ஜி.பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |



| | | |
|---|---|---|
| 225. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |
| 226. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 227. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 228. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 229. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 230. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 231. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 233. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. | முசிறி |
| 234. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 235. ஆன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**மாசி 10, வெகுதான்ய—திருவள்ளுவர் ஆண்டு 2030**

**1999, பிப்ரவரி 22, திங்கட்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்*
*நீங்கா நிலனாள் பவர்க்கு"*

காலம் தாழ்த்தாத விரைவான நடவடிக்கைகளும், அறிவுடைமையும், துணிவும் நாடாளுகின்றவர்களுக்குத் தேவையானவையும், நீங்காமல் நிலைத்திருக்க வேண்டியவையுமான பண்புகளாகும்.

*[குறிப்பு : ஒர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]*

## 1. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"1999-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1999-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

* **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



### (இ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1999-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 2. அரசினர் தனித் தீர்மானம்

### ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்பட்ட மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையில் மாற்றம் செய்யப்படாமலிருக்க அரசமைப்புச் சட்டத் திருத்தம் கோருதல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 20-2-1999 அன்று முன்மொழிந்த தனித் தீர்மானத்தின்மீது விவாதம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

[1999 பிப்ரவரி 22

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 20-2-1999 அன்று முன்மொழிந்த தீர்மானத்தை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய இந்திய அரசமைப்புச் சட்டம் அமலுக்கு வந்த பிறகு, தமிழகத்தைப் பொறுத்தவரையில் 40 நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. 1961-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி நம்முடைய தமிழகத்தின் மக்கள் தொகை குறைந்துவிட்டது என்ற காரணத்திற்காக அன்று ஒரு இடம் நமக்குக் குறைக்கப்பட்டது. அவ்வாறு குறைத்ததற்கு அப்போது சொல்லப்பட்ட காரணம் என்னவென்றால், மேற்கு வங்காளத்திலிருந்து வந்த ஏராளமான அகதிகள், கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகளை எல்லாம் கணக்கிட்டு அதற்காக ஒரு இடத்தைக்கூட்டி நமக்கு ஒரு இடத்தைக் குறைத்ததாகச் சொல்லப்பட்டது. அதற்குப் பிறகு 1971-ஆம் ஆண்டு மறுபடியும் கணக்கெடுப்பு நடந்தது. அந்தக் கணக்கெடுப்பில் அஸ்ஸாம் மாநிலத்திற்கு ஒரு இடம் குறைக்கப்பட்டது. அப்போது அஸ்ஸாம் மாநில மக்கள் ஒரு பெரிய போராட்டத்தை நடத்தி, எங்களுக்கு ஒரு இடத்தைக் குறைக்கக்கூடாது என்று வன்மையாகக் கண்டித்ததன் காரணமாக, அதற்கு ஒரு காரணத்தைச் சொல்லி, அதாவது மலைவாழ் மக்கள் மிகுதியாக இருக்கிற பகுதி என்கிற காரணத்தால் அதைக் குறைக்கக்கூடாது என்று சொல்லி 31-வது அரசமைப்புச் சட்டத் திருத்தம் செய்து அஸ்ஸாம் மாநிலத்திற்கு மறுபடியும் அந்த இடத்தை ஒதுக்கிக் கொடுத்தார்கள். அதன் பிறகு 1976-ஆம் ஆண்டில் கொண்டுவந்த அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி 2000-ஆண்டு வரை இப்போது இருக்கின்ற சூழ்நிலையே தொடர வேண்டுமென்று ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். இப்போது 2000 ஆண்டை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறோம். 2000-ஆவது ஆண்டில் கணக்கெடுப்பு நடக்கின்றபோது தமிழகத்திற்கு 6 இடங்கள் குறைந்துவிடும் என்ற அச்சத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முன்கூட்டியே இந்த அவைக்குத் தெரிவித்ததோடு, மத்திய அரசுக்கும் இது குறித்து விரிவாக ஒரு தீர்மானத்தை அனுப்பி நம்முடைய உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை நான் முழுமையாகப் பாராட்டி வரவேற்கிறேன்.

முற்பகல் 9-35

அதோடு சேர்த்துக்கொள்ள வேண்டிய இன்னொன்று என்னவென்றால், தமிழகத்தைப் பொறுத்தவரை, குடும்பக் கட்டுப்பாடு



1999 பிப்ரவரி 22] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

திட்டத்தில், மக்களே மனமுவந்து செய்கின்ற அளவிற்கு, நம்முடைய அரசு நல்ல பிரச்சாரம் செய்து, மக்கள் மத்தியில் மக்கள் தொகையைக் குறைக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவினுடைய பொருளாதாரமே வளர்ச்சி அடையக் கூடிய ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தியதன் காரணமாக, நமக்கு ஒரு பரிசுப் பொருளாக, கூடுதலாக ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் வேண்டும் என்றுகூட இந்தத் தீர்மானத்திலே சேர்த்துக் கொள்ளலாம் என்று தொரிவித்து, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து முடிக்கின்றேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 ஆம் தேதி அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. குறிப்பாக, 2000 ஆண்டிற்கான மக்கள் தொகைக் கணக்கெடுப்புப்படி, ஆறு மக்களவைத் தொகுதிகள் குறைக்கப்படலாம் என்ற அச்சம் வந்திருப்பதை வெளிப்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முன்னெச்சரிக்கையான ஒரு நடவடிக்கையாக இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முழுமனதோடு ஆதரித்து வரவேற்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்ட இந்தத் தீர்மானத்தில், கடைசிப் பத்தியிலே ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. "50 ஆண்டுகள் வரை இருக்கலாம்; அதற்குப் பிறகு இதை மாற்றம் செய்யலாம்" என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏதோ, இன்றைக்கு இருக்கிற சங்கதிகள், இன்றைக்கு இருக்கக்கூடிய மக்கள் தொகை ஆகியவற்றைப் பார்த்துவிட்டு, 50 ஆண்டுகளுக்குப் பிறகு மாற்றலாம் என்று நாம் தள்ளிவிடுவது என்பது சரியல்ல. 50 ஆண்டுகளுக்குப் பிறகு மக்கள் தொகை பலமடங்கு பெருக்கம் அடையுமே தவிர, குறைவதற்கான வாய்ப்பு இல்லாமல் இருப்பதால், 50 ஆண்டுகள் என்பதையே முற்றிலுமாக அகற்றிவிட வேண்டும் என்பதை நான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்தாக நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, இந்தியாவிலே இருக்கிற பல்வேறு மாநிலங்களில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை ஒரு தேசியத் திட்டமாக எடுத்துக் கொண்டிருக்கிற மத்திய அரசு, அதை முழுமையாக தமிழ்நாடு அரசு

நிறைவேற்றி வருவதற்கு ஏதோ ஒரு தண்டனை வழங்குவது போல இது இருக்கிறது; மக்களவைத் தொகுதியின் எண்ணிக்கையைக் குறைப்பது என்பதைப் பொறுத்தவரை பீகாரை எடுத்துக் கொண்டாலும், உத்திரப்பிரதேசத்தை எடுத்துக்கொண்டாலும் இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. ஆனால், தமிழகத்தில் இந்தத் திட்டம் முற்றிலுமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஏன், இன்னும் ஒன்று சொன்னால், கல்வியிலேகூட கேரளா முன்னேற்றம் அடைந்திருக்கிறது. தமிழ்நாடும் 52 சதவிகித முன்னேற்றம் அடைந்திருக்கிறது. இதெல்லாம் மத்திய அரசினுடைய கவனத்திற்கு வரவில்லையா, கணக்கெடுப்பிலே தெரியவில்லையா என்று எனக்குத் தெரியவில்லை. எனவே, இதைக்கூட கண்காணிக்க முடியாத ஒரு மத்திய அரசு, இதுபோன்ற முன்னோடித் திட்டமான தேசியத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஒரு தண்டனை கொடுப்பதோடு மட்டுமல்லாமல், மக்களவையில் இந்த மாநிலத்தின் உரிமைக்குக் குரல் எழுப்பக்கூடிய அந்த உறுப்பினர்களுடைய குரலை நெரிக்கிற விதமாக இது இருக்கிறது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. ஆகையால், இந்தத் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக்கொண்டு, வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதேபோன்று, இதை முழுமையாக மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தி, வாய்ப்பிற்கு நன்றிகூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப். (குறுக்கீடு) கட்சித் தலைவர்கள் பேசுவதுதான் முறையாக இருக்கும். இதிலே உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. திரு. அப்துல் லத்தீப் பேசுங்கள்.

*முற்பகல் 9-40*

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த சனிக்கிழமை அன்று இந்த அவையில் முன்மொழிந்த தீர்மானத்தை இந்திய தேசிய லீக் முழுமனதோடு வரவேற்கிறது. 1976-இல் கொண்டு வந்த அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் அடிப்படையில், 2000 ஆண்டு வரையில் இன்றைக்கு இருக்கிற அதே நிலை நீடிக்க வேண்டுமென்று இருந்தாலும், 2000 ஆம் ஆண்டிலே புதிய கணக்கெடுப்பு எடுத்த பிறகு நம்முடைய நிலையிலே மிக அபாயகரமான மாறுதல் வரும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். ஆறு உறுப்பினர்கள் குறைவார்கள் என்றால் - ஏற்கெனவே குறைக்கப்பட்டது ஒரு இடம், அதோடு ஆறு என்று சொன்னால் - இன்றைக்கு இருக்கிற நிலையிலே





ஏறக்குறைய 33 நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் நமக்கு இருப்பார்கள். எனவே இங்கே சுட்டிக்காட்டியதைப்போல, குடும்ப நலத் திட்டங்களை, குடும்பக் கட்டுப்பாட்டை மிகவும் ஆர்வத்தோடு நடத்துகிற காரணத்தால் அதற்காக நமக்குக் கொடுக்கப்படுகிற தண்டனையா இது என்பதும ஒரு கேள்வியாக இருக்கிறது. இது குறித்து தமிழக மக்கள் மிகவும் கவலையடைந்திருக்கிறார்கள். வரும் ஆபத்தை முன்கூட்டியே புரிந்துகொண்டு எப்போதுமே தீர்க்கதரிசனத்தோடு நடந்துகொள்கிற நமது முதலமைச்சர் அவர்கள் இப்போதே இந்த அவை கட்ட வேண்டும், நம்முடைய பிரதிநிதித்துவம் நாடாளுமன்றத்தில் உறுதி செய்யப்படவேண்டும் என்பதற்காக இந்தத் தீர்மானத்தை அவருடைய எண்ணமாக மட்டுமல்லாமல், தமிழகத்தினுடைய பிரதிநிதித்துவ சபையாக இருப்பதால் தமிழ்நாட்டினுடைய எண்ணமாக, இந்த அவையினுடைய தீர்மானமாகவே மத்திய அரசுக்கு அனுப்புவது சாலச் சிறந்தது. அதுதான் வரவிருக்கிற ஆபத்தைத் தடுப்பதற்கு முறையாக இருக்கும் என்ற எண்ணத்தில் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இது குறித்து நாம் தேசிய அளவில் கூட ஒருமித்த ஒரு கருத்தை உருவாக்குவது நல்லது என்று நான் கருதுகிறேன்.

நம்முடைய ஜனத்தொகையின் அடிப்படையில் மட்டும்தான் நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பதோடு குடும்பக் கட்டுப்பாட்டில் மிகத் தீவிரமாக வெற்றிகளைக் கண்டிருக்கிற மாநிலங்களுக்கு அதற்கேற்ப ஜனத் தொகையைப் பின்தள்ளிவிட்டு இதில் கண்ட வெற்றிக்காக அதிகமான பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என்றுகூட மத்திய அரசுக்கு வற்புறுத்தி, அது குறித்தும் ஒரு தேசிய கருத்தை உருவாக்குவது முறையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஏதோ இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டவுடன் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுவிட்டது என்று கிடப்பில் போடாமல் உடனடியாக மத்திய அரசு இதை அமல்படுத்த உரிய அரசமைப்புச் சட்டத் திருத்தத்தைப் நாடாளுமன்றத்தில் அவர்கள் அனுமதித்து, அறிமுகம் செய்து நிறைவேற்றித் தரவேண்டுமென்று ஒட்டுமொத்தக் குரலாக தமிழகத்தினுடைய இந்தக் குரல் ஒலிக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இதற்காக நன்றி செலுத்தி இந்தத் தீர்மானத்தை முழு மனதுடன் நாங்கள் ஆதரிக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி

[1999 பிப்ரவரி 22

*** திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த குடும்ப நலத் திட்டத்தை எந்த அரசு வந்தாலும் தமிழ்நாட்டிலே செவ்வனே நிறைவேற்றி வருகிறது. இந்தியாவிலேயே முன்மாதிரியாக நிறைவேற்றி வருகிறது. அதனால் மக்களவைக்கு ஒவ்வொரு மாநிலத்திலும் தற்போது ஒதுக்கப்பட்டுள்ள தொகுதி எண்ணிக்கையில் மேலும் 50 ஆண்டுகள் வரை மாற்றம் ஏதும் செய்யப்படாமல் இருப்பதற்கு ஏதுவாக தேவையான அரசமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டுமென இந்திய அரசைக் கேட்டுகொண்டு நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்துள்ளார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்தத் தீர்மானத்தை நாங்கள் ஆதரிக்கிறோம். ஏனென்றால் இந்தக் கணக்கெடுப்பு வந்தால் 6 இடங்கள் வரை குறைவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். மாண்புமிகு தேசிய லீக் கட்சியின் தலைவர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் சொன்னதுபோல, குடும்பக் கட்டுப்பாட்டை நாம் இந்தியாவிற்கே முன்மாதிரியாக இருந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிற காரணத்தால் நமக்கு இந்த நாடாளுமன்றத் தொகுதிகளை மககள் தொகை அடிப்படையில் கணக்கிடாமல் அதிகப்படுத்த வேண்டும். அது மட்டுமல்லாமல் தேசிய நலன் கருதி இந்தக் குடும்ப நலத் திட்டத்தை நல்லமுறையில் கடைப்பிடிக்காத மாநிலத்தினுடைய நாடாளுமன்றத் தொகுதிகளைக் குறைக்க நடவடிக்கை எடுத்தால்கூட நன்றாக இருக்கும். மத்திய அரசு அப்படித்தான் செய்ய வேண்டும். நல்லமுறையில் நாம் இந்திய அரசுக்கு ஒத்துழைப்புக் கொடுத்து திட்டங்களைச் செயல்படுத்துவதால் நமக்குக் குறைப்பதென்பது நன்றாக இருக்காது. லட்சத்தீவில் 25,000 பேர் இருக்கிறார்கள். அதற்கும் ஒரு எம்.பி. சீட்டு. அதேபோல திரிபுரா, மேகாலயா, அருணாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் 80,000 பேருக்கு ஒரு எம்.பி. இருக்கிறார். பிரதமரைத் தேர்ந்தெடுப்பதற்கு நமது எம்.பி.-க்கும் ஒரு ஓட்டுதான். 80,000 மக்கள் வாழ்கிற அந்த எம்.பி. தொகுதிக்கும் ஒரு ஓட்டுதான். தமிழ்நாட்டில் 10 இலட்சம் பிரதிநிதிகள் உள்ள நாடாளுமன்றத் தொகுதிக்கும் ஒரு ஓட்டுதான். ஒரே ஓட்டாகத்தான் பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம்.

முற்பகல் 9-45

தமிழ்நாட்டில், எம்.பி. தொகுதிகளை திரிபுராவைப் போல நாம் அதிகப்படுத்த வேண்டும். உத்தரப்பிரதேசத்திலே 85 எம்.பி. தொகுதிகள் உள்ளன. உத்தரப்பிரதேசத்தில் அதிகமான எம்.பி. தொகுதிகளில் ஜெயித்த கட்சிதான், இந்தியாவில் ஆளுங்கட்சியாக வருகிறது. இந்தப் பெருமை எல்லா மாநிலங்களுக்கும் கிடைக்கவேண்டும். ஆகவே, எம்.பி. தொகுதிகளை நாம் அதிகப்படுத்த வேண்டிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். வேட்டி, சேலை கட்டியவர்கள்தான் நாடாள வேண்டும் என்ற அந்த அடிப்படை வேலையை நாம் செய்யவேண்டும். இதுவரை செய்யவில்லை. ஆகவே, எம்.பி. தொகுதிகளை அதிகமாக்கி நாடாளுமன்றம் போகமுடியும்; (சிரிப்பு) என்ன, சேலையையும் சேர்த்துக் கொண்டேன் என்று கேட்கிறீர்களா? உங்கள் கோஷம் வேட்டி; எங்கள் கோஷம் சேலை. (பலத்த சிரிப்பு) பிரதமரைத் தேர்ந்தெடுக்க முக்கிய பங்கு பெறமுடியும். ஜனாதிபதி தேர்தலில் மக்கள் தொகைக்கேற்ப எம்.பி.-க்கள் ஓட்டுகள் கணக்கெடுக்கப்படுகின்றன. அதேமாதிரி, பிரதமர் தேர்தலிலும் கணக்கிட தமிழ்நாடு வற்புறுத்த வேண்டும்.



1999 பிப்ரவரி 22] [திரு. இரா. தாமரைக்கனி]

காஷ்மீர், திரிபுரா, அஸ்ஸாம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் தீவிரவாதிகளின் கொடுமை அதிகமாக உள்ளது. அதனால் நாடாளுமன்றத் தேர்தலிலும், சட்டமன்றத் தேர்தலிலும் நிற்பதற்கு வேட்பாளர்கள் பயப்படுகிறார்கள், தீவிரவாதிகள் கொன்றுபோட்டு விடுவார்களோ என்று. ஆகவே, அரசுக்கு ஆதரவாக உள்ள கட்சிதான் அங்கே போட்டி போட்டு ஜெயித்து, மத்தியிலே ஆளும் பிரதமரை நிர்ணயிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையெல்லாம் இருக்கிறது. அந்த நிலையைத் தமிழ்நாட்டிலேயும் சில தீவிரவாதிகள் உருவாக்க முயற்சிக்கிறார்கள். அதை அரசு உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். அது மட்டுமல்ல; நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு 33% என்று வருகிறது. அதேபோல், சட்டமன்றத்திலேயும், தமிழ்நாட்டிற்கு அந்த எண்ணிக்கையைக் கூட்டுகிற அளவுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு, இந்தத் தீர்மானத்தை ஆதரித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1976-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 42-வது சட்டத்திருத்தத்தின்படி, 2000-க்குப் பிறகும்கூட, எக்காரணத்தைக் கொண்டும் தற்போதுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மாறாமல் இருக்க நாம் போராடக்கூடிய ஒரு காலகட்டம் இருக்கிறது. நமது மாநிலம் இந்திய தேசிய நீரோட்டப் பிரச்சினையான குடும்பக் கட்டுப்பாட்டை, மிகவும் ஆர்வமாக, அக்கறையாகச் செய்லபடுத்தியது. மக்கள் தொகைப்

பெருக்கத்தைக் குறைத்ததற்கு ஓர் உன்னதமான பரிசா இந்தத் தொகுதிக் குறைப்பு? குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொண்டதற்காக இப்படிப்பட்ட தொகுதிக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சையை, மத்திய அரசு, தமிழ்நாட்டில் திணிப்பது தேவைதானா? தீவிரக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஏராளமான பிள்ளைச் செல்வங்களை நாம் இழந்திருக்கிறோம். இருக்கும் நாடாளுமன்றத் தொகுதிகளையும் நாம் இழக்காமல் இருக்க வேண்டும். வருங்கால சந்ததிகள் வசைபாடாத அளவுக்குத் தமிழ்நாட்டில் நாடாளுமன்றத் தொகுதிகள் கூடுதலாக இருந்தால், டெல்லிக்குத்தானே நல்லது? தொங்கும் நாடாளுமன்றத்தை மாறிமாறித் தூக்கி நிறுத்த, தமிழ்நாடுதானே சரியான, தகுதியான ஒரு மாநிலம். இதையெல்லாம் கவனத்தில் வைத்து, மத்திய அரசு உணரும் விதத்தில் நமது முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இந்தத் தீர்மானத்தை எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக உளமார ஆதரித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

*முற்பகல் 9-50*

*** திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 20-ஆம் தேதி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டப்பேரவையில் கொண்டுவந்த தீர்மானத்தை, மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் பிரகாரம், நாடாளுமன்றத் தொகுதிகள் தமிழகத்திற்குக் குறைகின்ற வாய்ப்பைத் தடுக்கும் பொருட்டு, அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை, அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் இயக்கத்தின் சார்பில் நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இதையெல்லாம் கருத்தில்கொண்டுதான், நமது முன்னாள் மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் ஒரு திருமண விழாவில்கூட, குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்வதை ஆதரிக்காத நிலையிலே தமிழ் மக்கள் நிறைய குழந்தைகளைப் பெறுவதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை என்று பேசியிருப்பாரோ எனக் கருதுகிறேன். நமது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் எந்த இடத்திற்குச் சென்றாலும் அதை மிக வலியுறுத்திப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள் என்கின்றபோது முதலமைச்சர் அவர்கள் கூட தமிழகத்திலே நலத் திட்டங்களைத் திறமையாகச் செயல்படுத்துகின்ற காரணத்தால் மக்கள் தொகையைக் குறைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு பேசிக் கொண்டிருக்கின்ற





நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய திட்டத்தைத்தான் நான் ஆதரிக்கிறேன் என்று கூறினார்கள். அந்தத் தொலைநோக்குப் பார்வை, இந்தியாவினுடைய முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு எல்லா நலத் திட்டங்களையும் சீராகச் செயல்படுத்துகின்ற ஒரு நிலை இருக்கின்ற காரணத்தினால் தமிழகத்திலே இந்தக் குடும்ப நலத் திட்டம் சிறப்பாகச் செயல்பட்டு மக்கள் தொகை குறைந்திருப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினருடைய எண்ணிக்கை குறைகின்ற ஒரு பரிசை நாம் பெற்றுவிடக்கூடாது என்பதால் மிகக் கவனமாக இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மற்ற உறுப்பினர்கள் சொன்னதைப்போல இந்த மத்திய அரசின் நலத் திட்டத்தைச் சீராகச் செயல்படுத்துவதற்கு நமது உறுப்பினர் எண்ணிக்கையைக் குறைப்பதைக் காட்டிலும், அதற்கு வெகுமானமாக இந்தத் திட்டத்தை ஊக்குவிப்பது போல மேலும் இரண்டொரு நாடாளுமன்றத் தொகுதிகளை – நமக்கு தமிழகத்திற்கு அதிகப்படுத்தித் தரவேண்டும் என்று சொல்வதோடு இந்த 50 ஆண்டு என்பதை மாற்றி, முழுமையாக, ஆண்டுக் கணக்கே இல்லாத அளவிற்குச் செய்ய வேண்டும். பெரியார் நீர்ப்பாசனத் திட்டத்திற்குக் கூட 999 ஆண்டுகள் நிர்ணயித்து 100 ஆண்டுகள் நிறைவு பெறுவதற்குள்ளாக அந்தத் திட்டங்களை எல்லாம் மாற்றுகிற ஒரு இக்கட்டான நிலை எல்லாம் இப்போது வந்திருக்கிறது. ஆகவே, ஆண்டு என்பது குறிப்பிடப்படாமல் தமிழகத்திற்கு இருக்கின்ற நாடாளுமன்றத் தொகுதிகளைக் குறைக்கக்கூடாது. அதிகப்படுத்த வேண்டுமாய் கேட்கவேண்டும் என்று தெரிவித்து இந்தத் தீர்மானத்தை வலியுறுத்தி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசமைப்புச் சட்டம் விதி 81க்கு 1976 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட 42 ஆவது சட்டத்திருத்தத்தின் மூலம் 2000-க்குப் பிறகு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு வெளியிடப்படுகிற வரை அந்தந்த மாநிலங்களிலே உள்ள தொகுதிகள் அப்படியே இருக்கும் என்பதற்கு வழி செய்யப்பட்டிருக்கிறது. 2000-க்குப் பிறகு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நிலவரம் வெளியிடுகிறபோது மக்கள் தொகையின் அடிப்படையிலே இடங்கள் ஒதுக்கப்படுகிறபோது, தமிழ்நாட்டிலே மிகச் சிறப்பாக குடும்ப நலத் திட்டத்தை அமல்படுத்திய காரணத்தினாலே நாடாளுமன்றத் தொகுதிகளினுடைய எண்ணிக்கை இப்போது 39 ஆக இருப்பது 6 ஆகக் குறைந்து 33 ஆக குறைகின்ற அபாயகரமான

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1999 பிப்ரவரி 22

சூழ்நிலை இருப்பதை மனதிலே கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னெச்சரிக்கை உணர்வோடு இந்தத் தீர்மானத்தை அரசின் சார்பிலே கொண்டு வந்திருப்பதை நான் எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. சார்பிலே வரவேற்கிறேன்.

கிராமப்புறங்களிலே கூட படித்தவர்கள் படிக்காதவர்கள், ஏழை பணக்காரன் வித்தியாசம் இல்லாமல் குடும்பக் கட்டுப்பாட்டை அமல்படுத்த வேண்டுமென்கின்ற உணர்வு எல்லா மக்கள் மத்தியிலேயும் ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம், குடும்பங்கள் பெருகுவதால் ஏற்படுகிற சிரமங்களை மக்கள் உணர்ந்து இருக்கிறார்கள் என்பது ஒன்று. இரண்டாவது அரசின் சார்பிலே தரப்படும் விளம்பரங்கள் மக்களுடைய கவனத்தைச் சென்றடைந்திருக்கின்றன என்பது இன்னொரு காரணம். குடும்பம் அளவாக இருந்தால்தான் வளமாக இருக்கும் என்ற நோக்கத்துடன் குடும்பத்தைக் கட்டுப்படுத்துகிற அந்த உணர்வு இப்போது சாதாரண மக்களிடத்திலே கூட ஏற்பட்டிருக்கிறது. அதில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டும் வகையிலே முன்னோடியாக இருக்கிறது. குடும்பக் கட்டுப்பாட்டை அமல்படுத்துவது என்பது தமிழ்நாட்டில் சிறந்தோங்கி இருக்கிறது. அதற்கு தண்டனை தருகின்ற விதத்திலே இங்கே இருக்கின்ற நாடாளுமன்றத் தொகுதிகளுடைய எண்ணிக்கை இந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பிற்குப் பின்னாலே குறைக்கப்படுகிற அபாயம் இருக்கிறது. எனவே வருங்காலத்திலே போட்டிபோட்டுக் கொண்டு மக்கள் தொகையைக் குறைக்கும் முயற்சிக்குப் பதிலாக, போட்டி போட்டுக்கொண்டு மக்கள் தொகையைப் பெருக்குகிற முயற்சியில் ஈடுபட வேண்டும் என்கின்ற உணர்வு எல்லா மாநிலங்களுக்கும் நிச்சயமாக ஏற்பட இது வழிசெய்யும்.

நாடு சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகளிலே எவ்வளவோ வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது. அவ்வளவு வளர்ச்சியையும் மக்கள்தொகைப் பெருக்கம் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறது. மக்கள்தொகைப் பெருக்கம் என்பது நிச்சயமாகக் கட்டுப்படுத்தப்பட வேண்டிய ஒன்று. அப்படிக் கட்டுப் படுத்தப்பட்டால்தான் இந்திய நாடு வருங்காலத்திலே உருப்பட முடியும்; வளர முடியும். மற்ற நாடுகளோடு போட்டிபோடக் கூடிய அளவிற்கு வளர்ந்தோங்க முடியும்; இதை மனதிலே கொண்டு, மத்திய அரசு, இந்த அரசின் தீர்மானத்திற்கு நிச்சயமாக ஆக்கபூர்வமான வடிவம் தருகிற விதத்திலே, அரசமைப்புச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து, இப்போது என்னென்ன தொகுதிகள், எவ்வளவு எண்ணிக்கை



1999 பிப்ரவரி 22] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

இருக்கிறதோ, அந்த 39 இடங்களும்—தமிழ்நாட்டிலே என்றால், தமிழ்நாட்டிற்கு மட்டும் நாம் கேட்கவில்லை, இந்தத் தனித் தீர்மானம் மூலமாக இந்திய நாடு முழுவதற்கும் கேட்கிறோம். எந்தெந்த மாநிலத்திலே, எந்தெந்த அளவு நாடாளுமன்றத் தொகுதிகளுடைய எண்ணிக்கை இருக்கிறதோ, அது—அப்படியே இருக்க வேண்டும்; இன்னும் 50 ஆண்டுகள் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

முற்பகல் 9-55

இந்த அரசின் தீர்மானம் தி.மு.க. அரசாலே கொண்டு வரப்பட்டது என்ற அளவிலே இல்லாமல் அநேகமாக தாமரைக்கனியும் இங்கே ஆதரிக்கின்ற காரணத்தினாலே — இது நிச்சயமாக அவருடைய சொந்தக் கருத்தாக இருக்காது, கட்சியினுடைய கருத்தாகத்தான் இருக்கும். எனவே, எல்லோரும் சேர்ந்து— ஏகமனதாக நிறைவேற்றுகிற இந்தத் தீர்மானத்திற்கு வெளியே இருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர்களும், நம்முடைய 39 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சி வித்தியாசம் இல்லாமல், அது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, பா.ஜ.க.வாக இருந்தாலும் சரி, எல்லாக் கட்சிகளும் சேர்ந்து தனித் தீர்மானத்தை நாடாளுமன்றத்திலே ஒட்டுமொத்தமாகக் கொண்டு வந்து, அரசமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கு, அந்த 39 நாடாளுமன்ற உறுப்பினர்களும், இங்கே மட்டும் அல்ல, அந்த 39 பேர் சேருவது மட்டுமல்ல, மற்ற மாநிலங்களிலும் lobby செய்து, எல்லோரையும் சேர்த்து, அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை நாடாளுமன்றத்திலே கொண்டு வந்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் இந்தச் சட்டமன்றத்தின் மூலமாக நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்களையும் வேண்டுகிறோம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்து, தமிழக அரசின் சார்பிலே மட்டுமல்ல, இங்கே இருக்கிற எல்லா அரசியல் கட்சிகளின் சார்பிலேயும் தமிழ்நாட்டு மக்களின் சார்பிலேயும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை முழு மனதோடு வரவேற்று, அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை மத்திய அரசு கண்டிப்பாகச் செய்ய வேண்டும், இல்லையென்றால், இதுபோல குடும்ப நலத் திட்டத்திலே அக்கறை செலுத்துகிற மக்களை, மாநில அரசுகளைத் தண்டிக்கிற வகையிலே அமைந்துவிடும் என்பதைச் சுட்டிக்காட்டி அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

* **திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 ஆம் தேதி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே முழு மனதாக ஆதரிப்பதோடு, தமிழ்நாட்டிலே குடும்பக் கட்டுப்பாட்டைக் கறாராக அமல்படுத்தியதன் விளைவாக நமக்கு ஏற்படுகிற ஒரு தண்டனை என்று இதை நான் கருதுகிறேன். அந்த அடிப்படையிலே, அடுத்த எத்தனை ஆண்டுகளானாலும் சரி, நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 39 பேரிலே எந்தக் குறைப்பும் ஏற்படாத வகையில் ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து, அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாடு அமைதியாக, சுபிட்சமாக வாழ வேண்டுமென்றால், அண்டை நாட்டோடு நல்லுறவு இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் பாரதப் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பேயி அவர்களுடைய பயணமும், பாகிஸ்தான் பிரதமருடைய பாரத நாட்டுப் பயணமும் உலகிற்கு ஓர் உதாரணமாக அமைய வேண்டுமென்று, தமிழக மக்களின் சார்பில் வாழ்த்தி, நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறைப்பு சம்பந்தமான தீர்மானத்தை பாரதிய ஜனதா கட்சி மட்டற்ற மகிழ்ச்சியோடு மனப்பூர்வமாக வரவேற்கிறது. (குறுக்கீடுகள்) குறைக்கக்கூடாது என்ற தீர்மானத்தை, நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தைப் பாரதிய ஜனதா கட்சி மனமுவந்து வரவேற்கிறது.

*முற்பகல் 10-00*

பாரத நாட்டு மக்கள் சிறப்பாக வாழ வேண்டும் என்று சொன்னால் அடிப்படையில் ஜனத் தொகைப் பெருக்கம் நம்முடைய நாட்டிற்கு எந்த அளவிற்கு ஆபத்தாக அமையும் என்பதைத் தொலைநோக்குப் பார்வையில் உணர்ந்து தமிழக அரசு, தமிழ்நாட்டு மக்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைக் கடைப்பிடித்து, பாரத நாட்டினுடைய செழிப்புக்கு உழைத்ததற்கு ஒரு தண்டனையாக அது மாறிவிட்டது என்று சொன்னால், மற்ற மாநிலங்கள் தமிழகத்தினுடய தண்டனையை மனதில் கொண்டு, குடும்பக் கட்டுப்பாட்டில் ஆர்வம் காட்டாமல், குடும்பம் வளர்வதற்கு, அதாவது ஜனத்தொகை பெருகுவதற்கு ஊக்கம் அளித்துவிட்டார்கள் என்று சொன்னால், வருங்காலத்தில் உலக





அரங்கில் பாரத நாட்டினுடைய நிலைமை கேள்விக்குரியதாகி விடும். எனவே, பாரத நாட்டினுடைய வருங்காலத்தைக் கணக்கில் கொண்டு தமிழகத்திற்கான, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையை ஜனத்தொகை குறைவு என்ற காரணத்தைக் காட்டி குறைக்கக் கூடிய திட்டத்தை, எக்காரணத்தைக் கொண்டும் பாரத அரசு எடுக்கக் கூடாது என்பது மட்டுமல்ல. அதை எப்படிக் கணக்கிடலாம் என்று சொல்லி—நம்முடைய அரசின் மூலமாக ஒரு கோரிக்கை வைக்க முடியுமா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1947 ஆம் ஆண்டு பாரத நாட்டில் பொதுவாக ஜனத்தொகை கணக்கில் தமிழகத்தினுடைய ஜனத்தொகை எந்த அளவிற்கு இருந்தது: அதேபோன்று பாரதநாட்டில் அதிகமான ஜனத்தொகை உள்ள மாநிலம் எது என்று சொன்னால் மத்தியப் பிரதேசம். அந்த மாநிலத்தில் 1947 ஆம் ஆண்டு குறிப்பிட்ட பகுதியில் எந்த அளவிற்கு ஜனத்தொகை இருந்தது, அந்த இரண்டையும் கணக்கிட்டு, தமிழகத்தில எந்த அளவிற்குக் குடும்பக் கட்டுப்பாட்டை அமலபடுத்தி நாட்டு நலனுக்கு இந்தத் தமிழக மக்கள் ஒத்துழைத்து இருக்கின்றார்கள்; அதன் அடிப்படையில் எத்தனை சதவிகிதம் ஜனத்தொகை குறைத்திருக்கின்றது என்பதையும் கணக்கிட்டு. முதலில் 1947-ல் மத்தியப் பிரதேசத்தில் குறிப்பிட்ட இடத்தைக் கணக்கிட்டு, அந்த ஜனத்தொகை அடிப்படையில், இப்போது எந்த அளவிற்கு ஜனத்தொகை கூடியிருக்கின்றதோ, அதையும் கணக்கிட்டு, அதே அளவு நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தமிழகத்திற்கும் கொடுக்க வேண்டும். அப்படியானால்தான் இந்த அரசு குடும்பக் கட்டுப்பாட்டிற்கு ஒத்துழைத்ததற்கு மத்திய அரசு பரிசு அளிக்கின்றது என்பது அர்த்தமாகும். ஜனநாயக அடிப்படையில் வாக்காளர்களை அடிப்படையாகக் கொண்டுதான் நாடாளுமன்றம் அமைக்கப்படுகின்றது என்பது உண்மையாக இருந்தால், அதுபோன்ற வாக்காளர் அடிப்படையில் நாடாளுமன்றத்தை அமைத்துவிட்டு, அதற்கு அடுத்தாற்போல அதிகமாக எத்தனை நாடாளுமன்ற உறுப்பினர்கள் வருகின்றார்கள் அந்தக் கணக்கின்படி என்பதைக் கணக்கிட்டு, தமிழகத்தில் பொதுத் தேர்தலில் ஒவ்வொரு அரசியல் கட்சியும் எந்த அளவிற்கு வாக்குகளைப் பெறுகின்றதோ, அந்த அடிப்படையில் மீதியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை அந்தந்த கட்சிகளே நியமன உறுப்பினர்களாக வைத்துக்கொள்ளலாம் என்ற அந்த சிபாரிசை மத்திய அரசுக்குக் கொடுத்தால், இது ஒரு முன்னுதாரணமாக அமையக்

கூடிய வாய்ப்பு ஏற்படும் என்று கருதி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இந்தத் தீர்மானத்தை மனப்பூர்வமாக வரவேற்று அமைகிறேன். பாரத் மாதா கி ஜெய்!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**Thiru B. Venkatasamy:** Hon. Speaker Sir, in support of the resolution moved by our Hon.Chief Minister regarding Article 81 of the Constitution of India as amended by the Constitution (Forty-second Amendment) Act, 1976, I support this resolution on behalf of the Janata Dal.

At present, we are having 39 MP seats according to the Constitutional set-up and it is said that by the year 2000 we will be losing 6 MP seats because of the effective implementation of the Family Planning Programme. My view is that some incentive should be given for good work. Tamil Nadu has effectively implemented the Family Planning Programme. Is it the incentive that the Government of India are giving to Tamil Nadu for the effective implementation of family planning? I want to suggest one thing in this regard. I request the Government of India to create one additional MP seat as an incentive if we are able to reduce the population by 10 lakhs. I want to suggest one modification in the resolution. The sentence "The number of seats in the Lok Sabha allotted to every State shall remain unchanged for another fifty years" occurring in the resolution is not at all necessary. I wholeheartedly support the resolution moved by the Hon. Chief Minister. Thank you.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 20 ஆம் தேதியன்று தமிழக முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை, புதிய தமிழகத்தின் சார்பாக நான் மனதார வரவேற்கிறேன்.

மக்கட்தொகையின் அடிப்படையில் 2000-ல் தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய 39 நாடாளுமன்ற தொகுதிகளில் 6 குறைக்கப்படும் என்ற நிலை நிச்சயமாக இருக்கக் கூடாது. இப்போது இருக்கக் கூடிய 39 தொகுதிகளே நீடிக்கப்பட வேண்டும். மேலும் மக்கட்தொகையைக் கட்டுப்படுத்த தமிழ்நாடு அரசு எடுத்த நடவடிக்கைக்குத் தண்டனையாக இந்தச் செயல் இருக்கக் கூடாது என்பதுதான் புதிய தமிழகத்தினுடைய





முற்பகல் 10-05

கருத்து. இந்த அவையிலே முன்கூட்டியே மத்திய அரசை எச்சரிக்கக் கூடிய வகையிலே கொண்டுவரப்படக் கூடிய தீர்மானத்தை நான் முழு மனதோடு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல நீண்ட நெடு நாட்களாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு Separate Electorates—தனி வாக்காளர் தொகுதி என்று கேட்கப்பட்டு வருகிறது. அண்ணல் அம்பேத்கர் அவர்களால் அது நீண்ட நாள் வாதாடப் பெற்று, போராடப்பெற்று 1930-லே அன்றைய பிரிட்டிஷ் பிரதமர் மெக்டோனால்ட் அவர்களால் கொடுக்கப்பட்டது. ஆனால் எரவாடா சிறையில் காந்தி அவர்கள் இருந்த உண்ணாவிரதத்தின் காரணமாக அது பறிக்கப்பட்டது. இதே அவையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனி வாக்காளர் தொகுதியும் கொடுக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தையும் பிறிதொரு சந்தர்ப்பத்திலே இந்த விவாதத்தைத் தீர்மானமாக அனுப்பி இந்திய நாட்டிற்கே வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்பதும் புதிய தமிழகத்தினுடைய கருத்து. நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 ஆம் தேதி அன்று இந்த மாமன்றத்திலே முன்மொழிந்த தீர்மானத்தையொட்டி எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் அவையில் உள்ள கட்சிகளின் தலைவர்களும் ஆதரவு வழங்கி தங்களுடைய கருத்துகளையும் இணைத்திருக்கின்றார்கள். அவர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நம்முடைய மாநிலம் இந்தியாவில் குடும்பக் கட்டுப்பாடு—அதாவது குடும்ப நலத் திட்டத்தை நிறைவேற்றுவதில் மற்ற மாநிலங்களைவிட முந்திக்கொண்டும், முன்னணியிலும் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சுட்டிக்காட்டி இருக்கின்றார்கள். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் உரையாற்றிய தலைவர்களும், இந்தத் திட்டத்திற்காகத் தமிழகத்திலே பெருமளவிற்குப் பிரச்சாரம் நடைபெற்றிருக்கிறது; திட்ட அளவிலே மாத்திரம் அல்லாமல் பிரச்சார அளவிலும் இந்த மாநிலத்திலே குடும்ப நலத் திட்டத்திலே நாம் வெற்றி பெற்றிருக்கிறோம் என்பதையும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இதற்குக் காரணம் என்று முக்கியமாக ஒன்றைச் சொல்ல வேண்டுமேயானால் தமிழ்நாட்டில் நடைபெறுகின்ற திருமண விழாக்களில் நூற்றுக்கு அறுபது அல்லது எழுபதுக்கு மேற்பட்ட விழாக்கள் சீர்திருத்த முறையிலே நடைபெறுகின்ற திருமண விழாக்கள்.

[கலைஞர் மு. கருணாநிதி] [1999 பிப்ரவரி 22

தந்தை பெரியார் அவர்களால் தொடங்கப்பட்டு, அறிஞர் அண்ணா மற்றும் சமூக சீர்திருத்தக் காவலர்களால் தொடரப்பட்டு, இப்போது பெருமளவிற்கு நடைபெறுகின்ற திருமண விழாக்களில் உரையாற்றுகின்ற ஒரு நிகழ்வு இருப்பதனால் உரையாற்றுகின்றவர்கள் தங்களுடைய கருத்தாக குடும்ப நலத் திட்டத்தைப் பற்றியும் வெகுவாக எடுத்துக் கூறுகின்ற வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல குடும்ப நலத் திட்டத்திற்கு எதிர்ப்பாகச் சில கருத்துகள் தி.மு.கவைச் சேர்ந்தவர்களாலேயே அண்மைக் காலத்திலே பேசப்பட்டதற்குக் காரணமே இதை நாம் தீவிரமாகக் கடைபிடிப்பதால் நம்முடைய நாடாளுமன்றத் தொகுதிகள் குறைகின்றன என்கின்ற ஆதங்கத்தால்தானே தவிர திட்டத்தின் மீது உள்ள கோபத்தால் அல்ல என்பதை அனைவரும் மிக நன்றாக உணர்வார்கள். இந்தக் குடும்ப நலத் திட்டத்தை அரசின் திட்டமாக அறிவிப்பதற்கு முன்பேகூட புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள், தான் யாத்த ஓர் அழகான கவிதையிலே குறிப்பிடுகின்றார்—

"காதலுக்கு வழிவைத்து கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம் இதிலென்ன குற்றம்?"

என்று. இப்படி வழிவழியாக சுய மரியாதை இயக்கத்தின் சார்பாக, திராவிட இயக்கத்தின் சார்பாக இந்தக் குடும்ப நலத் திட்டப் பிரச்சாரம் ஒரு சமூக சீர்திருத்த கொள்கையாகவே தமிழகத்திலே வேரூன்றியதும் இந்தத் திட்டம் தமிழகத்திலே மற்ற மாநிலங்களைவிட நல்ல அளவிலே பரவியிருப்பதற்கு ஒரு காரணம் ஆகும். ஆனால், அதற்குப் பரிசாக நாம் இன்றைக்குப் பெற இருப்பது ஆறு இடங்கள் குறைவு என்பதை எண்ணும்போதுதான் வருத்தமாக இருக்கிறது; வேதனையாக இருக்கிறது. உடனடியாக மத்திய அரசுக்கு இதை எடுத்துச் சொல்லி நம்முடைய உணர்வுகளைச் சுட்டிக்காட்டி இந்தத் திருத்தத்தை அரசமைப்புச் சட்டத்திலே உடனடியாகக் கொண்டுவர வேண்டும் என்று கூறவேண்டியிருக்கிறது.

முற்பகல் 10-10

இந்தத் தீர்மானத்தைக் குறித்து சில விளக்கங்களை இந்த அவைக்கு நான் தர விரும்புகிறேன். இந்திய அரசமைப்புச் சட்டம் பிரிவு 82-ன்படி ஒவ்வொரு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முடிந்த பின்பும்



1999 பிப்ரவரி 22] [கலைஞர் மு. கருணாநிதி]

ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்பட வேண்டிய மக்களவைத் தொகுதிகள் மற்றும் அதன் எல்லைகள் குறித்து சட்டவிதிகளின்படி நாடாளுமன்றம் முடிவு எடுக்க வேண்டும். இதன்படி ஒவ்வொரு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முடிந்த பின்னரும் மக்களவை மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் எல்லைகள் மற்றும் எண்ணிக்கையை வரையறுக்க எல்லை வரையறைச் சட்டம் -- Delimitation Act -- இயற்றப்படும். அச்சட்டத்தின்படி அமைக்கப்படும் தொகுதி வரையறை ஆணையத்தின் -- Delimitation Commission -- பரிந்துரைகளின்படி இந்திய அரசு நாடாளுமன்றத்தில் சட்டமுன்வடிவைக் கொண்டுவரும். மக்களவை மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் தற்போதைய எல்லைகளின் வரையறை மற்றும் எண்ணிக்கைகள், 1972 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட எல்லை வரையறைச் சட்டத்தின்படி 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் வகுக்கப்பட்டுள்ளன. இதற்குரிய சட்டமுன்வடிவு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு இந்திய தேர்தல் ஆணையத்தால் 1976 ஆம் ஆண்டு, தொகுதி வரையறை ஆணை -- Delimitation Order-- வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆணையின்படி, தற்போது தமிழகத்திற்கு 39 மக்களவைத் தொகுதிகளும் 234 சட்டமன்றத் தொகுதிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. 39 மக்களவைத் தொகுதிகளில் ஆதிதிராவிடர்களுக்கு 7 தனித் தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

1975 ஆம் ஆண்டு அமைககப்பட்ட எல்லை வரையறை ஆணையம் --Delimitation Commission -- ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்பட வேண்டிய தொகுதிகளின் எண்ணிக்கையை மக்கள் தொகையின் அடிப்படையில் பின்வருமாறு வகுத்துள்ளது. 15 மாநிலங்களின் மொத்த மக்கள் தொகை 1971 ஆம் ஆண்டு கணக்கின்படி 52 கோடியே 90 இலட்சத்து 42 ஆயிரத்து 59. இந்தக் கணக்கெடுப்பின்படி ஜம்மு-காஷ்மீர் இமாசலப் பிரதேசம், மணிப்பூர், திரிபுரா, மேகாலயா மற்றும் நாகாலாந்து தவிர நாடாளுமன்றத் தொகுதிகளின் மொத்த எண்ணிக்கை 545. இவை தவிர, யூனியன் பிரதேசங்களுக்குள்ள தொகுதிகள் 20 போக மீதமுள்ள தொகுதிகள் 525. ஐந்து மில்லியனுக்கும் குறைவாக மக்கள் தொகை உள்ள மாநிலங்களான ஜம்மு-காஷ்மீர், இமாசலப் பிரதேசம், மணிப்பூர், திரிபுரா, மேகாலயா, நாகாலாந்து இவை அன்னியில் ஒரு தனித் தொகுதி. அது ஏன் தனித் தொகுதி வந்தது என்பதைப் பிறகு சொல்கிறேன். ஒரு தனித் தொகுதி. இப்படி ஒதுக்கப்பட்ட தொகுதிகள் மொத்தம் 18. 525-ல் அந்த 18-ஐயும் கழித்தால் 507, மிச்சப்படுகிறது. மக்களவைத் தொகுதிகள் 507.

ஒவ்வொரு தொகுதிக்கும் கணக்கெடுக்கப்படும் சராசரி மக்கள் தொகை 52 கோடியை 507 ஆல் வகுத்தால் ஒரு தொகுதிக்கு நம்முடைய தாமரைக்கனி அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல 10,43,475 பேர். 1971 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் மக்கள் தொகை 4 கோடியே 11 இலட்சத்து 99 ஆயிரத்து 168. இந்த அடிப்படையில் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகள், 4 கோடியே 11 இலட்சத்து சொச்சத்தை 10,43,475 ஆல் வகுத்துப் பார்த்தால் 39.48. அல்லது 39. இந்த 48.50 ஆக ஆகாத காரணத்தால் நமக்கு 39 இடங்கள் கிடைத்தன. ஏன் இது 50 ஆகவில்லை என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அந்த ஒரு தொகுதியைப் பற்றிச் சொன்னேனே, ஒரு தனித் தொகுதி, அதைக் கழித்துவிட்டார்கள். 508 ஆக இருந்திருந்தால் நமக்கு அப்போதே 39.48-க்குப் பதிலாக 39.50 வந்திருக்கும். 40 இடங்கள் கிடைத்திருக்கும். 1957 மற்றும் 1962-ல் நடந்த பொதுத் தேர்தலின்போது தமிழகத்தில் 41 மக்களவைத் தொகுதிகள் இருந்தன. 1967 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது, இவை 39 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 1962 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட எல்லை வரையறை ஆணையம் 1961 ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் மேற்கண்ட முறையில் மக்களவைத் தொகுதிகளை ஒதுக்கி, 1966-ல் ஆணை வெளியிட்டபோது தமிழகம் 2 மக்களவைத் தொகுதிகளை இழக்க நேர்ந்தது.

1974 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 16 ஆம் தேதியன்று இதே அவையில் கழக அரசின் சார்பில் ஒரு தீர்மானம், நாடாளுமன்ற மக்களவையில் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கையையும் தமிழ்நாடு சட்டப்பேரவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை உயர்த்துவது குறித்து ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தில் நாடாளுமன்ற மக்களவையில் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்படும் நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர்களுடைய எண்ணிக்கையை 40 ஆகவும் மக்களவை இடம் ஒவ்வொன்றுக்கும் தற்போதுள்ள 6 சட்டமன்றத் தொகுதி இடங்களை 7 சட்டமன்றத் தொகுதி இடங்களாக உயர்த்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டோம். இது தீர்மானம் மாத்திரம் அல்ல, அதற்குப்பிறகு ஒருமுறை பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சென்னைக்கு வந்தபோது, குழந்தைகளுக்காக நடத்தப்பெற்ற ஒரு விழாவில் -- அன்றைக்கு நான் முதலமைச்சர், அப்போது பெருந்தலைவர் காமராஜர் அவர்களும் அந்த விழாவிலே கலந்துகொண்டார்கள். அவர்களே புரவலராக இருந்து நடத்துகின்ற ஒரு பள்ளியினுடைய விழா அது. அப்போது காமராஜர் அவர்களே --



பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடத்திலே சட்டமன்றத் தொகுதிகள் 6 என்பதை 7-ஆக ஆக்க வேண்டும் என்று கேட்டார்கள். அம்மையார் அவர்களும் பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். ஆனால், அது பரிசீலிக்கப்படவேயில்லை.

முற்பகல் 10-15

இந்திய மக்கள் தொகையை மொத்த மக்களவைத் தொகுதிகளான 507-ஆல் வகுத்தபோது 39.48 என்று வந்ததால், அது 39.50-க்குக் குறைவு என்று காரணம் காட்டப்பட்டு 39 இடங்களே நாடாளுமன்றத்திலே ஒதுக்கப்பட்டன. 507 என்ற எண்ணிக்கையால் வகுப்பதற்கு மாறாக தனித் தொகுதிக்காக ஒரு மக்களைவைத் தொகுதியைக் குறைத்துக் கொண்டதற்கு மாறாக அதையும் சேர்த்து 508 என்று கணக்கிட்டு அந்த மொத்த மக்கள் தொகையினால் வகுத்தால் 39.56 என்று விடை வந்திருக்கும். அந்த வகையில் அது 39.50 என்பதற்கு அதிகம் என்ற வகையில் நமக்கு 40 இடங்கள் அப்போதே கிடைத்திருக்கும்.

1974 ஆம் ஆண்டு நாம் 40 இடங்கள் கேட்டபோது தமிழ்நாட்டின் மக்கள் தொகை 4 கோடியே 11 இலட்சத்து 99 ஆயிரத்து 168. தற்போது 1991 ஆம் ஆண்டு கணக்கின்படி தமிழ்நாட்டின் மக்கள் தொகை 5 கோடியே 56 இலட்சத்து 38 ஆயிரத்து 318. அப்படியானால் அதிக இடம் வரவேண்டுமே என்ற கேள்வி எழலாம். இயலாது என்பதற்கான விளக்கத்தையும் தர விரும்புகிறேன்.

1971-1981 மற்றும் 1981-1991 ஆண்டுகளுக்குரிய சில மாநிலங்களினுடைய மக்கள் தொகை வளர்ச்சி, மக்கள் தொகையினுடைய பெருக்கம் என்று பார்த்தால் இராஜஸ்தான் மாநிலத்திலே 1971-81-ல் அந்த ஆண்டுகளில் மக்கள் தொகை பெருக்க விகிதம் 2.87 சதவிகிதமாக இருந்தது. 1981-91-ல் 2.47 சதவிகிதம் என்ற அளவிற்கு உள்ளது. மத்திய பிரதேசத்தில் 1971-81-ல் 2.27 சதவிகிதமாக இருந்த உயர்வு 1981-91-ல் 2.37 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால் 1971-81-ல், மக்கள் தொகைப் பெருக்கம் 1.63 என்றிருந்தது, 1981-91-ல் 1.39 சதவிகிதம் என்ற அளவிற்குக் குறைந்துள்ளது. இதன்படி தமிழகத்திலே ஆண்டு மக்கள் தொகைப் பெருக்க விகிதம் மற்ற மாநிலங்களைவிட குறைவாகவே உள்ளது. மற்ற தென் மாநிலங்களும் இதைப் போலவே பாதிக்கப்படக்கூடும். இது குறித்து 28-8-1997 அன்று திருவனந்தபுரத்தில் நடைபெற்ற தென் மாநிலங்களின் 22-வது மண்டலக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. ஆந்திர அரசு, குடும்ப நலத் திட்டத்தைச் செவ்வனே

நடைமுறைப்படுத்தும் தென் மாநிலங்கள் இதனால் பாதிக்கப்படக் கூடாது என்ற கருத்தை அந்த மாநாட்டில் தெரிவித்தது.

இந்திய அரசு, 1981 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் மக்களவை மற்றும் சட்டமன்றத் தொகுதிகளைத் திருத்தியமைக்க இந்திய அரசமைப்பு (71-வது திருத்தம்) சட்டமுன்வடிவு, 1990-ஐ நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியது. 1971 ஆம் ஆண்டைய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில், தொகுதிகளின் எண்ணிக்கையில் எந்தவித மாற்றமும் இல்லாமல் தொகுதிகளின் எல்லைகளை மட்டும் மாற்றியமைக்க வகை செய்த இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றும்போது, மாநிலங்களவை 1981 ஆம் ஆண்டைய மக்கள் தொகைக் கணக்கெடுப்பிற்குப் பதிலாக. 1991-ஆம் ஆண்டைய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தொகுதிகள் ஒதுக்கப்பட வேண்டும் என அந்தச் சட்டமுன்வடிவில் திருத்தம் கொண்டு வந்தது. மக்களவை, அந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றாமல், ஆய்வுக் குழுவிற்கு (Select Committee-க்கு) அனுப்பியது. இந்தக் குழுவின் பரிந்துரையை ஏற்று, இந்திய அரசு, இந்திய அரசமைப்பு (83-வது திருத்தம்) சட்டமுன்வடிவை 1994-ல் மக்களவையில் அறிமுகப்படுத்தியது. ஆனால், இந்தச் சட்டமுன்வடிவு காலாவதியானது.

1991-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தற்பொழுது ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையில் மாற்றம் ஏதும் செய்யப்படாமல் தொகுதிகளின் எல்லைகளை மாத்திரம் வரையறுக்கலாம் என்று இந்திய அரசு முனைந்து, 1996-ல் நாடாளுமன்றத்தில் இந்திய அரசமைப்பு (80-வது திருத்தம்) சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்தியது. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதால் இச்சட்டமுன்வடிவும் காலாவதியானது.

இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 82 மற்றும் 170-ன்படி, மக்களவைத் தொகுதிகள் மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் எல்லை மற்றும் எண்ணிக்கைகளில், வருகிற 2000 ஆண்டிற்குப் பிறகு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நிலவரம் வெளியிடப்படும்வரை எவ்வித மாற்றமும் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 81-க்கு, இதற்குரிய 42-வது சட்டத் திருத்தம் 1976-ல் கொண்டு வரப்பட்டுள்ளது.

வருகிற 2000 ஆண்டிற்குப் பிறகு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்போது தமிழகத்தில் ஆண்டு மக்கள் தொகைப் பெருக்க





விகிதம் குறைகின்ற காரணத்தால், தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையில் 6 வரை குறைய வாய்ப்புள்ளது. எனவே, இது குறித்து, உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, 2001-ன் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் மக்களவை மற்றும் சட்டமன்றத் தொகுதிகளின் எல்லை வரையறை நிர்ணயிக்க ஒரு புதிய எல்லை வரையறை ஆணையம் அமைக்கப்பட்டால் தமிழகத்திற்கு 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஒதுக்கப்பட்ட 39 மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையில் குறைவு ஏற்படாமல் எல்லைகள் மட்டும் மறு வரையறை செய்யப்படலாம் எனத் தமிழக அரசு ஏற்கெனவே மத்திய உள்துறை அமைச்சருக்கு 2-6-1998 அன்று கடிதம் எழுதியுள்ளது. மத்திய உள்துறை அமைச்சரவர்களும் இது குறித்து கவனிப்பதாகத் தனது 8-6-1998 ஆம் நாளிட்ட கடிதத்தில் எனக்கு பதில் அனுப்பியுள்ளார்.

முற்பகல் 10-20

மேற்கூறிய கருத்துகளை வலியுறுத்தி, தமிழகத்திற்குத் தற்போது ஒதுக்கப்பட்டுள்ள மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையில் மேலும் எந்தவித மாற்றமும் செய்யப்படாமல் இருக்க வேண்டுமென்றும், இதற்குரிய தேவையான அரசமைப்புச் சட்டத் திருத்தம் மக்களவையிலே கொண்டுவரப்பட வேண்டுமென்றும் பாரதப் பிரதமர், மத்திய உள் துறை அமைச்சர் மற்றும் இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஆகியோருக்கு 15-2-1999 அன்று கடிதமும் அனுப்பப்பட்டிருக்கிறது. அவற்றையொட்டித்தான் இப்போது இந்தத் தீர்மானமும் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இந்தத் தீர்மானத்தில் 50 ஆண்டுகள் என்று இருப்பதை மாற்றிவிட வேண்டும்; அந்தக் காலக்கெடு தேவையில்லை என்று நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் திரு. பழனிசாமி அவர்களும், அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சி சார்பில் திரு. சந்தானம் அவர்களும் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். இவற்றையெல்லாம் மனத்திலே வைத்து சில திருத்தங்களோடு மீண்டும் இத்தீர்மானத்தை உங்களுடைய அன்பான ஆதரவுக்காக முன் வைக்க விரும்புகிறேன்.

"இந்திய அரசமைப்புச் சட்டம் பிரிவு 81-க்கு 1976 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட நாற்பத்தி இரண்டாவது சட்டத் திருத்தம் மற்றும் பிரிவு 82 ஆகியவற்றின்படி வருகிற 2000 ஆண்டிற்குப் பிறகு

[கலைஞர் மு. கருணாநிதி] [1999 பிப்ரவரி 22

மக்கட்தொகைக் கணக்கெடுப்பின் நிலவரம் வெளியிடப்படும்வரை, ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை மாற்றப்படாமல் இருக்கப்பட வேண்டும்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த குடும்ப நலத் திட்டத்தைச் செவ்வனே நடைமுறைப்படுத்தும் மாநிலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களுடைய எண்ணிக்கை மக்களவையில் குறைக்கப்படாமல் இருக்க இந்தச் சட்டத் திருத்தம் உறுதி செய்கிறது.

வருகிற 2000 ஆண்டிற்குப் பிறகு மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்போது, தமிழகத்தில் ஆண்டு மக்கட்தொகைப் பெருக்க விகிதம் குறைகின்ற காரணத்தால், உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனில், மக்களவையில் தமிழகத்தின் பிரதிநிதித்துவம் 6 தொகுதிகள் வரை குறைக்கப்படலாம் என அச்சம் ஏற்படுகிறது. காலப்போக்கில் தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் மற்ற மாநிலங்களிலும் குடும்ப நலத் திட்டம் அமல்படுத்தப்படுவதை இது பெருமளவில் பாதிக்கும்.

எனவே, மக்களவைத் தொகுதிகளில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் தற்போது ஒதுக்கப்பட்டுள்ள தொகுதிகளின் எண்ணிக்கையிலே மாற்றம் ஏதும் செய்யபபடாமல் இருப்பதற்கு ஏதுவாக தேவையான அரசமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என இந்திய அரசைக் கேட்டுக்கொள்ளலாம் என்று இந்தப் பேரவை தீர்மானிக்கிறது."

என்ற திருத்தத் தீர்மானத்தை உங்கள் முன்னால் வைக்கிறேன். இதை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருத்தத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இலலை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை.

திருத்தம் ஒருமனதாக ஏற்கப்பட்டது.



1999 பிப்ரவரி 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் திருத்தப்பட்டவாறு ஒருமனதாக நிறைவேறியது.

## 4. ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானத்தின்மீது விவாதம் – தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் இன்று முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட வேண்டும். திரு. வெங்கடசாமி.

**Thiru B. Venkatasamy:** Hon. Speaker, Sir, I move the following amendment to the Motion of Thanks for the Governor's Address:—

"Add at the end, the following:

'but regret to note that no mention is made about:

1. Steps taken to secure the protection of Linguistic Minorities serving and living in other States.

2. Steps taken to wean away young girls and boys in educational institutions from alcoholic addiction.

3. Steps taken by the Government to create Legislative Council in the State of Tamil Nadu'."

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** நான் அதை வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

[1999 பிப்ரவரி 22

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. செம்பூத்தாம்பாளையத்திலிருந்து சேவாக்கவுண்டனூர் வழியாக வைரமங்கலம் வரை உள்ள சாலையையும், குட்டிபாளையத்திலிருந்து நெசவாளர் காலனி வழியாக கவுந்தப்பாடி - பவானி தார் சாலையையும் கிராம நெடுஞ்சாலைத்துறை சாலையில் சேர்ப்பது குறித்தும்;

2. பவானி அரசு மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கையை 48 ஆக உயர்த்துவது குறித்தும் கூடுதலாக கட்டடங்கள் கட்ட வேண்டியது குறித்தும்;

3. அம்மாபேட்டை ஒன்றியத்தைச் சார்ந்த குறிச்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்தும்;

4. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நிதி ஒதுக்கியும், இன்னும் 'மஞ்சள் வளாகத்திற்கு' இடம் தேர்வு செய்ய மேற்கொண்ட நடவடிக்கை குறித்தும்;

5. விவசாயிகளின் நன்மை கருதி அம்மாபேட்டை ஒன்றியம் சித்தாற்றின் குறுக்கே நான்கு தடுப்பு அணைகள் (Check-Dams) அமைப்பது குறித்தும்;

6. பவானி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் காலனிகளில் கூடுதலாக இடம் ஒதுக்குவது குறித்தும்;

7. சிறந்த சுற்றுலா ஸ்தலமான பவானி நகரை சுற்றுலாத்துறை மூலம் மேம்படுத்துவது குறித்தும்;

8. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு ஏக்கர் அடிப்படையில் தீர்வை விதிப்பது குறித்தும்;

9. பவானி சட்டமன்றத் தொகுதியில் உள்ள கலங்கபாளையம், ஆப்பக்கூடல், ஜம்பை, ஒலகடம், கவுந்தப்பாடி பேரூராட்சிகளில் உள்ள சாலைகள் செப்பனிடுவது குறித்தும்;

10. பவானி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட சிற்றூராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும், ஊராட்சிகளிலும் பாதுகாக்கப்பட்ட ஆற்று நீர் திட்டம் செயல்படுத்துவது குறித்தும்;



11. பவானி தொகுதியில் பழுதடைந்த, தாழ்த்தப்பட்ட மக்களின் கூரை வீடுகளையும், கான்கிரீட் வீடுகளையும் செப்பனிடுவது குறித்தும்;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"1. வேலூரில் நடப்பாண்டில் அரசு மருத்துவக்கல்லூரி துவங்குவது குறித்தும்;

2. வேலூரில் பாதாள சாக்கடைத் திட்டம் துவங்குவது குறித்தும்;

3. காவிரியாற்று நீரை ஒகேனக்கல்லில் இருந்து வேலூருக்குக் கொண்டு வரும் திட்டம் குறித்தும்;

4. வேலூர் நகரில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் குறித்தும்;

5. வேலூரில் பல்கலைக்கழகம் ஒன்று துவங்கும் திட்டம் குறித்தும்;

6. வேலூர் சத்துவாச்சாரியில் நீதிமன்ற வளாகத்தில் 'A' Block கட்டும் திட்டம் குறித்தும்;

7. வேலூர் அடுத்த அரியூர் கூட்டுறவு நூற்பாலையை அரசு திறக்கும் திட்டம் குறித்தும்;

-ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்ததக்கது."

**திரு. ச. அழகிரி:** திரு. ஞானசேகரன் அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்.

"1. மக்கட் தொகையில் கணிசமாக உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபின மக்களுடைய மேம்பாட்டுக்காக, குறிப்பாகப் பொருளாதார வளர்ச்சித் திட்டம் குறித்தும்;

2. கள்ளச் சாராயத்தால் பல தடவை தமிழ்நாட்டில் விஷச்சாராயச் சாவுகள் நிகழ்வதால் மதுவிலக்குப் பிரச்சினையில் மாற்றங்கள் செய்வது குறித்தும்;

3. விவசாயிகளின் கரும்புக்கு டன்னுக்கு ரூ.1000 விலை நிர்ணயம் செய்வது குறித்தும்;

-ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

**திரு. பி. வெங்கடசாமி:** நான் அதை வழிமொழிகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம் தொடருகின்றது. திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு)

## 3. தகவல் கோரல்

### பேரவை ஒத்திவைக்கப்படுகையில் பேசிய உறுப்பினர் மறுநாள் தொடர்ந்து பேசுதல்

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் நான் இந்த விவாதத்தில் பேசிக்கொண்டு இருந்தபோது, அவையின் அலுவல் நேரம் முடிய இருந்ததால், அப்போது பேரவைக்குத் தலைமையேற்றிருந்த துணை சபாநாயகர் அவர்கள் விவாதம் தொடரும் என்றுதான் கூறியிருக்கிறார்கள். ஆகவே இன்றும் நான் பேச அனுமதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். நீங்கள் என் அறையில் வந்து சொன்னீர்கள். துணை சபாநாயகர் 'தொடரும்' என்ற வார்த்தையைச் சொல்லி



இருக்கிறார்களா என்று நான் குறிப்பேட்டைப் பார்த்தேன். அப்படி, அவர் 'தொடரும்' என்று சொல்லவில்லை. இரண்டாவது, 2 நிமிடம்தான் உங்களுக்குப் பேச அனுமதி கிடைத்தது என்று சொன்னீர்கள். நான் குறிப்பேட்டைப் பார்த்தேன். நீங்கள் 1-20-க்குப் பேச ஆரம்பித்திருக்கிறீர்கள். வேண்டுமானால் நீங்கள் பேரவை நூலகத்திற்குப் போய் குறிப்பேட்டைப் பாருங்கள். 1.20-க்கு நீங்கள் பேச ஆரம்பித்திருந்தால் அதைப் பார்த்துவிட்டு வந்து சொல்லுங்கள். 2 நிமிடம்தான் நீங்கள் பேசியது இருக்கிறது என்றால் நீங்கள் பார்த்துவிட்டு வந்து சொன்னால், உங்களுக்கு அனுமதி கொடுக்கிறேன். இப்போது அனுமதி இல்லை. திரு. ஞானசேகரன். (குறுக்கீடு) 1-20-க்குப் பேச ஆரம்பித்திருக்கிறீர்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** 1.20-க்குப் பேச ஆரம்பித்தேன். நான் பேச ஆரம்பித்தவுடனே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டார்கள். அவர்கள் 3 நிமிடம் எடுத்துக்கொண்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேச ஆரம்பித்ததும் அவர்கள் 3 நிமிடம் குறுக்கிட்டார்கள் என்பதெல்லாம் கிடையாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நீங்களே பாருங்கள். பிறகு முதலமைச்சர் அவர்கள் குறுக்கிட்டார்கள். அந்தக் குறிப்பேட்டைப் பாருங்கள். எனக்கு முன்பு பேசியவர்கள் எல்லாம் அதிக நேரம் பேசியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தக் குறுக்கீடு எல்லாம் இருந்தாலும்கூட நீங்கள் பேசியது 2 நிமிடமாக இருக்காது. உங்களுக்கு அனுமதித்த நேரம் முடிந்துவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் தவறான தகவலை என்னுடைய அறையில் வந்து கொடுத்தீர்கள். நீங்கள் பேசியது 2 நிமிடம்தான் என்று சொன்னீர்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தயவுசெய்து குறிப்பேட்டைப் பாருங்கள். அதிலே எனக்கு முன்னால் யார் யார் பேசினார்கள் என்ற பட்டியலைப் பாருங்கள். அவர்களுக்கு எவ்வளவு நேரம் கொடுத்தீர்கள் என்பதையும் பாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையெல்லாம் நான் பார்த்துவிட்டேன். டாக்டர் கிருஷ்ணசாமி தனக்கு 7 நிமிடம்தான் கொடுத்தார்கள் என்று கூட சொன்னார். உங்களுக்கு 10 நிமிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது குறுக்கீட்டைச் சேர்த்து. குறுக்கீடு இல்லாவிட்டால் 7 நிமிடம்தான். உட்காருங்கள்.

[1999 பிப்ரவரி 22

**திரு. பி.ஆர். சுந்தரம்:** குறுக்கீடு இருந்தது. நாளை விவாதம் தொடரும் என்றுதான் துணை சபாநாயகர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே இப்போது என்னைப் பேச அனுமதியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இன்றைக்கு அனுமதிக்க முடியாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அரசாங்கத்தை ஆதரிக்கிறவர்களுக்கு அதிக நேரம் கொடுக்கிறீர்கள். நாங்கள் 3 பேர்தான் இருக்கிறோம். எதிர்த்துப் பேச நாங்கள்தான் இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. நானாகப் பார்த்துத்தான் உங்களுக்கு அனுமதி கொடுக்கவேண்டும். (குறுக்கீடு) ஏன் 2 பேரும் எழுந்து நிற்கிறீர்கள்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தயவுசெய்து நான் சொல்வதை ஒரு நிமிடம் கேளுங்கள். திருநாவுக்கரசு எவ்வளவு நேரம் பேசியிருக்கிறார் என்பதை அவைக் குறிப்பை எடுத்துப் பாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தேவையில்லாமல் அதையெல்லாம் பேசக்கூடாது. அது என்னுடைய விருப்பம். (குறுக்கீடு) நான் அப்படித்தான் நடந்துகொள்கிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் உட்காருங்கள், நான் உங்களுக்கு அனுமதி கொடுக்க முடியாது. (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். இதற்கு மேலும் நின்றுகொண்டிருந்தால் உங்களை வெளியேற்றவேண்டிவரும். நிச்சயமாக வெளியேற்றுவேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** என்னுடைய உரிமை பறிக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம். பறிக்கப்படுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) ஆமாம், உட்காருங்கள். உங்களை அனுமதிக்கமுடியாது. (குறுக்கீடு) தாமரைக்கனி, நீங்கள் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? நான் அனுமதிக்க முடியாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** அன்றைக்கு முதல்வர் அவர்களும் 'தொடரும்' என்றுதான் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதல்வர் எனக்கு உத்தரவிட முடியாது. நீங்கள் உட்காருங்கள்.



1999 பிப்ரவரி 22]

**திரு. இரா. தாமரைக்கனி:** துணை சபாநாயகர் அவர்களும் 'தொடரும்' என்றுதான் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் 'தொடரும்' என்று சொல்ல வில்லை. நீங்கள் குறிப்பேட்டைப் பாருங்கள் (குறுக்கீடு) கருப்பசாமி, ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? நீங்கள் மூன்று பேரும் சேர்ந்து எழுந்து நிற்க வேண்டுமென்று வந்திருக்கிறீர்களா? மூன்று பேரும் உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** என்னைப் பேச அனுமதியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்ன பேசப்போகிறீர்கள்?

**திரு. இரா. தாமரைக்கனி:** Mike கொடுத்தால்தானே பேசமுடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் Mike இல்லாமலேயே நன்றாகப் பேசுவீர்கள், பேசுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சனிக்கிழமையன்று எங்கள் உறுப்பினர் சுந்தரம் பேசினார். குறுக்கீடுகள் இருந்தன. அப்போது 5 நிமிடம், 10 நிமிடம் நீடிக்கிற மாதிரி இருந்தது. மின்சாரத் துறை அமைச்சர், திங்கட்கிழமை வைத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். முதலமைச்சர் அவர்களும் சபையை ஒன்றரை மணிக்கு முடிக்கலாம் என்று சொன்னார்கள். பிறகு துணை சபாநாயகர் அவர்கள் சபையை ஒத்திவைத்தார்கள். ஆகவே இப்போது அவர் பேச 5 நிமிடம் கொடுங்கள். இப்போது 5 நிமிடம் waste ஆகிவிட்டது. ஆகவே 5 நிமிடம் கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொஞ்சம் உட்காருங்கள், நான் சொல்கிறேன். அதாவது எந்த உறுப்பினராக இருந்தாலும், அனுமதி கேட்பதற்கு சில முறைகள் இருக்கின்றன. உங்கள் கட்சி உறுப்பினர் என்னுடைய அறைக்கு வந்து, நான் இரண்டு நிமிடம்தான் பேசியிருக்கிறேன், நீங்கள் அனுமதி கொடுக்கிறீர்களா இல்லையா என்று சவால் விட்டார். நான் பேரவைத் தலைவர். என்னுடைய மரியாதையைக் காப்பாற்றிக்கொண்டு இங்கே பதவியில் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இறங்கிப் போய்விடவேண்டும். இன்றைக்கு நிச்சயமாக அவரைப் பேச அனுமதிக்க முடியாது. இதற்குமேல் நீங்கள் பேசாதீர்கள். (குறுக்கீடு) இல்லை. நான் சொன்னது சொன்னதுதான். (குறுக்கீடு) அதைத்தான் நான் சொன்னேன். நூலகத்திற்குப் போய் அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டு வாருங்கள். 1.20-க்கு அவர் பேச

[பேரவைத் தலைவர்] [1999 பிப்ரவரி 22

அனுமதிக்கப்பட்டார். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மேலும் கொடுக்க முடியாது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

*முற்பகல் 10-30*

*** மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தினுடைய நடைமுறை, சபாநாயகரால்—தலைவரால் முழு அளவு கட்டுப்படுத்தப்பட்டதாகும். உறுப்பினருடைய பேச்சு நேரம் என்பது சபாநாயகருடைய விருப்பத்தின் அடிப்படையிலேதான் அமைகிறதே தவிர, உறுப்பினருடைய தனி உரிமையாக என்றைக்கும் ஏற்கப்பட்டதில்லை. நான் நீண்டநாள் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், 7 நிமிடம், 10 நிமிடம் பேசுவதற்கு அனுமதித்த சபாநாயகர்கள் மேலும் ஒரு நிமிடம் பேசுவதற்குக்கூட அனுமதிக்காமல், சபையினுடைய கட்டுப்பாட்டிற்காக வலியுறுத்தி அந்த நேரத்தைக் கட்டுப்படுத்தியதை நான் பல முறை பட்டறிவால் அறிந்திருக்கிறேன். எனவே, இன்றைக்குக்கூட, சபாநாயகருடைய உரிமையாக இருப்பதை, உறுப்பினருடைய உரிமையாகக் கருதி வாதம் செய்வது என்பது சரியல்ல. சபாநாயகரே விரும்பி ஏதாவது நேரம் வழங்கி இருந்தால் அவர் விருப்பத்தின் அடிப்படையிலே மட்டும்தான் கோரிக்கை வைக்கமுடியும். சபாநாயகர் ஏற்கவில்லை என்று, சட்டமன்றத்தினுடைய நடைமுறையை ஒழுங்குபடுத்துவதற்காகச் சொல்லப்பட்ட விதியை மீறி வலியுறுத்துவது நியாயமல்ல என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒலிபெருக்கி கொடுக்கச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்கு ஒலிபெருக்கி கொடுக்க முடியாது, உட்காருங்கள். திரு. சி. ஞானசேகரன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** சபாநாயகர் விருப்பு வெறுப்போடு ஆளுங்கட்சிக்கு ஒரு மாதிரியாகவும், எதிர்க்கட்சிக்கு ஒரு மாதிரியாகவும் வாய்ப்புக் கொடுத்து, பாரபட்சமான முறையில் செயல்படுவதை எதிர்த்து, எதிர்ப்புத் தெரிவித்து, வெளிநடப்புச் செய்கிறேன்.

*(திரு. பி.ஆர். சுந்தரம் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.)*



1999 பிப்ரவரி 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தில் பங்கு கொள்கின்ற வாய்ப்பை நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் இதே சட்டமன்றத்தில் கடந்த கால ஆட்சியின்போது பேசியது நினைவிற்கு வருகிறது. . . .

*(திரு. சொ. கருப்பசாமி நின்று கொண்டே இருந்தார்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருப்பசாமி, இப்போது நீங்கள் உட்காரவில்லையென்றால்—அவர் வெளிநடப்புச் செய்து சென்று விட்டார்—நான் உங்களை வெளியேற்றுவேன். (குறுக்கீடு) உங்களுக்கு ஒன்றும் அதிகாரம் கிடையாது, உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு வானளாவிய அதிகாரம் இருக்கிறது என்று எல்லோருக்கும் தெரியும். எங்கள் கட்சி உறுப்பினர் அன்று ஏழு நிமிடங்கள் பேசியிருக்கிறார். இன்று பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிலாம். இப்போதே ஐந்து நிமிடங்கள் வீணாகப் போய்விட்டன. தாயுள்ளம் கொண்ட நீங்கள், உங்களுடைய வானளாவிய அதிகாரத்தைப் பயன்படுத்தி அவருக்குப் பேச வாய்ப்புக் கொடுத்திருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அடிக்கடி தாயுள்ளம் என்பதை வலியுறுத்திக் கொண்டிருக்கிறீர்கள். (சிரிப்பு).

**திரு. இரா. தாமரைக்கனி:** தாய் மீனாட்சியைத்தான் உங்களுக்கு ரொம்பவும் பிடிக்குமே, அதனாலே சொன்னேன். (சிரிப்பு) எனவே, நீங்கள் மீண்டும் அவருக்கு ஐந்து நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். முறையாகக் கேட்டிருந்தால், நான் துணைத் தலைவரைக் கேட்டு, அவருக்கு வாய்ப்புக் கொடுத்திருப்பேன். முதலில் நீங்கள் உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** எங்களுடைய பேச்சுரிமையைப் பறித்ததால் நாங்கள் கட்சி அளவில் வெளிநடப்புச் செய்கிறோம்.

*(திரு. இரா. தாமரைக்கனி, திரு. சொ. கருப்பசாமி ஆகியோர் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

## 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது விவாதம்--தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடைபெறுகின்ற இந்த விவாதத்திலே கலந்துகொண்டு பேசுகின்ற வாய்ப்பை நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

நான் கடந்தகால ஆட்சியின்போது இதே சட்டமன்றத்திற்குள் பேசிய பேச்சுகள் நினைவிற்கு வருகின்றன. "'நிதிக்கும் நீதிக்கும்' எல்லா அத்தியாயங்களிலும் கடும் போர் நடந்து, கடைசியில் நிதியே வென்றது, நீதி தோற்றது என்கிற அளவில் அவலக் குரல்கள் ஆங்காங்கே எழுகின்றன" என்று அப்போது நான் பேசினேன். அதற்குச் சில பேர் அப்போது எதிர்ப்பும் தெரிவித்தார்கள். ஆனால், இன்று, நான் சொன்னதுபோல, நிதி வென்றது, நீதி தோற்றது என்பதைக் கொஞ்சம் மாற்றிக் கொள்ளக்கூடிய அளவில், நம்முடைய தனி நீதிமன்றத்தினுடைய நீதிபதிகள் எதற்கும் அஞ்சாமல்-எங்களுடைய மாவட்டத்தில் Chief Judicial Magistrate-ஆகப் பணியாற்றிய திரு. சம்பந்தம், திரு. இராதாகிருஷ்ணன் போன்றவர்கள் முன்னால் நான் பலமுறை ஆஜராகி இருக்கின்றேன். நெருப்புப் போன்று இருப்பார்கள், யாரையும் அணுகவிட மாட்டார்கள்—மிகச் சிறப்பாகத் தீர்ப்புகளையெல்லாம் வழங்கிக் கொண்டு, நீதிமன்றத்தை நடத்திக் கொண்டிருக்கின்ற வேளையில், கடந்தகால ஆட்சியில் பல கோடி ரூபாய் ஊழல்களைச் செய்தவர்களைக் கண்டித்து, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர் 46 வழக்குகளைப் பதிவு செய்து இருக்கிறார்கள். அந்த 46 வழக்குகளும் regular Court-களிலே விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படுமேயானால் ஒருவேளை 10 ஆண்டுகள் அல்லது 15 ஆண்டுகள் கூட முடிந்துபோய்விடும். மூன்று சட்டமன்றங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு முடிந்தும் விடும். அப்படிப்பட்ட கொடுமையான ஒரு நடைமுறை தமிழகத்திலே இருக்கக்கூடாது.



*10-35*

எப்போதுமே நீதி என்பது விரைவாக வழங்கப்பட வேண்டும் என்பதற்காக, ஊழல் தடுப்புச் சட்டம் பிரிவு 3, உட்பிரிவு 2-ன்படி ஏற்கெனவே இந்த அரசு வேண்டுகோள் வைத்ததற்கிணங்க நம்முடைய தமிழகத்தினுடைய உயர்நீதிமன்றம் தனி நீதிமன்றத்தை அதற்காக நிர்மாணித்து, அதற்காக தனி நீதிபதிகளையும் நியமித்து விசாரணைகள் மிகச் சிறப்பான முறையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய வேளையில், எப்போதுமே குற்றம் புரிந்தவருடைய நெஞ்சம்தான் குறுகுறுக்கும் என்று சொல்வார்கள். மடியில் கனம் இருப்பவர்கள்தான் பயப்படுவார்கள் என்று சொல்வார்கள், உண்மையிலே குற்றம் செய்யவில்லை என்று சொன்னால், இந்த நீதிமன்றம் உண்மையாக விசாரித்து அதே தனி நீதிபதிகள், முன்னாள் முதலமைச்சரையும் அவருடைய படையைச் சார்ந்த அமைச்சர்களையும் நிச்சயமாக விடுதலை செய்யட்டும். ஆனால், உண்மையிலே குற்றம் இழைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் தண்டிக்கப்படட்டும். ஆனால், அதையெல்லாம் முறியடிக்கின்ற முகத்தான், இவர்களுடைய ஆதரவு பெற்று இன்று கோலோச்சிக் கொண்டிருக்கக்கூடிய பாரதிய ஜனதா அரசும், அங்கே இருக்கக்கூடிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்களும் அதற்கு உடந்தையாக இப்போது நம்முடைய பாரதப் பிரதமரும், நீதித் துறையிலே தலையிட்டு இன்று அவர்கள் அதற்காக ஒரு Notification-ஐ கொடுத்து, நீதித் தேவதையையே *அவலப்படுத்தி இருக்கிறார்கள், இது நிச்சயமாக வன்மையாக கண்டிக்கப்படக்கூடிய ஒன்று என்பதை தமிழ் மாநிலக் காங்கிரஸ் சார்பாகச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட ஒரு கொடுமை நடந்திருக்கிறது. எப்போதுமே கிராமத்திலே ஒரு பழமொழியைச் சொல்வார்கள், 'செய்கிற வேலையை விட்டு விட்டு, சினையாட்டிற்குத் தீனி போடுகிறான்' என்று. உண்மையிலே இங்கே நல்லாட்சி நடத்துவோம் என்று சொல்லி ஆட்சிப் பீடத்திற்கு வந்தவர்கள், நிலையான ஆட்சியை தருவோம் என்று சொன்னவர்கள், விலைவாசியை நாங்கள் ஏற்றமாட்டோம், விலைவாசியை கட்டுப்படுத்துவோம் என்று ஆட்சிக்கு வந்தவர்கள், இப்போது ஏழையெளிய மக்களுடைய வயிற்றில் அடித்திருக்கிறார்கள். ரேஷன் அரிசியினுடைய விலையையும், ரேஷன் பொருள்களான சர்க்கரை, கோதுமை, கெரசின், அதேபோல சமையல் வாயு போன்றவற்றினுடைய விலைகளை எல்லாம் உயர்த்தியதோடு

* மாண்புமிகு உறுப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க மாற்றப்பெற்றது.

மட்டுமல்லாமல் 'உழவனுக்கு உழவுகோல்கூட மிஞ்சாது' என்று சொல்வார்கள், அந்த விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய உரத்தினுடைய விலையையும் ஏற்றி, ஏழையெளிய மக்களுடைய வயிற்றில் அடித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தாங்கள் உரையாற்றுகின்றபோது நீதி தேவதையையே *அவலப்படுத்தி இருக்கிறார்கள் என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினீர்கள். அது இந்த அவையின் மரபுக்கு உகந்ததல்ல. ஆகவே, அதை நீங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** நீதி தேவதையையே அவலப்படுத்தி இருக்கிறார்கள் என்று மாற்றிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பாரதப் பிரதமர், இப்போது இருக்கக்கூடிய மத்திய அமைச்சரவையும் கூடி ஏழை மக்கள் பயன்படுத்தக்கூடிய ரேஷன் அரிசி போன்ற அத்தியாவசியப் பண்டங்களின் விலைகளையெல்லாம் உயர்த்தியிருக்கிறது. அந்த வேலையைச் செய்யாமல், விலையை ஏற்றாமல் இவர்கள் ஆட்சி செய்வதற்குப் பதிலாக, நீதித் துறை எப்போதுமே ஒரு நீதிமன்றத்தில் இருக்கக்கூடிய வழக்குகளை மாற்றக்கூடிய அதிகாரம் இங்கிருக்கக்கூடிய ஆட்சியாளர்களுக்கு எப்போதுமே கிடையாது. நீதிமன்றத்திற்குச் செல்லக்கூடிய வழக்கறிஞர்களையும், சட்ட நிபுணர்களையும் கேட்டால் நிச்சயமாகச் சொல்வார்கள், ஒரு நீதிமன்றத்தில் இருக்கக்கூடிய வழக்கை அதற்கு மேலே இருக்கக்கூடிய ஒரு நீதிபதி, அதாவது ஒரு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் இருக்கக்கூடிய வழக்கை மாற்ற வேண்டுமென்று சொன்னால், Chief Judicial Magistrate அல்லது Sessions Judge மாற்றலாம், அல்லது ஒரு Sessions Judge Court-ல் இருக்கக்கூடிய வழக்கை இன்னொரு Sessions Court-ற்கு உயர்நீதிமன்றம் மாற்றலாம் அல்லது ஒரு உயர்நீதிமன்றத்திலே இருக்கக்கூடிய வழக்கை இன்னொரு உயர்நீதிமன்றத்திற்கு Supreme Court-ல் மாற்றலாம், ஆனால் அதையெல்லாம் செய்யாமல், ஊழல் தடுப்புச் சட்டம் பிரிவு 3(2)-ன் படி அமைக்கப்பட்டிருக்கிற சட்டப்படி இன்று உருவாக்கப்பட்டிருக்கின்ற நீதிமன்றத்தைக் கலைக்க வேண்டுமென்று குரல் கொடுத்து, அது முடியாது போன காரணத்தினாலே, உயர்நீதிமன்றத்தினுடைய நீதிபதி பத்மநாபன் அவர்களே ஒரு தீர்ப்பிலே சொல்லியிருக்கிறார்கள், 'இப்படி அடிக்கடி வாய்தா வாங்கக்கூடிய இவர்கள், இந்த வழக்கை இழுத்தடித்து,

* மாண்புமிகு உறுப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க மாற்றப்பெற்றது.



இழுத்தடித்து ஒன்றுமே இல்லாமல் செய்திட வேண்டுமென்று முயன்று கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி வழக்கை ஒன்றுமேயில்லாமல் செய்திட வேண்டுமென்று எத்தனித்துக் கொண்டிருக்கிற கூட்டத்திற்கு நான் சொல்லவேண்டியது என்னவென்றால், ''நீங்கள் மடியிலே கனத்தை வைத்துக்கொண்டிருக்கிறீர்கள், குற்றம் செய்திருக்கிறீர்கள், பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாயைக் கொள்ளை அடித்திருக்கிறீர்கள், ஆகவே, உங்களுக்கு நிச்சயமாகத் தண்டனை வழங்கப்படும். அந்தத் தண்டனையை நீங்கள் ஏற்றுக்கொண்டுதான் தீரவேண்டும். நான் ஏற்கெனவே சொன்னதுபோல, நிதிக்கும், நீதிக்கும் நடக்கும் கடும் போர். அதிலே இந்த முறை நிதி வெல்ல வேண்டும் என்று நிச்சயமாக இந்த இடத்திலே சொல்லக்கடமைப்பட்டிருக்கிறேன். நிதி என்று சொன்னால் முன்னாள் முதல்வா சேர்த்து வைத்திருக்கிற நிதி அல்ல. இந்த 'கருணைநிதி' வெல்ல வேண்டும். நீதி என்ற களத்திலே, உங்களுக்கு இருக்கக்கூடிய இந்த சட்டப் போரிலே நீங்கள் வெல்ல வேண்டுமென்று நான் வாழ்த்துகிறேன். இந்தப் போராட்டத்தில் நீங்கள் கொஞ்சம் விழிப்போடு செயல்பட வேண்டும். என்னுடைய மக்கள் தலைவர் அவர்கள்கூடச் சொல்லியிருக்கிறார்கள்.

10-40

நம்முடைய சட்டத்துறை கொஞ்சம் உறங்காமல் இருக்க வேண்டும், நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் சட்ட நிபுணர்களை அணுகி, மிக விழிப்போடு இருந்து விரைவில் தீர்ப்பைப் பெற்றுத் தருவதற்கு கொஞ்சம் கடுமையாக முயற்சி எடுத்து, உங்களால் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு விரைவாகத் தீர்ப்பைப் பெற்றுத்தாருங்கள், எங்களுடைய வேலூர் சிறைச்சாலை பல பேருக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த அவையிலே நாடாளுமன்ற தொகுதிக் குறைப்பு பற்றி நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட எல்லா கட்சிக்காரர்களும், அதை இங்கே வரவேற்று இருக்கிறார்கள். அதுபோல, ஏழை எளியவர்களுடைய வயிற்றில் அடித்திருக்கக்கூடிய ரேஷன் அரிசி, கோதுமை, சர்க்கரை ஆகியவற்றின் விலைகளையும், அதுபோல உரம், கெரசின் போன்றவற்றின் விலைகளையெல்லாம் ஏற்றியிருக்கக்கூடிய மத்திய அரசைக் கண்டித்து, ஒரு கண்டனத் தீர்மானத்தை, தமிழக முதல்வர் அவர்கள்

கொண்டுவரவேண்டும். மாநில முதலமைச்சர்களைக் கலந்து கொள்ளாமல், இப்படித் திடீரென்று--விலையை கட்டுப்படுத்துவோம் என்று சொன்னவர்கள்--ஏற்றியிருப்பதற்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், கண்டனத் தீர்மானம் ஒன்றை இந்த அவையின் சார்பாக இயற்றி, மத்திய அரசுக்கு உடனடியாக அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, இங்கே முக்கியமான பிரச்சினைகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது, மணியடித்துவிட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் தொகுதிப் பிரச்சினை குறித்துப் பேசவேண்டியிருக்கிறது. தொகுதி சம்பந்தமாக முதலிலே முடித்துவிட்டு, பிறகு மற்ற பிரச்சினைக்கு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது. சீக்கிரம் தொகுதிப் பிரச்சினை குறித்துப் பேசி உரையை முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கோரிக்கைகள் வைக்க விரும்புகிறேன். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்குச் சில திருத்தங்களைக் கொடுத்திருக்கிறேன். வேலூருக்கு உடனடியாக by-pass-ல் ஒரு புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, வேலூருக்கு மருத்துவக் கல்லூரி வேண்டுமென்று கேட்டிருந்தேன். செய்வதை சொல்வோம்; சொல்வதைச் செய்வோம் என்று சொன்ன இந்த அரசு, ஏற்கெனவே, சென்ற ஆண்டு அறிவித்த மருத்துவக் கல்லூரியை இந்த ஆண்டாவது மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களுக்கு அளிக்க வேண்டும்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் பவள விழா நினைவாக பல்கலைக்கழகம் கேட்டேன். பவள விழா முடிவதற்குள் கொடுப்பதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையில் தெரிவித்தார்கள். இந்த ஆண்டு எங்களுடைய வேலூருக்கு பல்கலைக்கழகம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாதாள சாக்கடைத் திட்டம் பல்லாண்டு காலமாக நிலுவையில் இருக்கிறது. நாங்கள் போகிற பாதையிலெல்லாம் மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே பாதாள சாக்கடைத் திட்டத்தை



நிறைவேற்ற வேண்டும். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு ஒப்புக்கொண்டு தயவுசெய்து நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களும் போதுமான நிதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல நீதிமன்றத்திற்கு 'A' பிளாக் ஒன்றைக் கட்டுவதாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் வந்தபோது கோரிக்கை வைத்தோம், சொன்னார்கள். 'B' பிளாக் கட்டப்பட்டிருக்கிறது. 'A' பிளாக் இன்னும் கட்டப்படவில்லை. அங்கே கோர்ட் வளாகத்தில் 'A' பிளாக்கை கட்டித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து காட்பாடி போவதற்கு ஏற்கெனவே இருந்த ஒரு பாலம் விழுந்து 5 கண்கள் உடைந்து போய் இருக்கின்றன. அதைச் செப்பனிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர்தான் மாறிவிட்டார். உடைபட்ட அந்தப் பாலம் மாறாமல் இருக்கிறது. திரு. பொன்முடி முன்னால் இருந்தார். அதன்பிறகு திரு. தா. கிருஷ்ணன் வந்திருக்கிறார். தயவுசெய்து 1½ கோடி ரூபாய் உடனடியாகக் கொடுத்து செப்பனிட்டுக் கொடுங்கள். பிறகு 19 கோடி ரூபாய் செலவில் ஒரு புதிய பாலத்தை அமைத்துக் கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, சட்டம் ஒழுங்குப் பிரச்சினைக்கு வருகிறேன்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை, விஷச் சாராயம், ஆங்காங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற கொலைகள் இவற்றைப் பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறோம். நம்முடைய முதல்வர் அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், காவல் துறை கொஞ்சம் விழிப்புடன் செயல்படுவதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். திருச்சியிலே ஸ்ரீதர் கொலையுண்டு போனார், ம.தி.மு.கவினுடைய கௌசிகன் கொலை செய்யப்பட்டிருக்கிறார். திருநெல்வேலியில் மேயர் உறவினர் கொலை செய்யப்பட்டிருப்பதாக இன்று செய்தி. இப்படி கூலிக்கு கொலை செய்யக்கூடிய கூட்டங்கள் இன்று தமிழகத்தில் அதிகமாக உருவாகிவிட்டன. கட்டப் பஞ்சாயத்துக்காரர்கள் நிறைய பேர் வந்துவிட்டார்கள். எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இரும்புக் கரம் கொண்டு, இந்தக் கட்டப் பஞ்சாயத்துக்காரர்களையும், ரவுடி ராஜ்யம் அமைத்து கோலோச்சிக் கொண்டிருக்கக்கூடிய அந்த சமூக விரோதிகளையும் நீங்கள், கட்டுப்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, இலஞ்சம் நாம் ஒழித்தாக வேண்டிய ஒன்று. அது, கொஞ்சம் சிரமமாக இருந்தாலும்கூட செய்ய வேண்டிய ஒன்று. நான் கூறுவதால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்னைக் கோபித்துக்கொள்ளக் கூடாது. இன்று எந்த அலுவலகத்திற்குச் சென்றாலும் இலஞ்சம் இல்லாமல் வேலை நடக்காது என்று சொல்கிற அளவுக்குத்தான் அலுவலகங்கள் இருந்து கொண்டு இருக்கின்றன. நாம் உயர்மட்டத்தில் இலஞ்சத்தை ஒழித்தாலும், கீழ்மட்டத்திலே இன்னும் லஞ்சம் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாக இருந்து கொண்டிருக்கிறது.

*முற்பகல் 10-45*

இலஞ்ச இலாவண்யமற்ற ஓர் அரசை நீங்கள் உருவாக்க வேண்டுமென்று சொன்னால், அதற்காக ஒரு குழு, சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவை, ஒவ்வொரு துறைக்கும் அமைத்தாவது நடவடிக்கை எடுக்க வேண்டும். பத்திரப் பதிவு அலுவலகம், R.T.O. அலுவலகம் என்று எல்லாம் பார்த்தீர்கள் என்று சொன்னால், எங்கு பார்த்தாலும் இலஞ்சம் ஊடாடிக் கொண்டிருக்கிறது. இந்த இலஞ்சத்தை ஒழிப்பதிலே நீங்கள் முழுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, தொழிற்சாலைகள் தேர்தல் வாக்குறுதியிலே நீங்கள் சொன்னீர்கள், மூடிய தொழிற்சாலைகளைத் திறப்போம் என்று. எங்களுடைய மாவட்டத்தில் கருமவீரர் காமராஜர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது அரக்கோணம் எஃகு ஆலை. ஆனால், தற்போதைய முதல்வர் அவர்கள் காலத்தில் அது திறக்கப்பட்டது. ஆனால், மீண்டும் நீங்களே மூடிவிட்டீர்கள். இது மிகவும் வருத்தத்தை எங்களுக்கு அளிக்கிறது. எங்களுடைய நெஞ்சை வருடுகிறது. தயவுசெய்து, நீங்கள் மீண்டும் அதைப் பரிசீலனை செய்ய வேண்டும். ஒருவேளை உங்களுக்கு நட்டம் ஏற்பட்டாலும்கூட, அதற்கு மானியம் போன்றவற்றை, சிறப்பு நிதியை வழங்கியாவது, எங்களுக்கு அரக்கோணம் எஃகு ஆலையை மீண்டும் திறந்து கொடுக்க வேண்டும்.

அதேபோல, நூற்பாலைகள். தமிழகத்திலே பல நூற்பாலைகள் மூடும் நிலையில் இருக்கின்றன. எங்களுடைய ஒன்றே ஒன்று கண்ணே கண்ணு என்று இருக்கக்கூடிய அரியூர் கூட்டுறவு நூற்பாலை மூடி ஓராண்டுக்கு மேலாக ஆகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே வாக்குறுதி தந்தார்கள். நம்முடைய கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் பலமுறை திறக்கிறேன், திறக்கிறேன் என்று



சொல்லிக்கொண்டே இருக்கிறார்களே தவிர, திறந்தபாடில்லை. அது என்ன என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொஞ்சம் ஆய்வு செய்து அந்த நூற்பாலையை உடனடியாகத் திறப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.

அதேபோல, பல தொழிற்சாலைகள். எங்களுடைய மாவட்டம் tannery தொழிற்சாலைகளை மட்டுமே நம்பி பிழைத்துக்கொண்டிருக்கின்ற மாவட்டம். (மணியடிக்கப்பெற்றது) ஆம்பூர் கூட்டத்திலே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேர்தல் காலத்திலே வந்தபோது வாக்குறுதி அளித்தார்கள். முத்தரப்பு மாநாட்டுப் பேச்சும் நீங்கள் நடத்தினீர்கள். இருந்தாலும்கூட, பல tannery-கள் இப்போது மூடிக்கிடக்கின்றன. அதற்கு, மாசுக்கட்டுப்பாடு வாரியம், உச்சநீதிமன்றம், Green-Bench என்று எல்லாம் நீங்கள் விளக்கம் அளிக்கலாம், இல்லையென்று நான் சொல்லவில்லை. 200 அடி ஆழத்திற்குத் தண்ணீர் பாதிக்கப்பட்டிருக்கிறது, இல்லையென்று நான் சொல்லவில்லை. ஆனால், அதேநேரத்தில் பல ஆயிரம் தொழிலாளர்கள் எங்களுடைய மாவட்டத்திலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோல, நாமக்கல், சேலம் போன்ற மாவட்டங்களில் சேகோ தொழிற்சாலை உரிமையாளர்களும் சரி, விவசாயிகளும் சரி இன்று படுபாதாளத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறார்கள். எல்லாத் தொழிற்சாலைகளும் மூடப்படுகின்றன. இதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஒரு குழுவை நியமித்தாவது, எப்படியாவது, Green-Bench Judgement இருந்தாலும்கூட, அரசு வழக்கறிஞர்கள் மூலமாக appeal செய்தாவது சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதற்கு கால அவகாசம் பெற்றுத் தரவேண்டும்.

அதேபோல, சாயப்பட்டறைகள். பள்ளிப்பாளையம், குமாரபாளையம் போன்ற பகுதிகளிலே சாயப்பட்டறைகள் மூடப்பட்டதன் விளைவு நெசவாளர்கள் எல்லாம் நடுத்தெருவில் நின்றுகொண்டிருக்கிறார்கள். நெசவாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சேகோ தொழிற்சாலைகள் மூடப்பட்டிருப்பதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இதற்கெல்லாம், அனைத்துக் கட்சி உறுப்பினர்கள் அடங்கிய சட்டமன்றக் குழுவை, முதல்வர் அவர்கள் உடனடியாக நியமித்து, ஓர் அறிக்கையைப் பெற்று சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும்வரை, சட்ட நிபுணர்களை வைத்து appeal செய்தாவது நீதிமன்றத்திலேயிருந்து காலஅவகாசம் பெற்றுத் தந்து,

இந்தத் தொழில்கள் எல்லாம் மறுமலர்ச்சி பெறுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது. ஏற்கெனவே அதிக நேரம் பேசிவிட்டீர்கள். ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கரும்புக்கு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும்.

மழலையர் ஆசிரியர்கள் இன்றுகூட உண்ணாவிரதப் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். கல்வி அமைச்சர் அவர்கள் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்துபேசி நடவடிக்கை எடுக்க வேண்டும். மழலையர் ஆசிரியர் பயிற்சி பெற்ற மாணவர்கள் பலபேர் வேலையில்லாமல் அவஸ்தை பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் வேலை அளிக்கக்கூடிய ஒரு வாய்ப்பை நீங்கள் தர வேண்டும்.

பொறியாளர்கள் எல்லாம் 6 நாட்களாக போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மத்திய அரசுக்கு இணையான ஊதியத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் 2 கோடி ரூபாய்தான் கூடுதலாகச் செலவாகும் என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, இந்தப் பொறியாளர்களையும் உடனடியாக அழைத்துப் பேசி அவர்களுக்கும் நீங்கள் ஆவன செய்ய வேண்டும்.

மத்திய அரசிடமிருந்து வரக்கூடிய E.A.S., J.V.V.T. போன்றவற்றிற்கு வரும் பணம் எல்லாம் குறைந்து இருப்பதாகச் சொல்கிறார்கள். எங்கு பார்த்தாலும், தொகுதிக்குப் போனால் Collector போன்றவர்கள் எல்லாம் E.A.S. பணம் குறைந்திருக்கிறது, J.V.V.T. பணம் குறைந்திருக்கிறது, I.R.D.P. பணம் குறைந்திருக்கிறது, என்று சொல்கிறார்கள். அவை ஏன் குறைந்தன என்பதை நம்முடைய முதல்வர் அவர்கள் மத்திய அரசுக்கு எழுதிக் கேட்டு, பழையபடி அதிகமான தொகையைப் பெற்றுத் தந்து, அதிக திட்டங்களைக் கொண்டு வருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.



முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

***திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்திலே கலந்துகொண்டு உரையாற்றுகின்ற வாய்ப்பினை அளித்தமைக்காக என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரை என்பது, வர இருக்கின்ற நிதிநிலை அறிக்கைக்கு ஆதாரமான ஓர் உரையாகும். ஆளுநர் உரையை அடித்தளமான ஓர் உரையாகக் கொள்ள வேண்டும். மேலும் இந்த ஆளுநர் உரை ஓர் ஆரோக்கியமான குழந்தையாக எதிர்காலத்திலே வளர்ந்து நாட்டுக்கு உழைக்கின்ற ஒரு வாலிபனைப்போல [illegible] அறிக்கையைத் தரக்கூடிய உரையாக அமைந்து இருக்கின்ற காரணத்தால் இதை நல்லவர்களும் நாட்டில் உள்ள அனைவரும் வரவேற்கக் கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது.

"வீழ்வது நாமாயினும், வாழ்வது தமிழாகட்டும்" என்ற இலக்கணத்தைப் படைத்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்

'செந்தமிழே! நறுந்தேனே!
செயலினை மூச்சினை
உனக்கு அளித்தேனே'

என்று தெரிவித்த திராவிட கவி பாவேந்தருடைய உணர்வுகளோடு,

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்.'

என்ற தேசியக் கவியினுடைய கனவு நனவாகின்ற விதமாக, தமிழ் இனி மெல்லச் சாகாது; தமிழ் இனி மெல்ல வாழும்; விரைவாக வாழும் என்பதற்கு அர்த்தமாக இணையங்களை அமைத்து, கணினி நிலையங்களை அமைத்து இந்த நாட்டிலே நவீனப்படுத்தி, நான்காவது தமிழை உலகமெல்லாம் நடமாட வைத்து இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இதயமார்ந்த நன்றியினை இந்த நாட்டிலுள்ள மக்கள் அத்தனைபேரும் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, நம்முடைய அரசின் ஆளுநர் உரை வெறும் சம்பிரதாயமான உரையல்ல; வெறும் சடங்கிற்கான உரையல்ல. இந்த ஆளுநர் உரையிலே ஏற்கெனவே நாம் சொன்னவற்றை செய்து இருக்கிறோம். சென்ற ஆண்டு ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டது; சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டது—அவையெல்லாம் ஒவ்வொன்றாகச் செய்யப்பட்டு இருப்பதை இங்கே பட்டியல் போட்டுக் காட்டி, இது சம்பிரதாய

உரையல்ல; இது இந்த நாட்டிற்கு நாங்கள் அளிக்கின்ற வெகுமதி என்ற விதமாக இந்த ஆளுநர் உரையிலே அவை எல்லாம் சுட்டிக் காட்டப்பட்டு இருக்கின்றன.

தொழில் வளர்ச்சியிலே தமிழகத்திலே ஒரு புரட்சியை உருவாக்குகின்ற பணியில் மாண்புமிகு முன்னாள் மத்திய அமைச்சர் அண்ணன் முரசொலி மாறன் அவர்களும், நம்முடைய அரசுக்கு அவர்கள் தருகின்ற ஆலோசனைகளும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்து இருக்கின்ற நடவடிக்கைகளின் காரணமாக முதலீடுகள் பெருகி இந்த நாட்டில் மிகப் பெரிய தொழில் புரட்சி உருவாகிக் கொண்டிருப்பதையும் குறிப்பிட்டாகவேண்டும்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டமாக இருந்தாலும் நமக்கு நாமே திட்டமாக இருந்தாலும், சமத்துவபுரம் திட்டமாக இருந்தாலும், தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருக்கின்ற காலங்களிலேதான் இந்தியாவிற்கே வழிகாட்டக்கூடிய கண்ணொளித் திட்டம், அதைப்போல குடிசை மாற்று வாரியத் திட்டம், அதைப்போல பல்வேறு நிலைகளிலே இந்த நாடே வியந்து கொண்டிருக்கிற 'சைக்கிள் ரிக்ஷா ஒழிப்பு' போன்ற திட்டங்களையெல்லாம் வழிகாட்டியாக நம்முடைய நாட்டிற்கு வழங்கியதற்குக் காரணமாக இருந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த ஆளுநர் உரையிலேகூட மனிதக் கழிவுகளை மனிதன் அகற்றுகின்ற அந்த இழி நிலையைப் போக்க வேண்டும் என்ற அந்த உணர்வோடு, அந்த நிலைப்பாட்டை வகுத்து, அதற்காக புதிய திட்டத்தைக் கொண்டு வருகிறோம் என்று இங்கே தெரிவித்திருப்பதிலே இருந்து, இது தந்தை பெரியார் அவர்களுடைய நினைவுகளை, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கனவுகளை எல்லாம் இங்கே உருவாக்கக்கூடிய, நிறைவேற்றக்கூடிய ஓர் அரசு என்கின்ற விதமாக அந்தத் திட்டங்களை எல்லாம் நமக்கு நிகழ்த்திக் காட்டி இருக்கிறது தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு.

அரசியல் நாகரிகம் கொண்ட அரசு என்பதற்கு அடையாளம் தான் எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல் எந்தச் சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், அவர்கள் எந்த இயக்கத்தில் இருந்தாலும், எந்தக் கட்சியில் இருந்தாலும்கூட, இந்த நாட்டிலே மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்க வேண்டும்; இந்த மாநிலத்தின் அனைத்துத் தொகுதிகளுக்கும் நானே சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையிலே எண்ணிப் பணியாற்றுகிறேன் என்ற கருத்தை முதல்வர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த அடிப்படையிலே நம்முடைய அரசு பாரபட்சம் காட்டுவதாகக்கூட மாண்புமிகு உறுபபினர் ஒருவர் குறிப்பிட்டார்.



நான் சொல்ல விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் ஒரு மரியாதையை உருவாக்கித் தந்ததே மாண்புமிகு முதல்வர்தான். தொகுதி மேம்பாட்டுத் திட்டம் என்ற பெயரிலே நமக்கெல்லாம் நிதியை ஒதுக்கிய காரணத்தால், அதுவரை மனுக்களை வாங்கிக்கொண்டு அதிகாரிகளிடம் சொல்கிறோம் என்று நாம் சொல்லிக்கொண்டிருந்த காலம்போய், பல்வேறு மனுக்களிலே, பல்வேறு நிலைகளிலே பல்வேறு திட்டங்களை அங்கேயே சட்டமன்ற உறுப்பினர் நான் செய்து தருகிறேன் என்று உத்தரவாதம் தருகிற அளவுக்கு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு மரியாதையை ஏற்படுத்தித் தந்ததன் காரணமாக, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள்கூட அதன் பலனைப் பெறுகிறார்களா, இல்லையா? 25 இலட்சத்தை [illegible] மாற்றி அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் பல்வேறு பணிகளைச் சிறப்பாகச் செய்விக்க வைத்திருக்கிறார் நம்முடைய முதல்வர். மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவற்றையெல்லாம் எண்ணிப்பார்த்தாகவேண்டும். இந்த அரசு செய்து இருப்பதை, முதல்வர் கலைஞர் அவர்கள் செய்து இருக்கிறார்கள் என்பதை இந்த நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைக்கூட சட்டமன்ற உறுப்பினர் தெரிவு செய்கின்ற பஞ்சாயத்துக்கு அளிக்க வேண்டும் என்ற உரிமையை, என்ற ஒரு வாய்ப்பை நம்முடைய அரசு வழங்கி இருக்கின்ற காரணத்தால், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உட்பட அத்தனைபேரும் அதன் மூலமாகப் பலன் பெறுகிறார்கள். ஆகவேதான் எல்லாத் திட்டங்களிலும் எல்லாவகையான நிலைப்பாடுகளிலும் எந்தவிதமான மாறுபாடும் காட்டாத ஒரு நிலையை இந்த அரசு வைத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தியினுடைய உரையை நான் உள்ளே இருந்து கேட்டுக் கொண்டிருந்தேன். அதிலே ஒரு தவறு. 'சைக்கிள் ரிக்ஷா'க்களை எல்லாம் நான் ஒழித்துவிட்டதாகச் சொன்னார். 'சைக்கிள் ரிக்ஷா'க்களை அல்ல; 'கை ரிக்ஷாக்களை' என்று திருத்திக்கொள்ள வேண்டும்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆர்வத்தின் காரணமாகவும் வேகத்தின் காரணமாகவும்

வார்த்தைகள் தவறாக வந்ததற்காக வருந்துகிறேன். தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னதை ஏற்றுக்கொண்டு, 'கை ரிக்ஷா'க்களை ஒழித்து சைக்கிள் ரிக்ஷா'க்களை இந்த நாட்டிலே நடமாட வைத்த அந்த மிகப் பெரிய திட்டத்தை இந்தியாவிற்கு வடிவமைத்துத் தந்தது நம்முடைய அரசு என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-55*

நம்முடைய ஆளுநர் உரையைப் படித்துப் பார்த்து, அதனுடைய நிலைப்பாட்டை விமர்சனம் செய்கின்ற நிலையெல்லாம் மாறிப்போய், அதை வெறும் காகிதம் என்று சொல்லக்கூடிய சில வேடிக்கையானவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நிலையை எண்ணிப் பார்க்கிறபோது, இதுவரை வந்த ஆளுநர் உரையெல்லாம் காகிதத்திலேதான் அச்சிடப்பட்டிருக்கிறதே தவிர இரப்பரிலே அச்சடிக்கப்பட்டு எந்த ஆளுநர் உரையும் எப்போதும் வழங்கப்பட்டதில்லை என்பதையும், ஆளுநர் உரை மட்டுமல்ல, திருக்குறளோ அல்லது திருக்குறளின் ஆழமோ அல்லது அதனுடைய விளைப்பாடோகூட தெரியாத சில பேர் திருக்குறள்கூட காகிதத்திலே அச்சடிக்கப்பெறுவதால் அதை வெறும் காகிதம் என்று சொல்லிவிடுவார்கள் என்று நினைக்கக்கூடிய அளவிற்கு, ஆளுநர் உரையின் உண்மையான நிலைப்பாட்டை அறியாமல், அதைக் காகிதம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆளுநர் உரை திருக்குறளைப் போல விளங்குகிறது.

இணையங்களை வகுத்தது மட்டுமல்ல. 1500 இணையங்கள் இந்த நாட்டிலே கொண்டு வரப்படும் என்றும் படிப்படியாக மூன்றாண்டுகளுக்குள் 12,000 இணையங்கள் கொண்டு வரப்படும் என்றும், அதனடிப்படையில் கிட்டத்தட்ட 1.50 இலட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு தருகின்ற அளவில் திட்டம் கொண்டுவரப்படும் என்றும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே எல்லாவகையான திட்டங்களும் இதில் இருக்கின்றன என்பதை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல கடலூரில் சாலை வசதி இருக்கிறது; இரயில் போக்குவரத்து வசதி இருக்கிறது. மேலும் வெகு வேகமாக இரயில் செல்லக்கூடிய வகையில் அகல இரயில் பாதை என்று சொல்லக்கூடிய வசதியும் நம்முடைய அரசு வலியுறுத்தியதன் காரணத்தால் வெகு விரைவில் வரவிருக்கிறது. கப்பல் போக்குவரத்தும் இருக்கிறது. ஆனால் இதுவரையிலே அங்கே இரசாயன தொழிற்சாலைகள் மட்டும் இருக்கின்றன. கடலூர் சிப்காட்டில்,



ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற வகையிலே வாய்ப்பினை உருவாக்க ஒரு தொழிற்சாலையைத் தர வேண்டும். அதற்கான இடம் அங்கே இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய சென்னை துறைமுகத்திற்கு ஏராளமான கப்பல்கள் வருகின்றன. அயல் நாடுகளிலிருந்து ஏராளமான கப்பல்கள் வருகின்றபோது உள்ளே நிறுத்துவதற்கு இடம் இல்லாமல் வெளியில் நிறுத்தப்படுகின்றன. இதற்கான தாமதக் கட்டணத்தை துறைமுகத்திற்குச் செலுத்த வேண்டிய நிலையையும் நாம் அறிவோம். நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, தூத்துக்குடியையும் சென்னையையும் இணைத்து பல்வேறு திட்டங்களைச் சொல்கிறபோது, இடையிலே இருக்கின்ற கடலூர் மாநகரையும் இணைத்துக் கொள்ள வேண்டும். கடலூர் மாநகரத்திற்குச் சென்று கப்பல்கள் சரக்குகளை இறக்குவதற்கு வழிவகைகளைக் காண்போமேயானால் பல்வேறு நிலைகளில் போக்குவரத்து மேம்பாடு அடையும் என்பதை எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

இந்த ஆளுநர் உரை மேலும் பல சிறப்புகளைத் தருவது. எதிர்காலத்தில் வர இருக்கின்ற நிதிநிலை அறிக்கை என்பது இந்த நாட்டிற்கு மறுமலர்ச்சியை, திருப்புமுனையை உருவாக்கும் என்பதற்கு இந்த ஆளுநர் உரை ஆதாரமாக இருக்கிறது. மிகச் சிறந்த இந்த உரையை நாட்டுக்கு அளித்திருக்கின்ற காரணத்தால் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன், நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் அவர்கள் முன்மொழிந்த நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தினை நானும் ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இன்று ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்ற தமிழகத்தின் மூத்த தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய எண்ணத்தையும், உள்ளத்தையும் நாங்களெல்லாம் நன்கு அறிந்தவர்கள். எல்லா சமுதாய மக்களிடத்திலும் பொதுநோக்கோடு அணுகுமுறையை வைத்துக்கொண்டு, எல்லோரும் இணக்கமாகவும் வாழ வேண்டும்; அணுக்கமாகவும் வாழ வேண்டும்; எல்லோரும் எல்லாமும் பெற்றும் வாழ வேண்டும் என்று நினைக்கக்கூடிய பேருள்ளம் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு உண்டு. எனவே அந்த எண்ணத்தின்

அடிப்படையில் இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது என்பதை நான் படித்து மகிழ்ந்தேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் நாட்டில் இன்பம் பெருக வேண்டும்; துன்பங்கள் நீங்கி உண்ணுவதற்கு உணவும், உடுப்பதற்கு உடையும், இருப்பதற்கு வீடும் வேண்டுமே என்ற கவலையோடு அல்லும் பகலும் சிந்தித்துச் செயல்படுகிறார்கள் என்பதை யாராலும் மறுத்து விட முடியாது. அந்த வகையில் இந்த ஆளுநர் உரையில் பல்வேறு வழிகளிலே தன்னுடைய கவனத்தைச் செலுத்தி, நம்முடைய நிதி ஆதாரத்தைப் பெருக்குவதோடு, தொழில் வளர்ச்சிக்கு முறையான வழி கண்டு, அந்தத் தொழில் வளர்ச்சியின் மையமான நோக்கம் வேலைவாய்ப்பின் வளாகத்தை விரிவுபடுத்துவது என்ற வகையில் திட்டங்களைச் செய்திருக்கிறார். அதற்காக பெருமுயற்சிகளை முதல்வர் அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பது தெளிவு. "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்று சொல்வார்கள். திரைகடல் ஓடியும் முதலீடு தேடு, தமிழகத்தில் முதலீடு செய்வதற்காக வாய்ப்புகளைத் தேடு" என்ற வகையில் கடல் கடந்து சென்றும் முனைவோர்களை தமிழகத்திற்கு வரவழைப்பதில் அவர் இன்றைக்கு மிகுந்த அக்கறை காட்டுகிறார். இக்கரையில் இருக்கும்போதும் அக்கறை காட்டுகிறார். அக்கரைக்கும் சென்று அதே அக்கறையைக் காட்டுகிற வகையில் நம்முடைய முதல்வர் அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

*முற்பகல் 11-00*

ஒருவிதத்தில் தொழில்கள் மிக அதிகமான அளவில் தமிழகத்தில் வளர்ந்திருக்கின்றன. எங்கள் ஊருக்குப் போகின்ற பாதையிலே பார்த்தால்கூட 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலை இன்றைக்கு இல்லை. எங்கும் தொழிற்சாலைகள். சிறுதொழில்கள், பெருந்தொழில்கள் என்ற வகையில் எங்கும் தொழிற்சாலைகள். நடமாட்டமே இல்லாத இடங்களிலேகூட தொழிலாளிகளுடைய நடமாட்டங்கள். ஏற்றமிகு தோற்றங்கள். இவற்றையெல்லாம் கண்டு நாம் மகிழ்கிறோம். தொழில் துறையின் வளர்ச்சிக்காக வருங்காலத்தில், அடுத்த நிதிநிலை அறிக்கையில் என்னென்ன திட்டங்கள்வரும் என்பதையும் இந்த ஆளுநர் உரை நமக்குச் சுட்டிக்காட்டுகிறது. அதற்காக நாம் மகிழ்கிறோம். ஆனால், அதேநேரத்தில் சில பாரம்பரியமான தொழில்களைப பொறுத்தவரை தமிழகத்தில் அவற்றினுடைய வளாகம் குறுகி வருகிறது. அதில் வேலைவாய்ப்புகள் குறைந்து வருகின்றன என்பதை நாம்



எண்ணிப் பார்க்க வேண்டும். அந்தத் துறையைச் செம்மைப்படுத்தி, செழுமைப்படுத்தி அதிலே இருக்கக்கூடிய குறைகளை நீக்குவதற்காக முதல்வர் அவர்கள் தம்முடைய கவனத்தைச் செலுத்தி வருவது உண்மை. யார் அதை மறுத்தாலும் நாங்கள் மறுக்க முடியாது. ஏனென்றால் எங்களுக்கு உண்மைகள் தெரியும்.

குறிப்பாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல எங்கள் மாவட்டத்திலே பொருளாதாரத்தின் அடிப்படை இப்போது ஓரளவுக்குத் தகர்ந்து வருகிறது. காரணம், எங்கள் மாவட்டம் என்று சொன்னாலே, மையத் தொழில் தோல் தொழிற்சாலைகள். அதிலே இருக்கக்கூடிய தொழிலாளிகள் இப்போது தெருவீதியில் நின்று கொண்டிருக்கிறார்கள். பெருமூச்சுகளையே அவர்கள் தங்களுடைய வாழ்க்கையின் அடித்தளமாக அமைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அதற்கு ஒரு தீர்வுகாண நாம் முயற்சிகளை எடுத்துக்கொண்டோம். முதல்வர் அவர்கள் முத்தரப்பு மாநாட்டையும் நடத்தி, எப்படி அதிலிருந்து உருவாகிற தீமைகளைக் கட்டுப்படுத்தி, தொழிலைச் சீர்மைப்படுத்தி, தொழிலாளிகளுக்கு வேலைவாய்ப்பைத் தக்க வைத்துக் கொடுக்க வேண்டுமென்பதில் அக்கறையோடு இருக்கிறார்கள். ஆனால் இது நீதிமன்றம் தொடர்புடைய பிரச்சினையாக மாறிவிட்ட காரணத்தால் அரசுக்கு இருக்கிற சிக்கலும் எங்களுக்குத் தெரியும். அது வட ஆற்காடு மாவட்டத்தில் மட்டுமல்ல, நம்முடைய கோவை மாவட்டத்தில் திருப்பூர் பகுதியை உங்களுக்கெல்லாம் தெரியும். 15 கோடி ரூபாய் அளவுக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருந்த தொழில் துறையானது 300 கோடி ரூபாய் அளவுக்கு அதன் ஏற்றுமதி பெருகியிருந்தது. வருமானம் பெருகியிருந்தது. 3000 கோடி ரூபாய் என்று மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர் கூறுகிறார், நன்றி. இவ்வளவு உயர்வு பெற்ற ஒரு தொழில் இப்போது கடைசி மூச்சு விட்டுக் கொண்டிருக்கிறதோ என்று நாம் நினைக்கும் அளவுக்கு அந்தத் தொழில் நசிந்துவிட்டு இருப்பது மிகுந்த கவலைக்குரியது, நம்முடைய கவனத்தை ஈர்க்க வேண்டியது. இதுமாதிரியாக சேலம் மாவட்டம், 'சேகோ' தொழிற்சாலைகள் போன்றவை. இவற்றிலெல்லாம் சில தீமைகள் இருக்கின்றன என்பது உண்மை. வயிறு பசியோடு இருக்கிறது. உடலுக்கு உடை இல்லை. இருப்பதற்கு வீடு இல்லை. எவனோ ஒருவன் அத்தர், நறுமணம் கேட்டதாக இருக்கிறது. வயிறு பசியோடு இருக்கிறவன் எதைக் கேட்பான்? அத்தரா வேண்டும்? நறுமணமா வேண்டும்? முதலில் அவனுக்கு வயிறார உண்ணுவதற்கு வழி தேடிக் கொடுங்கள்.

அவன் வயிறு ஆறவில்லை. அவனே ஆறிக் கொண்டிருக்கிறான். ஆறி ஆறி மடிந்து கொண்டிருக்கிறான். தொழில் துறையிலே மிகுந்த அக்கறை உள்ளது இந்த அரசு. ஒரு பக்கம் ஏற்றம் வருகிறது, தொழில்கள் உயர்கின்றன, பெருந்தொழில்கள் ஏற்படுகின்றன, வேலைவாய்ப்புகள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. நம்முடைய பாரம்பரியத் தொழிலான தோல் தொழிற்சாலை, சாயப்பட்டறைகள், நெசவுத் தொழிற்சாலை 'சேகோ' தொழிற்சாலைகள் போன்றவை எல்லாம் நசிந்து கொண்டிருக்கின்றன. அதற்காக, சட்டபூர்வமாக நீதிமன்றத்தை நாம் திருப்திப்படுத்தும் வகையில், அரசினுடைய எண்ணத்தை எப்படி வெளியிட்டு அவற்றைக் காப்பாற்றமுடியும், இருக்கின்ற வேலைவாய்ப்பைத் தக்க வைத்துக்கொள்ள முடியும் என்பதைத் தயவுசெய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்களுடைய அமைச்சர் பெருமக்களும் சாதாரணமானவர்கள் அல்ல. நன்கு சிந்திக்கக் கூடியவர்கள். எனவே, அமைச்சரவை இது குறித்து கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-05*

அடுத்து, இந்த ஆளுநர் உரையிலே முக்கியமான பகுதியாக நான் கருதுவது, தொழில் வளர்ச்சிக்காக அரசு எடுத்துக் கொண்டிருக்கின்ற முயற்சி, இனி எடுக்க இருக்கின்ற, சிந்தித்து வைத்திருக்கின்ற திட்டங்கள் போன்றவையாகும். தொழில்கள் வளர வேண்டுமானாலும், கல்வி ஏற்றம் பெற வேண்டுமானாலும், பொருளாதாரம் ஆக்கம்பெற வேண்டுமானாலும் ஒரு நாட்டில் அமைதி வேண்டும், இணக்கம் வேண்டும். அப்படி இருந்தால்தான் அந்த அமைதியான சூழ்நிலைதான் ஒரு நாட்டிற்கு நல்வாழ்க்கையை நல்கும் என்ற அடிப்படையைப் புரிந்து கொள்ள வேண்டும். இடைக்காலத்திலே ஏற்பட்ட சில தகாத இடையூறுகள், அந்த இடையூறுகளை எப்படி மாற்றுவது என்பதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டை சமூக நல்லிணக்க ஆண்டாக, அமைதியின் ஆண்டாக, சகோதரத்துவத்தை வளர்க்கக்கூடிய ஆண்டாக மட்டுமல்ல, சகோதரர்களாக எல்லோரும் ஓரிடத்திலே வாழவேண்டும் என்பதற்காக, தமிழகம் முழுவதும் ஆங்காங்கே சமத்துவபுரங்களை ஏற்படுத்தி, தமிழ்நாட்டின் குரலே, தமிழ்நாட்டின் எண்ணமே, தமிழர்களுடைய உள்ளம் விரும்புவதே சமத்துவம்தான் என்பதற்காக நிலையான நிலைக்களன்களாக இருக்கும் வகையிலே சமத்துவபுரங்களை ஏற்படுத்தி வருகிறார்கள். அதுமட்டுமல்ல, மாவட்ட



ஆட்சித் தலைவர்களுக்கெல்லாம் நீங்கள் உத்தரவிட்டு, ஆங்காங்கே அமைதிக் கூட்டங்கள் நடத்தவேண்டுமென்ற விருப்பத்தை மட்டுமல்ல, அத்தகைய கூட்டங்களில் நீங்களே கலந்துகொண்டு, பலரை அழைத்து கூட்டங்கள் நடத்தி நல்லிணக்கத்தை வளர்ப்பதற்காக நீங்கள் செய்து வருகின்ற முயற்சிக்கு என் சார்பாக, என்னுடைய கட்சியின் சார்பாக, என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்து, தங்களையும், இந்த ஆட்சியையும் நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், உங்களிடத்திலே எங்களுக்கு நம்பிக்கை கொஞ்சம் அதிகமாக இருக்கலாம்; அந்த அதிகமான நம்பிக்கையின் அடிப்படையில் நாங்கள் உங்களிடத்தில் வைத்திருக்கின்ற எதிர்பார்ப்பும் அதிகமாக இருப்பதில் தவறில்லை என்று கருதுகிறேன். டாக்டர் கலைஞர் அவர்களிடத்தில் எதிர்பார்க்காமல் வேறு யாரிடத்தில் நாங்கள் எதிர்பார்ப்பது? எங்களுக்கு ஒரு கோரிக்கை இருக்கிறது. எங்களுடைய சமுதாயம், சிறுபான்மைச் சமுதாயம் என்று சொன்னால் அது ஏற்கெனவே தாழ்ந்த நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. அந்நிலை தொடர்கிறது, ஆண்டாண்டு காலமாகத் தொடர்கிறது. சமுதாயத்தினுடைய கவனத்தை நியாயமாக ஈர்க்க வேண்டிய, சமுதாயத்தினுடைய முக்கியமான பிரிவானது, ஏனோ தெரியவில்லை, முறையாக, நிறைவாக தன்பக்கம் கவனத்தை ஈர்க்க முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறது. வேலை வாய்ப்பிலே எங்களுக்கு அதிகமான நியாயம் இல்லை. பொருளாதார வளர்ச்சி இல்லை. இன்னும் சொல்லப்போனால், பக்கிரிகளுடைய எண்ணிக்கைதான் முஸ்லீம்களிடத்திலே அதிகமாக இருக்கிறது. எனவே, அதைக் குறைப்பதற்காக உங்களுடைய காலத்திலே நாங்கள் அதிகம் எதிர்பார்ப்பது தவறில்லை, அது நியாயத்தின்பால்பட்டதாகும் என்பதை நான் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுக்கு இடஒதுக்கீடு கொடுத்துவிட்டால் என்ன? நீங்கள் ஏற்கனவே எங்களுக்குப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலே இடம் அளித்தீர்கள். அன்று மட்டுமல்ல, இன்றுவரை நாங்கள் உங்களுக்கு அதற்காக நன்றி செலுத்துகிறோம். ஆனால், யதார்த்த நிலையில், நடைமுறையில், அதன்மூலம் நாம் எதிர்பார்த்த நியாயங்கள், போதிய நியாயங்கள், வாய்ப்புகள் இந்தச் சமுதாயத்திற்குக் கிடைக்கவில்லை. அதற்குப் பல வரலாற்றுக் காரணங்கள் இருக்கின்றன. அதைப்பற்றி எல்லாம் நான் பேசுவதற்குத் தயாராக இல்லை. நீங்கள்

புரிந்துகொள்வீர்கள். எல்லாவற்றையும் நுணுக்கமாகப் புரிந்துகொள்கின்ற ஆற்றலும், மனப்பக்குவமும் உங்களுக்கு உண்டு. கேரளாவிலும், கர்நாடகாவிலும் முஸ்லீம்களுக்கு இட ஒதுக்கீடு கொடுக்கிறார்கள். கேரளத்தில் 12 சதவீதம் முஸ்லீம்களுக்கு இட ஒதுக்கீடு கொடுத்திருக்கிறார்கள். ஆந்திராவிலும் இட ஒதுக்கீடு கொடுத்திருக்கிறார்கள். சமூக நீதியையே அடிப்படையாகவும், பேச்சாகவும், மூச்சாகவும் கொண்டிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தை ஆளுகின்ற இந்தக் காலத்தில், உங்களிடத்திலே நியாயத்தைக் கேட்பதும், எதிர்பார்ப்பதும் எங்களுடைய உரிமையாகும். அதுமட்டுமல்ல, அப்படி நினைப்பது எங்களுடைய கடமையும்கூட. எங்களுக்கு இடஒதுக்கீட்டை அளிப்பதில் என்ன தடை இருக்கிறது? இதை தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதை நான் வற்புறுத்தி கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து இட ஒதுக்கீடு தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

சில நேரங்களில் தகாதவர்கள், தவறாகப் புரிந்துகொள்பவர்கள், வரம்பு மீறி நடப்பவர்கள் எல்லா சமுதாயத்திலேயும் இருக்கிறார்கள். முஸ்லீம் சமுதாயத்திலும் ஒருசிலர் இருக்கக்கூடும்; சில இளைஞர்கள். அப்படி அவர்கள் தவறு செய்தால், அவர்களை நீங்கள் தடுத்து நிறுத்துங்கள்; காராகிரகத்தில் அடையுங்கள்; உரிய தண்டனை கொடுங்கள். அப்படிக் கொடுப்பது எங்களுக்கேகூட பாதுகாப்பு என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் அதேநேரத்தில், பொத்தாம் பொதுவாக, முஸ்லீம்கள் எங்கே காணப்படுகிறார்களோ, எங்கே வாழ்கிறார்களோ, இரவு நேரத்தில் அவர்களுடைய வீடுகளின் கதவுகளைத் தட்டி, இருக்கின்ற ஆண் மக்களையெல்லாம் பிடித்துக்கொண்டு போவதும், பெண் மக்களைக் கேவலமாக நடத்துவதும், என்பது பரவலாகக் கூறப்படுகின்ற குற்றச்சாட்டு. சில இடங்களிலே நானே அவற்றைப் பார்த்திருக்கிறேன். அதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். எங்களுடைய வேண்டுகோள், குற்றவாளிகளைத் தண்டியுங்கள்; அப்பாவிகளைக் காப்பாற்றுங்கள். அப்பாவிகளுக்கு எந்தவிதமான குறையும் ஏற்படக்கூடாது என்பதுதான். அண்மையில் சில சம்பவங்கள், தமிழகம் முழுவதும் ஒரு குறை இருக்கிறது. நான் மறைக்க விரும்பவில்லை. மறைத்தால் நான் இந்த ஆட்சிக்கு நண்பன் என்பதை ஒத்துக்கொள்ள முடியாது. ஒரு நண்பன் என்ற முறையில் நான் கேட்டுக்கொள்கிறேன். இதனால், பல தவறான



எண்ணங்கள் பரவியிருக்கின்றன. அதைத் தீர்த்து வைப்பதற்கு என்ன மாற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை, நான் சொல்லி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. தயவுசெய்து அதைச் செய்யுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒரு நியாயம் வழங்கப்படுகிறது என்பதற்கு, குறைந்தபட்சம் இந்த இட ஒதுக்கீட்டையாவது கொடுங்கள். முஸ்லீம்களுக்கு இட ஒதுக்கீடு கொடுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்பாவிகளைக் கைது செய்யாதீர்கள். பொத்தாம் பொதுவாக மக்களைக் கைது செய்யாதீர்கள். உரியவர்களைக் கைது செய்யுங்கள். உரிய தண்டனை வழங்குங்கள். அதற்கு நாங்களும், எல்லா வகைகளிலும் துணையாக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கடந்த ஆண்டு, மனமுவந்து சில திட்டங்களை என்னுடைய தொகுதிக்கு அறிவித்தார்கள். ஒன்று, சந்தனத் தைலத் தொழிற்சாலை. அதிலே நஷ்டம் வந்தாலும் அதை இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது என்று பெருமனதோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் மகிழ்கிறேன். சந்தனத்தைப்போல என்னுடைய மனமும் இப்போது அதனுடைய நறுமணத்தில் இருக்கிறது. ஆனால், இதுவரை பூர்வாங்க வேலைகூட நடைபெறவில்லை. தயவுசெய்து, பூர்வாங்க வேலையை நடத்தி, சீக்கிரம் செய்ய வேண்டும். நோக்கம் என்னவென்றால், எங்கள் மலைவாழ் மக்களுக்கு வேலை கிடைக்க வேண்டும்; அதுதான். வேறேதும் நோக்கம் அல்ல. தயவுசெய்து அதைச் செய்து கொடுக்க வேண்டும். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், வெள்ளக்கல் திட்டத்தைக் கடந்த ஆண்டே அறிவித்தார்கள்; மகிழ்ச்சி. நன்றி. இந்த ஆண்டு தங்களுடைய திருக்கரங்களால் அதற்குத் தொடக்கம் குறிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சருடைய கவனத்திற்கும், முதலமைச்சருடைய கவனத்திற்கும் கொண்டுவர விரும்புவது, எங்கள் வட்டம், வாணியம்பாடி வட்டம். இப்போது பெருகிவருகிற ஜனத்தொகை கொண்டது. பல பிரச்சினைகள் இருக்கின்றன. தொழிற்சாலைகளில் உள்ள பிரச்சினைகள். அங்கே குற்றவியல் நீதிமன்றம் மட்டும் போதாது. ஓர் உரிமையியல் நீதிமன்றத்தை, ஒரு D.M.C. ஏற்படுத்த வேண்டும். வாணியம்பாடியிலே இல்லையென்றால் என்ன சொல்வது? வாணியம்பாடி, பழங்காலத் தொன்மையானதொரு நகரம். அந்த நகரத்தில் உரிமையியல் நீதிமன்றம் இல்லையென்றால்,

கேட்பதற்கேகூட மக்கள் வியப்படைகிறார்கள். அதை இந்த ஆண்டு தொடங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆலங்காயத்தில் வேலைவாய்ப்பு அலுவலகம் இருந்தது. இருந்ததை மாற்றிவிட்டார்கள், கடந்த காலத்தில் வந்தவர்கள். அதைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். வேலைவாய்ப்பு அலுவலகத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

அதேபோல, ஜவ்வாது மலையிலிருந்து மக்கள் பத்திரப் பதிவுக்குப்போக வேண்டுமென்றால், ஆலங்காயத்தைத் தாண்டி, திருப்பத்தூருக்குப் போகவேண்டும், அல்லது வாணியம்பாடிக்கு வரவேண்டும். எனவே, தயவுசெய்து ஒரு பத்திரப் பதிவு அலுவலகத்தை — நான் கடந்த ஆண்டே முறையீடு செய்திருக்கிறேன் — ஆலங்காயத்தில் ஏற்படுத்தித் தரவேண்டும். துணைச் சார்பதிவாளர் அலுவலகம், நான் துணைச் சார்பதிவாளர் அலுவலகம்தான் கேட்கிறேன். தயவுசெய்து அதை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன் - யார் எதைச் சொன்னாலும், எங்களுடைய உள்ளங்கள் எதை நினைக்கிறது; உங்களுடைய எண்ணங்களுக்கும், எங்களுடைய எண்ணங்களுக்கும் என்ன பொருத்தம் இருக்கிறது; எங்கள் உள்ளங்கள் துடிக்கும்போது உங்களுடைய உள்ளமும் துடிக்கும்; உங்களுடைய உள்ளங்கள் துடிக்கும்போது, எங்களுடைய உள்ளமும் துடிக்கும். எனவே - யார் எதைச் சொன்னாலும், நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன்; இது குறித்து பல்வேறு கருத்துகள்; பல்வேறு முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. நாங்கள் ஒரு சிறிய கட்சி. சிறிய கட்சிதான்; ஆனால், எங்களுடைய உள்ளங்கள் பெரிது; எங்களுடைய கொள்கைகள் பெரிது. எண்ணிக்கை 5 தான்; ஆனால், எங்களுடைய எண்ணங்கள் உயர்ந்தது. ஆனால் அதேநேரத்தில், இந்தக் கட்சியைப் பிளப்பதற்காக, இதிலே குழப்பங்களை ஏற்படுத்துவதற்காகப் பல பேர் பல வகையிலே முயன்று கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்ன என்று தெரியுமா? ஒரேமாதிரியாக, ஒரே இடத்திலே அட்டைபோல ஒட்டிக் கொண்டிருக்கிறான், அந்த அட்டையைக் கழற்ற வேண்டுமானால் முடியாது, அங்கே உள்குழப்பம் ஏற்படுத்த வேண்டுமென்று பல பேர் முயலுகிறார்கள். நான் அவர்களுக்கு மிகுந்த அன்போடு, அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்வது ஈட்டியின் முனையில் நிறுத்தியபோதிலும் நாங்கள் கொண்டிருக்கிற எண்ணத்திலிருந்து மாறுதலைக் காணமுடியாது. நாங்கள் ஒரு முடிவைச் செய்யமாட்டோம்; செய்துவிட்டால் அதன்படி



இருப்போம். இது காயிதே மில்லத் அவர்களால் உருவாக்கப்பட்டு எங்களிடத்திலே வழங்கப்பட்டுள்ள ஓர் அமானிதயான பொருள்.

*முற்பகல் 11-15*

திராவிட முன்னேற்றக் கழகமும் நாங்களும் அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரையிலும் சுயமரியாதை இயக்கத்தினுடைய உணர்வுகளுக்குச் சொந்தக்காரர்கள். எனவே திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிப்பது எங்களுடைய பாரம்பரியச் செயல்; எங்களை நாங்களே ஆதரிப்பது போன்றது. எனவே யார், எதைச் சொன்னாலும் திராவிட முன்னேற்றக் கழகம் அதிலே கவனம் செலுத்தாமல் இந்த உறவை, உறுதி செய்ய வேண்டும். ஆனால் அதற்கு உங்களுடைய ஆதரவு எங்களுக்கு வேண்டும். இட ஒதுக்கீடு வேண்டும். முஸ்லீம்களுக்கு நியாயங்கள் வழங்க வேண்டும். அப்படிச் செய்வதென்பது எங்களுடைய உறவை, நட்பை வலுப்படுத்துவதற்குத் தேவை. அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மற்றவர்களைவிட நன்றாக உணர்வார்கள் என்பதை நான் உணர்ந்து பார்த்து அவர்களுக்கு நன்றி தெரிவித்து இந்த உரையை நிறைவு செய்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

*** திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் ஆரம்பமே 1999-வது ஆண்டில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேலும் அதிகப்படுத்துவதோடு தமிழக மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் என்று நம்புவதாகக் கூறப்படுவது கேட்க இனிமையாக இருந்தாலும் எந்த வகையில் நடைபெறும் என்ற விவரங்களை மொத்தமுள்ள 22 பக்கங்களையும் படித்துப் பார்த்தால் எந்த இடத்திலும் விதிமுறைகள் தெளிவாக இல்லை. மந்திரத்தில் மாங்காய் வரவழைக்கும் கதையாக இந்த அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறீர்கள். தமிழ்நாட்டில் நடந்த சாதி மோதல்கள் குறித்து நடத்தப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுத்த முடிவுகளை அப்படியே ஆளுநர் உரையில் தெரிவித்திருக்கிறீர்களே தவிர, எந்த முடிவை எந்த வகையில் செயல்படுத்தப் போகிறீர்கள் என்று விளக்கப்படவில்லை. ஏனென்றால் இன்னும் தமிழ்நாட்டில் சாதி மோதல்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. சாதிப் பெயரைச் சொல்லித் தங்களை வளர்த்துக்கொள்ளும் தலைவர்களை நீங்கள் வளர்த்து வருகிறீர்கள். மனதில் ஏதோ ஒரு திட்டத்தை வைத்துக் கொண்டு வோட்டு வங்கிக்காக வளர்த்து வருகிறீர்கள். சாதி மோதல்களைத் தடுக்க

வேண்டும் என்று சொல்வதும் இந்த அரசுதான். மோதலுக்குக் காரணமானவர்களை வளர்த்துவிடுவதும் இந்த அரசுதான். சில தலைவர்கள் எங்கே சென்றாலும் தீ வைப்பு, கலாட்டா, வெட்டு, குத்து, சாலை மறியல், பஸ் எரிப்பு போன்ற சம்பவங்கள் எல்லாம் நடைபெறுகின்றன. போக்குவரத்துத் தடைபடுகிறது. அந்தத் தலைவர்கள், அது அவர்களுக்குக் கிடைத்த வெற்றி என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், சாதித் தலைவர்களுக்குப் பணம் எங்கேயிருந்து வருகிறது; பாராட்டு எங்கே இருந்து வருகிறது என்பதை அரசு ஆராய்ந்து பார்க்க வேண்டும். வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது. சில தலைவர்கள் கொலை வழக்கில் சிக்கி, கொலைப் பட்டியலில் இருந்தாலும் நீங்கள் கண்டுகொள்வதே கிடையாது. அது யார் என்று உங்களுக்குத் தெரியும். அவர்களைத் தலைவர்களாக அங்கீகரித்து அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்தினால் எப்படி காவல் துறை அவர்களைக் கைது செய்யும்? ஒருபக்கம் சமுதாய நல்லிணக்கம் என்று பேசிக் கொண்டு மறுபக்கம் தேர்தலை மனதில் வைத்துக்கொண்டு தூண்டிவிடுவதாகத்தான் பொதுமக்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். சபாநாயகர் கட்டுப்பாட்டிற்குள் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி வளாகத்திற்குள் என்னுடைய அறை இருக்கிறது. கதவை உடைக்கிறார்கள். பிளஷரை உடைக்கிறார்கள். இந்த அரசு வழக்கு போட்டது. பிரிவு 506 (ii)-ன்கீழ் வழக்கு போட்டார்கள். ஆனால் அந்த வழக்கை அந்தக் கட்சிக்காரர்களுக்கு உற்சாகமாக இருக்கிற அளவுக்கு defer பண்ணிவிட்டார்கள். இதில் எல்லாம் அவர்களை ஊக்கப்படுத்துவது தீவிரவாதத்தை ஊக்கப்படுத்துகிறமாதிரிதான் இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் என்னுடைய தொகுதியில் ராமசாமியாபுரம் கிராமத்திற்குப் போனேன். பொதுமக்களைச் சந்திக்கப் போனேன். போய்விட்டு வரும்போது சாலை மறியல் செய்து அரிவாள், கம்பு எல்லாம் வைத்துக்கொண்டு மரங்களை வெட்டி, சாலையை, பாலத்தை எல்லாம் உடைத்தார்கள். அந்தப் பகுதியிலே உள்ள கிராம முன்சீப்பே போலீசில் petition கொடுக்கிறார். 96 பேர் மேலே வழக்கெல்லாம் போட்டார்கள். நான் கொடுத்த petition வேண்டாம் என்றும் Revenue Department கொடுக்கும் என்றும் சொன்னார்கள். 4-1/2 மணி நேரம் என்னை சிறை வைக்கிறார்கள். ஆனால், நாங்கள் நினைத்திருந்தால் அந்த நேரம் மோதல்கள் பயங்கரமாக வந்திருக்கும். சட்டம்-ஒழுங்கு கெட்டுப்போய் விடும் என்று அமைதியாக இருந்தோம். ஆனால்,



வழக்கை அப்படியே கிடப்பில் போட்டால், பின்பு ஏன் அவர்கள் தீவிரவாதிகளாக மாற மாட்டார்கள்? ஒரு M.L.A.-வுக்கே இந்த கதி என்றால் எப்படி? இப்படி அவர்களைத் தீவிரவாதிகளாக அரசு ஊக்குவிக்கக் கூடாது.

முற்பகல் 11-20

இன்னொன்று; விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு தமிழக அரசுக்கும் பங்கு உண்டு. ஏனென்றால், இந்த ஆட்சி வந்ததிலிருந்து, 3 பட்ஜெட் வரைக்கும், வியாபாரிகளுக்கு நிறைய சலுகைகள். ஆயிரம் கோடி, ஆயிரத்தைந்நூறு கோடி ரூபாய் என்று சலுகைகள் கொடுத்திருக்கிறீர்கள். அதை வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு வியாபாரிகளைக் கூப்பிட்டு, 'உங்களுக்குச் சலுகைகள் எல்லாம் கொடுக்கிறோம்; பலமுனை வரியை ஒருமுனை வரியாக ஆக்குகிறோம்; 1,500 கோடி ரூபாய்க்குச் சலுகைகள் கொடுக்கிறோம்; ஏன் நீங்கள் விலைவாசியைக் குறைக்கமாட்டேன் என்கிறீர்கள்' என்று பேச்சுவார்த்தைகள் நடத்தமாட்டேன் என்கிறீர்கள். அதையெல்லாம் நீங்கள் செய்ய வேண்டும். ஓட்டல் பண்டங்களின் விலையைக் குறைப்பதற்கும் வேண்டிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். அதையெல்லாம் நீங்கள் செய்தால்தான் விலைவாசி எல்லாம் குறையும்.

இன்னொன்று; மத்திய சர்க்கார் ration கடைகளின் உணவுப் பொருட்களின் விலையை ஏற்றினாலும், நீங்கள் குறைக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். இது இந்த ஆட்சியிலே மட்டுமல்லாமல், புரட்சித் தலைவர் ஆட்சியிலும், புரட்சித் தலைவி ஆட்சியிலும் நடந்து கொண்டுதான் இருந்தது.

இன்னும் ration card-கள் எல்லோருக்கும் கொடுக்கப்பட வேண்டும். கொடுக்கப்பட்டுவிட்டதாக ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நிறைய இடங்களில், நிறைய தொகுதிகளில் 'ration card வேண்டும்; ration card வேண்டும்' என்று கேட்டு வருகிறார்கள். ஒரே வீட்டில் பல குடித்தனங்கள் இருக்கின்றன. அவர்கள் கல்யாணம் செய்துகொண்டு போகிறார்கள். அந்த குடும்பத்திற்குத் தனியாக ration card வேண்டாமா? ஆகவே, ration card-கள் இன்னும் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவை பல வண்ணங்களில் அச்சடிக்கப்பட்டு ஒரே குழப்பமாக இருக்கிறது.

Ration கடைகளில் கோதுமை விலையை உயர்த்தியதாகக் கேள்விப்பட்டேன். கோதுமையை தமிழ்நாட்டு மக்கள் அதிகமாக

உபயோகப்படுத்துவதால், ration கடைகளில் கோதுமை விலையை உயர்த்தக்கூடாது. ஸ்ரீவில்லிபுத்தூர், இராஜபாளையம் கூட்டுறவுக் கடைகள் மூலமாகவும், ஸ்ரீவில்லிபுத்தூர் வெள்ளிவிழாக் கட்டடம் சார்பாகவும் நடத்தப்படுகிற ration கடைகளிலே உணவுப் பொருள்களைக் கொடுக்கவேமாட்டேன் என்கிறார்கள். கடத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள். அங்கே என்ன நடந்தாலும் D.S.O.-விடம் சொல்கிறோம்; D.R.-இடம் சொல்கிறோம்; J.R.-இடம் சொல்கிறோம்; நடவடிக்கையே இல்லை. அதனைத் தொழில் மாதிரி வைத்து, அருப்புக்கோட்டையிலும், ஸ்ரீவில்லிபுத்தூரிலும், அரிசியைப் palish செய்து சென்னைக்கு அனுப்புகிறார்கள். இரண்டு ரூபாய் அரிசியைப போடவே மாட்டோம் என்கிறார்கள். நல்ல அரிசியைப் பூராவும கடத்துகிறார்கள். மாவட்ட நிர்வாகம் என்னதான் செய்கிறது என்று தெரியவில்லை. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொன்று: ஆளுநர் உரையிலே . . . . . (குறுக்கீடு)

*** மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குடும்ப அட்டைகள் வழங்கிய விவரத்தைச் சொல்லியிருக்கிறேன். பொத்தாம் பொதுவாக உறுப்பினர் அவர்கள், எல்லா இடங்களிலுமே ration அட்டைகள் கேட்கிறார்கள், அதை வழங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஏற்கெனவே வழங்கியதைவிட 7 இலட்சம் அட்டைகள் கூடுதலாக—போலி அட்டைகளை ஒழித்துவிட்டு—கூடுதலாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பல இடங்களிலே மீண்டும் மீண்டும் அந்தப் பழைய போலி அட்டைகளை வைத்து இருந்தவர்களே எங்களுக்கு ration அட்டை வேண்டும் என்று மனுச் செய்கிறார்கள். அதைக் கவனமாகப் பரிசீலித்து, நியாயமானவர்களுக்கு மட்டும் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதேபோல், உறுப்பினர் அவர்கள் தற்போது இரண்டு ரூபாய் அரிசி போடவில்லை; அரிசியே தராமல் அரசு இருக்கிறது என்று சொன்னார். பொத்தாம் பொதுவிலே அப்படிச் சொல்லாமல், குறிப்பிட்டு இந்த இடத்திலே இப்படி நடக்கிறது என்றால், எங்களுக்கு நடவடிக்கை எடுப்பதற்குச் சரியாக இருக்கும். அரிசி, சென்னைக்கு வருவதாகச் சொல்கிறார்கள். சென்னைக்கு அல்ல; எங்குமே கடத்தப்படாத அளவுக்கு Food Cell மூலமாகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு மாதமும் 2 இலட்சம் டன் வரை



அரிசி விநியோகிக்கப்பட்டு வருகிறது. உறுப்பினர் அவர்கள் பொத்தாம் பொதுவிலே சொல்லாமல், குறிப்பிட்டு இந்த இடம் என்று சொன்னால், உடனடியாக நடவடிக்கை எடுத்து மக்களுக்குப் பணியை இந்த அரசு செவ்வனே செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான்தான் சொல்கிறேனே, ஸ்ரீவில்லிபுத்தூர் நகரிலுள்ள வெள்ளிவிழாக் கட்டடத்தின் சார்பில் நடத்தப்படுகிற ration கடைகளிலும் இராஜபாளையம் store மூலமாக நடத்தப்படுகிற ration கடைகளிலும் வழங்கப்படுகிற அரிசி முறையாக வழங்கப்படாமல் தனியார் கடைக்குப் போகின்றன; அரிசி ஆலைக்குப் போகின்றன. polish செய்து சைக்கிளில் கடத்துகிறார்கள். இதைவிட நான் வேறென்ன சொல்ல முடியும்? குடும்ப அட்டைகளை சரிபார்த்துத்தானே கொடுக்கப் போகிறீர்கள்? அப்படிச் சரிபார்க்கப் போகும்போது, அங்கே ஆள் இருந்திருக்க மாட்டான்; வெளியூக்கு வேலைக்குப் போயிருப்பான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. வி.பி. இராசன்.

**திரு. வி.பி. இராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராஜபாளையம் கூட்டுறவுப் பண்டகசாலையினுடைய கடை திருவில்லிபுத்தூரிலும் இருக்கிறது. அவ்வப்போது வருகிற குற்றச்சாட்டுகளுக்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். தொன்றுதொட்டு நடைபெறுகின்ற தவறுகளைத் திருத்திக் கொண்டிருக்கிறார்கள். இராஜபாளையம் கூட்டுறவுப் பண்டகசாலையின் தலைவராக நான்தான் இருக்கிறேன். மிகுந்த அக்கறையோடு, குற்றச்சாட்டுகள் வந்தால், உடனுக்குடன் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-25*

**திரு. இரா. தாமரைக்கனி:** நடவடிக்கை எடுத்தால் சரிதான். என்னுடைய தொகுதியிலுள்ள நிலவரத்தை நான் சொல்கிறேன். நீங்கள் தலைவராக இருக்கிறீர்கள். கடைக்காரர்கள் செய்கிற தப்புக்கு நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? பாவம். உங்களைக் கேட்டுக்கொண்டா தப்பு செய்கிறார்கள். அதனால் உங்களை ஒன்றும் சொல்லவில்லை. நீங்கள் வருத்தப்பட வேண்டாம். அதிகாரிகள் செய்கிற தப்புக்கு, அங்கே வேலை செய்கிறவர்கள் செய்கிற தப்புக்கு நீங்கள்தான் பொறுப்பு

என்று நான் சொல்லவில்லை, அதைத் தப்பு என்று சொல்லியிருக்கிறேன். நீங்கள் நடவடிக்கை எடுங்கள்.

Internet-இல் ஒன்றரை இலட்சம் பேருக்கு வேலை கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அது ஒரு ஏமாற்று வேலை என்றுதான் நினைக்கிறேன்.

மின்சாரக் கட்டணத்தை ஏற்றாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். விவசாய Pump set-டுகளுக்கு இன்னும் கூடுதலாக மின் இணைப்புக் கொடுக்கிற அளவிற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

மத்திய அமைச்சர் வாழப்பாடியார் ஒன்றைச் சொல்லி இருக்கிறார் தமிழ்நாடு தொழில் வெடி மருந்து நிறுவனம் காட்பாடியிலே இருக்கிறது, இப்போது புதிதாக Industries Secretary-யாக திரு. சீனிவாசன் அவர்களைப் போட்டு இருக்கிறார்கள், M.D. ஆக திரு. ஜோதி ஜெகராஜன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் உதவிப் பாதுகாப்பு அதிகாரியாக Ex-Service man-தான் இருக்கிறார். I.P.S. அதிகாரி அங்கே இல்லை. I.P.S. அதிகாரியைப் போட்டால்தான் வெடி மருந்துப் பொருட்களைக் கடத்தமாட்டார்கள். கோயம்புத்தூர் வெடிகுண்டு சம்பவத்தில் இங்கேயிருந்துதான் வெடிகுண்டுப் பொருட்கள் வந்து போயிருக்கின்றன என்று மத்திய அமைச்சரே சொல்லியிருக்கிறார். திருச்சூரிலே ஜானி என்ற ஏஜெண்ட் இருக்கிறார், அவர் மூலமாகத்தான் பொருட்கள் போயிருப்பதாக மத்திய அமைச்சரே சொல்லியிருக்கிறார். அதனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி I.P.S. அதிகாரியைப் போட்டு அதைக் கண்காணிக்க வேண்டும். ஏனென்றால் சாதாரணமானவர்கள் சொன்னதாக நாம் நினைக்கக் கூடாது, ஒரு மத்திய அமைச்சரே சொல்லியிருக்கிறார், கோவை சிறையிலே வந்து ....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அந்த மத்திய அமைச்சருடைய பேச்சு முழுவதையும் படித்திருப்பார் என்று கருதுகிறேன். எல்லாவற்றையும் அவர் ஏற்றுக்கொள்கிறாரா?

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைப்பற்றி அவர் சொன்ன கருத்துகளைத்தான் நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியுமே தவிர, அவர் சொல்லிய கருத்துகளை எல்லாம் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்.?



எங்களுக்கு தேவையானதைத்தான் நாங்கள் எடுத்துக்கொள்ள முடியும். உங்களுக்குத் தேவையானதை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள் (பலத்த சிரிப்பு) நான் என்ன செய்ய?

கோவை மத்திய சிறையிலே 32 வகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அதை மறுத்தார். இன்றைக்குப் பார்த்தால் Jailor-ஐ, Warden-ஐ அடிப்பதாகவும். அங்கே நிலைமை கட்டுப்படுத்தப்பட முடியவில்லையென்றும், tube light-கள் நொறுக்கப்பட்டதாகவும், காமிராக்கள் அடித்து நொறுக்கப்பட்டதாகவும் சொல்கி[illegible] பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. இந்த மாதிரி சட்டம் ஒழுங்குப் பிரச்சினை சிறைச்சாலைக்குள்ளேயே இருக்கிறது. அந்தக் கைதிகளை வேறு சிறைச்சாலைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் ...

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** துணைத் தலைவர் அவர்களே, கோவை சிறையிலே அதிகாரிகள் சோதனையிட்டது சம்பந்தமாக, நேற்றையதினம் 36 வகையான ஆயுதங்கள் எல்லாம் கைப்பற்றப்பட்டன என்று ஒரு தினப்பத்திரிகையிலே செய்தி வெளியாகியது. இது தொடர்பாக உடனடியாக சிறைச்சாலை அதிகாரிகளைக் கேட்டதில் அப்படி எந்தவிதமான ஆயுதங்களும் கைப்பற்றப்படவில்லை என்ற விவரத்தை மட்டும் அவர்கள் எனக்குத் தந்தார்கள். ஆனால், அதற்குப் பிறகு கைதிகளுக்கும் அங்கே இருந்த சிறைக் காவலர்களுக்கும் ஏற்பட்ட மோதலைப்பற்றி நேற்று பத்திரிகையிலே செய்தி வெளியாகியிருக்கிறது. அது குறித்தும் அவர்களிடத்திலே கேட்கப்பட்டபோது இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் ஏறத்தாழ 20 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. எனவே, சிறைக்குள்ளே யார் எந்தத் தவறைச் செய்தாலும் அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிறையிலே எந்த நிலையும் சீர்கேடாக இல்லை; எல்லாம் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏதாவது ஒரு பத்திரிகையிலே வந்தால் சரி, எல்லா பத்திரிகைகளிலும் செய்தி தினந்தோறும் வருகிறது. தினமும் மறுப்பு

அறிக்கை விட்டுக்கொண்டு, சாக்குப்போக்கு சொல்லக்கூடாது. அதைத் தீர்ப்பதற்கு . . . .

**மாண்புமிகு திரு. ஆவடி அருணா:** *மாண்புமிகு உறுப்பினர் சொன்ன குற்றச்சாட்டு தவறானது, உண்மைக்குப் புறம்பானது என்று சொல்லவில்லை. இப்படி ஒரு சம்பவம் நடந்தது. 20 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டுதான் பேசுகின்றேன்.*

**திரு. இரா. தாமரைக்கனி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து, நகர்ப்புறங்களிலே வீட்டைக் காலி செய்வது, நிலங்களைக் காலி செய்வது போன்ற நிகழ்வுகளைப்பற்றி திரு. ஞானசேகரன் சொன்னது மாதிரி குண்டர்கள் அட்டகாசம் மிகவும் மோசமாக இருக்கிறது. கோயம்புத்தூர் போன்ற இடங்களில் இதனால் மருந்து குடித்தே, இறந்துபோய் விடுகிறார்கள். இதனால் கொலைகள் எல்லாம் நடந்திருக்கின்றன. இதனை ஒரு தொழிலாகவே செய்கிறார்கள். அவர்கள் எந்தக் கட்சி ஆளுங்கட்சியாக வருகின்றதோ அந்தக் கட்சிப் பெயரையெல்லாம் பயன்படுத்துகிறார்கள். அவர்களையெல்லாம் நீங்கள் வைக்க வேண்டிய இடத்திலே வைத்து, நடவடிக்கை எடுத்தால் நன்றாக இருக்கும். இன்னும் தீவிரவாதிகள் நடமாட்டம் தமிழ்நாட்டிலே ரொம்ப இருக்கிறது என்று பொதுமக்கள் மத்தியிலே ஒரு அச்ச நிலைமை காணப்படுகிறது. கூலிப் படைகள் அதிகமாக இருக்கிறார்கள். திருச்சியிலே ஸ்ரீதர் இறந்த பிறகு, நேற்றுகூட ம.தி.மு.க. தொண்டர் ஒருவரைக் கொன்றுவிட்டார்கள். ஆகையினாலே, இந்த அச்ச நிலைமையைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

*முற்பகல் 11-30*

*இன்னொன்று, வெள்ளி திருப்பூர் காவல் நிலையத்திலே துப்பாக்கியை எடுத்துக்கொண்டு போகிறார்கள் சந்தன மரக் கடத்தல் வீரப்பனுடைய ஆட்கள். இப்போது பத்திரிகையிலே என்ன போடப்பட்டிருக்கிறது ? தேனி, கம்பம், கூடலூர் வன இலாகா அதிகாரிகள் வைத்திருந்த துப்பாக்கிகளை எடுத்துக்கொண்டு போய்விட்டார்களாம். இதெல்லாம் சினிமாவிலே நடக்கிற மாதிரி இருக்கிறது. தமிழ்நாடாகவா இருக்கிறது? இதற்கெல்லாம் காவல் துறை அதிகாரிகள் கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு அவர்களுக்கு நீங்கள் உத்தரவிட வேண்டும். போலீசுக்குள்ள அதிகாரங்களைக் கொடுங்கள். அப்போதுதான் பயம் இருக்கும். அவனைப் பிடித்துக்கொண்டு போய்விடுவானே, இவனைப்*



*பிடித்துக்கொண்டு போய்விடுவானே, துப்பாக்கிச்சூடு நடக்குமே, தடியடிப் பிரயோகம் நடக்குமே, அதனாலே நம்முடைய ஆட்சிக்கு கெட்டபெயர் வருமே, என்றெல்லாம் நீங்கள் நினைக்கக் கூடாது. தப்பு பண்ணியவன் எவனாக இருந்தாலும், தடியடிப் பிரயோகம் நடக்கட்டும், துப்பாக்கிச் சூடு நடக்கட்டும், அப்போதுதான் போலீஸ் என்றால் பயம் இருக்கும். இந்தக் காக்கிச் சட்டைக்கு மரியாதை இல்லாமல் போய்விட்டது. பொம்மை மாதிரி வந்து நிற்கிறார்கள். அடித்துப் போட்டு, கொலையெல்லாம் நடந்துவிட்ட பிறகு, எல்லாம் முடிந்த பிறகு வருகிறார்கள் சினிமாவில் வரும் போலீசைப்போல. அவர்களுக்கு என்ன Power இருக்கிறது? ஒன்றும் இல்லை. கேட்டால், மேலே இருந்து உத்தரவு வர வேண்டும் என்கிறார்கள். எங்கேயிருந்து, D.G.P. ஆபீஸிலேயிருந்தா, முதலமைச்சரிடம் இருந்தா, Home Secretary-யிடமிருந்தா? நீங்கள் அவர்களுக்கு அதிகாரத்தைக் கொடுங்கள். உங்களை நம்பி பொதுமக்கள் ஆட்சியை ஒப்படைத்திருக்கிறார்கள். அந்தப் பொதுமக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமில்லையா? பாதுகாப்பு இல்லாமல் அவன்பாட்டுக்கு போய்கொண்டு இருந்தால் எப்படி? அவனுக்குத்தான் ரைட்டா? கொலைகாரர்கள் தலைநிமிர்ந்து நடக்கிறார்கள். சபாநாயகருக்கு முன்னாலே வருகிறார்கள். ஆளுநருக்கு முன்னாலே வருகிறார்கள். சட்டசபைக்கும் வருகிறார்கள். அப்போது எங்களையும் அப்படிச் செய்யச் சொல்லுங்கள். எங்களுக்கென்ன கை இல்லையா, கால் இல்லையா, பிடிக்கத் தெரியாதா ? எல்லாம் பிடிக்கத் தெரியும்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *உணர்ச்சிவசப்படாமல் அமைதியாகப் பேசுங்கள்.*

**திரு. இரா. தாமரைக்கனி:** *உணர்ச்சிவசப்படக்கூடாது என்றால் எப்படி? போன சட்டசபைக் கூட்டத்திலே என்ன சொன்னார்கள். தீவிரவாதிகளை வளர விடமாட்டேன், விஷப் பாம்புக்கு பால் ஊற்ற மாட்டேன் என்று முதலமைச்சர்தானே சொன்னார்கள். இன்னும் மௌனமாகவே இருக்கிறார்கள். என்ன மௌனமோ, என்ன இராஜதந்திரமோ, ஒன்றும் புரியவில்லை. விரால் மீன் சிக்குகிற மாதிரி சிக்கும் என்று பார்க்கிறீர்களா? (சிரிப்பு)*

*சேலம் மாவட்டத்தில் மாசுக் கட்டுப்பாடு காரணமாக, ஜவ்வரிசி தொழிற்சாலை, தோல் தொழிற்சாலை எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. அவற்றைத் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

இன்னொன்று, வாழப்பாடி அவர்கள் சொன்ன மாதிரி, முரளி என்ற ஒரு இன்ஸ்பெக்டர் கோயம்புத்தூரிலே இருந்திருக்கிறார். அவரை திருச்சிக்கு மாற்றிவிட்டார்கள். அப்போது அவர் ஜீப்பிலே போகும்போது, ஒரு வெடிகுண்டை வீசி எறிந்திருக்கிறார்கள். அந்த வெடிகுண்டிலே ஐ.எஸ்.ஐ. முத்திரை எல்லாம் இருக்கிறது. நான் இதை அத்வானியிடம் கொண்டுபோய் காட்டப்போகிறேன், இந்த மாதிரி எல்லாம் மோசமாக இருக்கிறது என்று சொன்னார். இதற்கெல்லாம் கண்டிப்பாக நீங்கள் பதில் சொல்லுங்கள். பாகிஸ்தான் உளவாளிகள், இலங்கை தீவிரவாதிகள் எல்லாம், இந்த ஆட்சி வந்த பிறகு ஓடிவந்துவிடுகிறார்கள் என்று வாழப்பாடி சொல்கிறார். அதற்குப் பதில் சொல்லுங்கள், நடவடிக்கை எடுங்கள். இந்த நிலைமை நீடித்தால், அதைச் சொன்னாலும் வருத்தப்படுகிறீர்கள். அந்த ஆண்டவன் ஆனாலும், மேலே இருக்கிறவன் ஆனாலும் நம்மைக் காப்பாற்ற முடியாது. (குறுக்கீடுகள்) மேலே ஆட்சிப் பண்ணுகிறவன், வேறே ஒன்றும் இல்லை.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒரு தொகுதிக்கு ஒரு கிராமம் என்று அமைச்சர் அறிவித்திருக்கிறார். ஆனால், ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு கிராமம் என்ற அளவிலே அறிவிக்க வேண்டும். ஒரு தொகுதிக்கு ஒரு பஞ்சாயத்து; ஒரு தொகுதிக்கு இரண்டு பஞ்சாயத்தும் வருகிறது. அந்த அளவை வைத்து, ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒவ்வொரு கோடி என்று ஒதுக்கினால் சரியாக இருக்கும். ஒன்றியத்திலே ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒரு கோடி என்று ஒதுக்கினால் நன்றாக இருக்கும். அந்தப் பஞ்சாயத்திலே, அந்தக் கிராமத்தை எடுக்கிறபோது, அதிகாரிகள் ஆய்வு செய்து, Estimate போட்டிருப்பார்கள். அதையும் சேர்த்து, இத்தனை லட்சம், 50 இலட்சம், 1 கோடி என்று சொல்கிறீர்கள். ஆகவே, நீங்கள் அதை முழுமையாக புதிய அத்தியாவசியத் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, திருவள்ளூர் மாவட்டம் அம்பத்தூரை அடுத்து கள்ளிக்குப்பம் என்ற கிராமம் இருக்கிறது. அதிலே தாங்கல் ஏரி என்ற ஓர் ஏரி இருக்கிறது. இங்கே அம்பத்தூர் நகராட்சியிலேயிருந்து குப்பைகளை எல்லாம் கொட்டுகிறார்கள். அதனால், சுற்றுப்புறச் சூழல் எல்லாம் கெடுகிறது. அங்கேயுள்ள கிணறு, bore well ஆகியவற்றிலுள்ள தண்ணீரெல்லாம் கெட்டுவிடுகிறது. அதன் பக்கத்திலே புழலேரியிலிருந்து சென்னை நகருக்குத் தண்ணீர் supply இருக்கிறது. அங்குள்ள பொதுமக்கள் சுற்றுப்புறசூழல் கெடுகிறது என்று மறியல்செய்து கருப்புக்



கொடி எல்லாம் காட்டிப் போராட்டம் நடத்தி, மந்திரிகள், Director, Municipal Director எல்லோரையும் போய்ப் பார்த்தார்கள். (மணியடிக்கப்பெற்றது). அந்தக் கூட்டத்தில் அமைச்சரிடம் சமூக விரோதியைப் பற்றி ஏதோ சொல்லியிருப்பார்கள்போலத் தோன்றுகிறது. அதனாலே அமைச்சர் அவர்கள் உத்தரவு போட்டார்கள். என்ன போட்டார்கள் என்றால் அந்த இடத்திலே குப்பைகளைக் கொட்ட வேண்டாம் என்று. அப்படி உத்தரவு போட்டும், அங்கே குப்பைகளைக் கொட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11-35

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அந்த இடத்தைப் பார்த்தார்களா? அல்லது கோரிக்கைகளை இவர் வீட்டிற்கு அவர்கள் வந்து கொடுத்தார்களா? எனக்கு ஒன்றும் விவரம் புரியவில்லை. ஆனால் அந்த இடத்திலே இந்தக் குப்பைகளைக் கொட்டுவதற்கு இதைவிட அந்தப் பகுதியிலோ அல்லது அந்தச் சுற்று வட்டாரத்திலோ, வேறு இடமே கிடையாது. அங்கேதான் குப்பைகளைக் கொட்டி ஆகவேண்டும். பல இடங்களிலே குப்பைகளைக் கொட்டி, சுகாதாரக் கேடு ஏற்பட்டதனாலே, எந்தவிதமான குடிதண்ணீருக்கும் தேவையில்லாத இடமும், அதுபோன்று பொது மக்கள் சுற்று வட்டாரத்திலே வசிக்காத இடமுமாகப் பார்த்துத்தான் அந்தக் குப்பைகளைக் கொட்ட வேண்டுமென்று அந்த நகராட்சியே தீர்மானம் போட்டு, யார் போராட்டம் நடத்துவதற்குத் தலைமை வகித்தார்களோ, அவர்களே இந்தக் கூட்டத்தில் எதிர்ப்பு தெரிவிக்காமல் இருந்து, அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் போன்று அவர்களுடைய இயக்கத்தைச் சார்ந்தவர்கள் சிலபேர் கலந்துகொண்டு, அதற்கான நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்களே தவிர, இந்த நகராட்சியினுடைய பொதுமக்கள் யாரும் அதிலே அவ்வளவு அக்கறை செலுத்தவில்லை. அந்தப் பகுதியிலே நில ஆக்கிரமிப்பு செய்தவர்களும், அந்த நிலத்தை அதிக விலைக்கு விற்க வேண்டுமென்று கருதுகின்றவர்களுமாகிய சிலபேர் தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி அதிக நேரம் எடுத்துக்கொண்டுவிட்டீர்கள். சீக்கிரம்பேசி முடியுங்கள். ஏற்கெனவே 20 நிமிடம் ஆகிவிட்டது.

*[1999 பிப்ரவரி 22*

**திரு. இரா. தாமரைக்கனி:** எங்கள் கட்சியினுடைய வேறு உறுப்பினருக்கு வாய்ப்பு கொடுக்கவில்லை. எனக்கு இன்னும் 5 நிமிடம் கொடுங்கள். வேறு ஒன்றுமில்லை. அந்த இடத்தைப் போய்ப் பார்த்தார்களா என்று கேட்டார்கள். உண்மையிலேயே அந்த இடத்தைப் போய்ப் பார்த்தோம். நான் போய்ப் பார்த்தேன். நான் மட்டுமல்ல. ஆருண் எம்.எல்.ஏ. போய் அந்த இடத்தைப் பார்த்தார். பாட்டாளி மக்கள் கட்சி எம்.எல்.ஏ. போய்ப் பார்த்திருக்கிறார் அதேபோன்று எல்லா கட்சிகளுடைய பிரமுகர்களும் பார்த்திருக்கிறார்கள். முதலமைச்சரிடம் கொடுக்கச் சொல்லி இந்த மனுவைக் கொடுத்திருக்கிறார்கள். அமைச்சரிடம் கொடுக்கச் சொல்லி கொடுத்திருக்கிறார்கள். அதை நான் பார்க்காமல் ஒன்றுமில்லை. 20,000 பொதுமக்கள் வசிக்கிறார்கள். அதனால் சுற்றுப்புறச் சூழல் கெடுகிறது. அதிலே அமைச்சர் கொஞ்சம் கோபமாக இருக்கிறார். Tension' ஆகிறார். முதலமைச்சரிடம் சொல்லி, அந்த இடத்தில் அந்தக் குப்பைகளைப் போட வேண்டாம் என்று சொல்லிவிடுங்கள்.

அடுத்ததாக, ஆளுநர் உரையில் ஊழலை ஒழிக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஸ்ரீவில்லிபுத்தூரில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. அதிலே சுமார் ரூ.15 கோடி வரைக்கும் மோசடி பண்ணியிருக்கிறார்கள். எங்கெங்கே என்ன பண்ணியிருக்கிறார்கள் என்ற விவரம் என்னிடத்திலே இருக்கிறது. மின்சாரம் இல்லாமல் இருக்கிறவர்களுக்கு T.V. Loan கொடுத்திருக்கிறார்கள். சாலையிலே போகின்றவர்களுக்கு ரூ.20,000 மோட்டார் சைக்கிள் வாங்குவதற்குப் பணம் கொடுத்திருக்கிறார்கள். கோரம் இல்லை. Board கலைந்து போய்விட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் நீட்டித்துக் கொண்டு போனால் இதிலேயே சபையின் நேரம் முடிந்துவிடும். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** 1½ வருடத்திற்கு முன்பு ராஜினாமா பண்ணியவுடனே புதியதாக உறுப்பினர்கள் வந்து, கோரம் இல்லாமல் அங்கு முறைகேடுகள் ரொம்ப நடந்திருக்கின்றன. பத்திரிகையில் நெற்றிக்கண்ணில் வந்திருக்கிறது. பாருங்கள். இந்த மாதிரி காலண்டர் எல்லாம் அச்சடித்து உங்கள் ஆட்சிக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்துகிறார்கள். எல்லா பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. நீங்கள் நடவடிக்கை எடுங்கள். ரொம்ப தவறு பண்ணியிருக்கிறார்கள். அதுவும் என் தொகுதியில் நடந்திருக்கிறது. இன்னும் ஒன்று. ஒரேயொரு point



*1999 பிப்ரவரி 22] [திரு. இரா. தாமரைக்கனி]*

இருக்கிறது. அதாவது என்னுடைய வத்திராயிருப்பு ஒன்றியத்திலே இரண்டு இடங்களில் அரசு விழா நடக்கிறது. M.L.A. பெயரே கல்வெட்டில் போடவில்லை. Collector வந்து அதைத் திறக்கிறார்கள். அரசாங்க ஆணையில் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஆணை எண்.366, பிரிவு 2 (அ) 34, நாள் 16-12-1997-ல் தொகுதி M.L.A. பெயர் போட வேண்டுமென்று அரசாங்க உத்தரவே இருக்கிறது. ஆனால், அந்தப் பக்கத்திலே உள்ள வத்திராயிருப்பு ஒன்றிய Vice-Chairman, Collector, எல்லாம் என் பெயரைப் இவர்கள் கல்வெட்டில் போடாமல் இருக்கிறார்கள். தொகுதி மக்கள் என்மேல் பிரியமாக இருக்கிறார்கள். கல்வெட்டில் என் பெயர் கிடையாது. இந்த மாதிரி அரசு உத்தரவை மீறி செயல்படுகிறார்கள். இதனாலே இப்போது நான் Court-க்கும் போனால்கூட Collector மேலேயும், Vice-Chairman, Chairman மேலேயும் நடவடிக்கை எடுக்க முடியும். இதிலே நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்கள் என்று நினைக்கிறேன். இந்தத் தவறு மீண்டும் வரக்கூடாது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். Petition படம் எல்லாம் இருக்கிறது. இதில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உரையை முடித்ததாகக் கருதப்படுகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** இந்த ஆளுநர் உரையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுகூட வேண்டாமா? (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

*** திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைமீது என்னைப் பேச அழைத்தமைக்கு தங்களுக்கு எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நன்றியைச் சொல்லி, தமிழகத்தில் உழவும், நெசவும், மூளையும், இதயமும் போன்று செய்யக்கூடிய ஒரு தொழில் என்பது உலகறிந்த உண்மை. தற்போது சேலம் தெற்குப் பகுதியில் எடப்பாடி, கே.கே.நகர். எளம்பிள்ளை போன்ற பகுதிகளில், நாமக்கல் மாவட்டத்தில் குமாரபாளையம், பள்ளிப்பாளையம் மற்றும் திருச்செங்கோடு பகுதிகளில் விசைத்தறி, சாயத் தொழில் மற்றும் கைத்தறித் தொழில் ஆகியவை

இன்று பிராண வாயுவிற்காக பிச்சைக் கேட்டுக்கொண்டிருக்கின்றன என்பதனை இங்கே நான் சொல்லிக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-40*

இந்தத் தொழில் ஏராளமான ஏழை மக்களின் வயிறு சம்பந்தப்பட்டது. நாளுக்குநாள் கேட்பாரற்று நலிந்துபோய்விட்ட இந்தத் தொழிலின் இன்றைய நிலைபற்றிச் சொல்ல வார்த்தையில்லை. இத்தனைக்கும் இந்தக் கைத்தறித் துணி ஒருகாலத்தில் பேரறிஞர் அண்ணாவால் தோளில் சுமந்து விற்கப்பட்ட வரலாறு படைத்ததாகும். மாசுக் கட்டுப்பாடு என்னும் கொலைவாளின் கண்மூடித்தனமான தாக்குதலால் குற்றுயிரும், குலை உயிருமாகக் கிடக்கிறது. இந்தத் தொழிற்சாலைகளின் வாசல்களுக்கு சீல் வைத்துவிட்டதாக அரசு தவறாக எண்ணிக்கொண்டு இருக்கிறது என்று எண்ணுகிறேன். அவர்களுடைய வாசலுக்கு அல்ல. ஏழைத் தொழிலாளியின் வயிற்றுக்கு வைக்கப்பட்ட படினி முத்திரையாகும். இதை மிகத் துயரத்தோடு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த சீல் வைக்கப்பட்டுள்ளதால் சாயப்பட்டறைகள் மட்டுமல்ல; அதனைச் சார்ந்த துணைத் தொழில்கள், விசைத்தறி மற்றும் கைத்தறி உதிரிபாகங்கள் விற்கக்கூடிய அத்தனை கடைகளும் இப்பேது எந்தவிதமான விற்பனையும் இல்லாமல் மிகக் கொடுமையான முறையிலே அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய தொழிலாளர்கள் இப்போது குடும்பம் குடும்பமாக ஊரைக் காலி செய்து கொண்டு திருப்பூர் போன்ற பகுதிகளுக்குச் சென்றுகொண்டிருக்கிறார்கள் என்பதை நம்முடைய முதலமைச்சருக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதலாளியிடத்திலே அந்தத் தொழிலாளி சென்று தொழில் இல்லை advance கொடுங்கள் என்று கேட்டால் அந்த 'முதலாளி விற்பனை' இல்லை, உற்பத்தி இல்லை நான் எங்கு செல்வது என்று சொல்லி அந்த முதலாளியும் அழுகிறான்; தொழிலாளியும் சாகிறான். இந்த நிலையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு உணர்ந்து அந்த ஏழைத் தொழிலாளர்களைக் காப்பாற்ற தகுந்த நடவடிக்கையினை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உழவு என்றால் சோறு, ஆடை என்றால் மானம் என்பது உலகறியும். ஆனால் ஆடையினால் தொழிலாளர்களுடைய மானமும் போய், சோற்றுக்காகத் தவிக்கிற நிலை இப்போது எங்களுடைய பகுதியிலே



ஏற்பட்டிருக்கிறது. நீரும் நிலமும் காற்றும் மாசுபடக்கூடாது என்பதிலே எல்லோருக்கும் அக்கறை உண்டு. அதே நேரத்தில் எப்படி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் மூலமாக கிராமத்தின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தீர்களோ, சமூக ஒற்றுமைக்காக சமத்துவபுரத்தை நமது முதல்வர் கலைஞர் அவர்கள் கண்டுபிடித்தாரோ அதேபோல தொழிலுக்கு முக்கியத்துவம் தந்து, ஐந்தாவது இடத்தில் இருந்த தமிழகத்தை இரண்டாவது இடத்திற்குக் கொண்டுவர மூன்றாண்டு பாடுபட்டாரோ, அதேபோல இந்த ஏழை நெசவாளர்கள்மீது தனிக் கவனம் செலுத்த வேண்டும். செலுத்துவார்கள் என்ற முழு நம்பிக்கையோடு அந்த பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் என்னிடத்திலே முறையிட்டிருக்கிறார்கள்.

தமிழக முதல்வர் அவர்களே, குமாரபாளையத்தில் நடந்த ஓர் ஏழைத் தாயினுடைய பிரச்சினையை இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்லும்போது கனிவோடு விசாரித்து மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஒரு மிகத் தெளிவான திட்டத்தினை சொல்லி, தவறு செய்தவர்களை தண்டித்து. பாதிக்கப்பட்டவர்களுக்கு உங்களுடைய அனுமதியோடு நீங்களே ஒரு இலட்சம் ரூபாய் வாரி வழங்கிய அந்த வள்ளல் குணம் உங்களுடைய இதயத்தில் இருக்கிறது எனபது எனக்கு மட்டுமல்ல, தமிழகத்தில் இருக்கக்கூடிய ஏழை எளியவர்களுக்கெல்லாம் உங்கள் மீது நம்பிக்கை இருக்கிறது என்பதனை இன்று நான் மட்டுமல்ல, அண்ணா தி.மு. கழகத்தில் இருக்கக்கூடிய அருமை நண்பர் தாமரைக்கனி அவர்கள் இங்கே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால் உங்கள் உள்ளத்தினுடைய இனிமை அனைவருக்கும் தெரியும். ஆனால் ஏழைத் தொழிலாளர்கள் ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் என்பவர் இந்த நாட்டு மக்கள் எல்லோருக்கும் வேண்டியவர்; பொதுவானவர்; யார் தவறு செய்தாலும் நடவடிக்கை எடுப்பார்கள். அந்த அடிப்படையிலேதான் நான் பிரச்சினையைச் சொன்னேன். முதலமைச்சருக்குத்தானே பொறுப்பு இருக்கிறது. ரோட்டிலே போகிறவர்கள் வருகிறவர்களிடம் எல்லாம் ஒன்றும் சொல்ல முடியாது. அதனால் தவறு யார் செய்தாலும் நடவடிக்கை எடுங்கள், partiality காண்பிக்காதீர்கள் என்ற அடிப்படையிலேதான் நான் சொன்னேனே தவிர, வேறு ஒன்றும் அல்ல. அதை அவர்கள்தானே

செய்ய வேண்டும். வேறு யார் செய்ய வேண்டும்? அந்த அடிப்படையிலேதான் நான் பேசினேன்.

*முற்பகல் 11-45*

**திரு. ஐ. கணேசன்:** நன்றி, ஒத்துக்கொண்டதற்கு நன்றி. ஏழைத் தொழிலாளர்கள் உற்பத்தி செய்கிற அந்தக் கைத்தறித் துணியை பேரறிஞர் பெருந்தகை, அறிவுலக மேதை, அறிவுக்கடல் அண்ணா அவர்களும் நீங்களும் தெருத் தெருவாக விற்று, அந்தத் தொழிலாளர்களைக் காப்பாற்றினீர்கள். ஆனால், இப்போது இந்த மாசுக் கட்டுப்பாடுத் துறையின் மூலமாக உத்தரவினைப் போட்டு, எங்களுடைய பகுதியிலே தொழிலாளர்கள் சோற்றுக்குத் திண்டாடக்கூடிய அவலநிலை ஏற்பட்டிருக்கிறது. அதேபோல நாமக்கல் பகுதியிலேயும், இராசிபுரம் முதலிய பகுதிகளிலேயும் ஆத்தூர் பகுதியிலேயும் மாசுக் கட்டுப்பாடு என்ற கொலைவாளால் ஜவ்வரிசி மில்கள் அத்தனையையும் குத்திக் கிழித்திருக்கிறார்கள். அந்தத் தொழிலாளிகள் வேலையிழந்து சோற்றுக்காகத் திண்டாடுகிறார்கள் என்பதனை நம்முடைய முதல்வர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன். முதல்வர் அவர்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். எங்கள் பகுதி மக்கள் தங்கள் ஆத்திரத்தினால் சொல்வதை நான் இந்த அவையிலே சொல்வதற்கு வெட்கப்படுகிறேன். இருந்தாலும் என்னுடைய கடமை, நம்முடைய முதல்வர் அவர்களுககு ஒரு கெட்ட பெயர் வரக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். 'கலைஞர் ஆட்சிக்கு வந்தால் மழை வராது' என்று சொல்வார்கள். ஆனால், கலைஞர் ஆட்சிக்கு வந்த பிறகு மழை நன்றாக பெய்கிறது. விவசாயம் நன்றாக வருகிறது (மேசையைத் தட்டும் ஒலி), ஆனால், தொழிற்சாலைகளை மூடிவிட்டார்களே, தொழிற்சாலைகள் முடங்கிவிட்டதே, சோறு கிடைக்கவில்லையே என்று மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக அலைகிறார்கள். இந்த நிலைக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் ஒரு நல்ல முடிவினை எடுத்து, அப்படிச் சொன்னவர்களின் சொல் தவறு என்பதனை நிரூபிக்கக் கூடிய வகையிலே, அந்த மாசுக் கட்டுப்பாடு வாரிய அதிகாரிகளை வரவழைத்துப் பேசி, அந்த ஏழை எளியவர்களினுடைய துயரைப் போக்க, நீங்கள் எப்படி திருப்பூரிலே சுப்பராயன் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க 2, 3 ஆண்டு காலம் அதை நீட்டித்துக் கொடுத்தீர்களோ, அதேபோல குமாரப்பாளையம், பள்ளிப்பாளையம், இராசிபுரம் போன்ற என்னுடைய தொகுதியிலடங்கிய ஆயிரக்கணக்கான



பகுதிகளிலே வறுமையோ, வறுமை! கொடுமையோ, கொடுமை! என்ற முறையிலே நடக்கிறது, அதை நீங்கள் எப்படியாவது மாற்ற வேண்டும். சிறு தொழில் அடிப்படையில் சாயப்பட்டறை நடத்துகிறவர்களுக்கு Loan கிடையாது என்று மாசுக் கட்டுப்பாடுத் துறை அறிவிக்கிறது. அந்தச் சிறு தொழில் செய்யக் கூடியவர்களுக்கும் 25% மத்திய அரசு மானியமும் 25% மாநில அரசு மானியமும் 50% வங்கிக் கடனும் வழங்க அரசாங்கம் ஒரு தெளிவான உத்தரவினைக் கொடுத்தால், அந்தச் சிறு தொழில் சாயப்பட்டறை உரிமையாளர்களும் மாசை உடனடியாகத் தடுப்பதற்கு, வெட்டி எறிவதற்கு நடவடிக்கை எடுப்பார்கள். மாசுபடுவதை இந்தத் தமிழ் நாட்டு மக்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். தண்ணீரைக் கடவுளாகவும், பூமியை பூமாதேவியாகவும் பணங்கக் கூடிய தமிழ் மக்கள், அவை மாசுபடுவதை ஒத்துக்கொள்ள மாட்டார்கள். இருப்பினும். இந்தச் சாயபபட்டறைகளைச் சுத்திகரிக்க வேண்டுமானால், நீங்கள் அந்தச் சிறு தொழில் செய்பவர்களுக்கு மத்திய மாநில அரசுகள் கொடுக்கக்கூடிய 50 சதவீதத்தையும் வங்கிகள் கொடுக்கும் 50 சதவீதத்தையும் இந்த அரசாங்கம். அந்தச் சிறு தொழிலை நடத்துகின்ற, சாயப்பட்டறை நடத்துகின்றவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டும் (மணியடிக்கப்பெற்றது). அதே வழியிலே, இந்த ஜவ்வரிசி மில்லை நடத்துகின்ற அந்த உரிமையாளர்களுக்கும் மத்திய மாநில அரசுகளின் மானியத்தோடு வங்கிக் கடனையும் கொடுத்தால் அவர்கள், அவர்களுடைய வளத்திற்காக மட்டும் அல்ல, இந்த நாட்டு மக்களினுடைய வளத்திற்காகவும் நிச்சயமாகப் பாடுபடுவார்கள்.

ஏழை விவசாயிகள் அனைவரும் நம்முடைய கலைஞர் அவர்கள் சொன்னதைச் செய்வார்கள் என்று சொல்வதை நானும் ஒத்துக்கொள்கிறேன். அவர்கள் நிச்சயமாக 5 ஆண்டுகளிலே, அருமைச் சகோதரர் திருநாவுக்கரசு அவர்கள் சென்ற ஆண்டு சொல்லும்போது 5 ஆண்டுகளிலே கொடுத்துவிடுவேன் என்று சொன்னார். ஆனால், 3¼ ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னும் 1¾ ஆண்டுகள்தான் இருக்கின்றன (குறுக்கீடு) ஆகவில்லையா, பரவாயில்லை. (சிரிப்பு) 3 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னும் இரண்டு ஆண்டுகள்தான் இருக்கின்றன. எப்படியாவது, இந்த ஆண்டிலேயே இந்த ஆளுநர் உரைக்கே கிரீடம் வைத்ததுபோல, விவசாயிகளுக்குக் கிரீடம் வைத்ததுபோல கரும்புக்கு 1000 ரூபாய் என்று (குறுக்கீடு) கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1000 ரூபாய் என்று நம்முடைய முதல்வர் அவர்கள் இந்த அவையிலே அறிவிக்க வேண்டுமென்று எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய

சார்பாக, தேர்தல், வாக்குறுதியை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடத்திலே பேசி முடித்து விடுகிறேன். கூட்டுறவு முறையிலே.....

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கரும்புக்கு விலையை தற்போது மத்திய அரசாங்கம்தான் நிர்ணயம் செய்கிறது. அவர்களுடைய பரிந்துரை விலையை ஏற்று – மத்திய அரசாங்கத்தினுடைய பரிந்துரை விலையை ஏற்று – மாநில அரசாங்கம் recommended price அதாவது பரிந்துரை விலையாக ஒன்றிரண்டு முறை இதுவரை அறிவித்து வந்தது. இந்த ஆண்டு ஆலை அதிபர்கள் எல்லாம் சென்னை உயர்நீதிமன்றத்திலே வழக்குப்போட்டு, அந்த வழக்கில், மாநில அரசாங்கம் விலையைப் பரிந்துரை செய்யக்கூடாது என்று தற்போது தடை விதிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** அதேபோல, கூட்டுறவுத் துறையிலே அமைக்கப்படும் சாயப்பட்டறைகளுக்கு எப்படி வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அரசு நிலத்தைத் தேர்ந்தெடுத்து அங்கு கட்டடங்கள் கட்டி, மின்சாரம், குடிநீர் அனைத்தையும் வழங்குகிறதோ அதேபோல் அரசாங்கமே நிலத்தைத் தேர்ந்தெடுத்து, அங்கு சுத்திகரிப்புத் தொட்டி, இயந்திரங்கள் அனைத்தையும் கட்டி அந்தத் தொழிலை செய்யக்கூடியவர்களுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாசுக் கட்டுப்பாடு துறை என்பது இதுவரை ஒரு தெளிவான விதிமுறையை சொல்லவேயில்லை. இது ஒரு சிதம்பர இரகசியமாகவே இருக்கிறது. இந்த முறையிலே, இந்த விதியிலே நீங்கள் தொட்டி அமைக்க வேண்டும், மருந்துகளைப் போட வேண்டும், இயந்திரம் வாங்க வேண்டும் என்று இதுவரை அவர்கள் சொன்னதாகச் சரித்திரமேயில்லை. ஒன்றிரண்டு இன்ஜினியர்களைக் காட்டுகிறார்கள். அவர்கள் மூலமாக பல இலட்ச ரூபாய்களைப் பெற்றுக் கொண்டு, அந்த இன்ஜினியர்கள் கொடுப்பதை மட்டும் அங்கே அனுமதிக்கிறார்கள் என்பதனை ஒரு குற்றச்சாட்டாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.



அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே, நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 234 சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஏகோபித்த விருப்பம், ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், துணை சபாநாயகர் தொகுதி உட்பட, ஆண்டிற்கு ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்கள் அறிவிக்க வேண்டும் என்று, கேட்டுக்கொள்கிறேன்.

குமாரபாளையத்தில், பொதுச் சுத்திகரிப்பு நிலையத்திற்காக மத்திய அரசு 6 கோடி ரூபாய் கொடுத்து, பல ஆண்டுகளாக இன்னும் அது பயன்படுத்தப்படாமல் இருப்பதினாலேதான், இந்தச் சாயப்பட்டறையின் கழிவுநீரை பொதுச் சுத்திகரிப்பு நிலையத்தில் எடுத்துக்கொள்வார்கள் என்று நினைத்த காரணத்தினால் அவர்கள் ஏமாந்து விட்டார்கள். அதையும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, குமாரபாளையத்திற்கும் இதை நீட்டித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தனிப்பட்டவர்களுடைய சாயப் பட்டறைகளுக்கும் கூட்டுறவுச் சாயப் பட்டறைகளுக்கும் நீங்கள் அளிப்பதைப்போல் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி சம்பந்தமாக இரண்டே இரண்டு விண்ணப்பத்தினை மட்டும் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

எடப்பாடி காவல் நிலையம் வெள்ளைக்காரன் காலத்திலே குதிரை லயாகமாக இருந்த ஒரு காவல் நிலையம் ஆகும். வெள்ளைக்காரன் போன பிறகும் அது அப்படியே குதிரை லயாகமாக....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குதிரை லயாகம் இல்லை. குதிரை லாயம்.

**திரு. ஐ. கணேசன்:** குதிரை லாடம் (சிரிப்பு) ஏதோ ஒன்று. Thanks Sir. துணைச் சபாநாயகர் அவர்களே, நேரம் இல்லையென்று சொல்கிறீர்கள். (சிரிப்பு) நீண்ட காலத்திற்கு முன்னால் கட்டப்பட்ட அந்தக் காவல் நிலையம் ? அங்கு கைதிகளைப் பிடித்து இரவிலே வைப்பதே இல்லை. மாண்புமிகு கலைஞர் முதல்வர் அவர்களே, சிரிப்பதற்காகச் சொல்லவில்லை. (சிரிப்பு) கைதிகளைப் பிடித்து இரவிலே வைப்பதேயில்லை. காரணம், நாமேபோய் அங்கே பேசும்போது வேகமாகத் திரும்பினால்கூட அப்படியே கொட்டுகிறது. புழு, பூச்சி,

பாம்பு, பல்லி ஆகியவை இருக்கின்றன. இன்னும் பல பாம்புகள் இருப்பதாக அங்கே இருக்கக்கூடிய போலீஸ்காரர்கள்கூட (குறுக்கீடு) ஆமாம், பாம்புங்க, Bomb இல்லை. பாம்புகள் அங்கே இருப்பதாகச் சொல்லிக்கொண்டு போலீஸ்காரர்கள் அங்கே இரவில் உள்ளே செல்ல மறுக்கிறார்கள்; பயப்படுகிறார்கள். தயவுசெய்து முதலமைச்சர் அவர்களுடைய இலாகாவில் உள்ள அந்தப் போலீஸ் நிலையத்தை இந்த முறை நீங்கள் நவீன வசதியுடன் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

அதேபோல முதல்வரவர்களுக்கு இன்னொன்றையும் சுட்டிக்காட்டுகிறேன். எங்களுடைய கால்நடை மருத்துவமனை இடிந்து விழுகிறது. மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள், வந்தார்கள். பார்த்தார்கள். மிகத் தெளிவாகி இருக்கும். Committee Chairman-ஐ விசாரியுங்கள், அல்லது அன்பு அண்ணன், இராமனை விசாரியுங்கள், டாக்டர் எவ்வளவு மோசமாக, எவ்வளவு கீழ்த்தரமாக இருக்கிறது. அதை உபயோகிக்கவே முடியாது என்று பொதுப்பணித் துறை பல ஆண்டுகளுக்கு முன்னாலே சான்றிதழ் கொடுத்திருக்கிறது. 1991-லே அதற்கு மதிப்பீடு போடப்பட்டது. 9 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு போட்டார்கள். இதுவரைக்கும் இந்த அவையிலே 1996-லே கேட்டேன். முன்னாள் கால்நடைத் துறை அமைச்சர் இது கட்டப்படும் இந்த ஆண்டு என்று அப்போது உத்தரவாதம் கொடுத்திருந்தார். (குறுக்கீடு) நீங்கள் இல்லை, முன்னாள் அமைச்சர் ஆனால் இதுவரைக்கும் கட்டவில்லை. அது ஒரு சாதாரண ஓலைக் கொட்டகையிலே வாடகைக்கு சின்ன இடத்திலே இருக்கிறது. மருத்துவமனைக்கு அங்கே எந்த வசதியும் இல்லை. தயவு செய்து என்னுடைய கோரிக்கை, இந்த இரண்டை மட்டும் செய்யுங்கள் என்பது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள். நீங்கள் ஏன் திரும்பித் திரும்பி அவர்களை பார்த்துக்கொண்டே பேசுகிறீர்கள்.

**திரு. ஐ. கணேசன்:** உங்களுக்கும் சேர்த்துத்தான். துணை சபாநாயகரையும் சேர்த்து, சபாநாயகரையும் சேர்த்து, அமைச்சர்களையும் சேர்த்து, சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்த்துக் கேட்கிறேன். தொகுதி வளர்ச்சி நிதி என்கிற ஒன்றுதான் எங்களைக் காப்பாற்றுகிறது. அதிலேயிருந்துதான் பொதுமக்கள் கொடுக்கிற விண்ணப்பத்திலே ஏதாவது தேர்ந்தெடுத்து இதைச் செய்யுங்கள் என்று நாங்கள்



சொல்லுகிறோம். ஆனால், நேர்மையான முறையிலே செய்யச் சொல்லுங்கள். இதிலே ஒரு பைசாகூட எந்த வகையிலேயாவது தில்லுமுல்லு நடக்கிறது என்றால் என்னையும் விடாதீர்கள். அடுத்த தடவை சீட்டே கொடுக்காதீர்கள். ஆனால் நீங்கள் M.L.A.-க்களைக் காப்பாற்ற வேண்டும். உங்கள் கட்சி, மற்றவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற நினைப்பு இருந்தால் 50 இலட்சம் என்கிறார்கள், வேண்டாம், அதிக ஆசை. ஒரு கோடி (சிரிப்பு) இல்லை. 12 ஆயிரம். 14 ஆயிரம் கோடிக்குப் பட்ஜெட் போடுகிறார்கள். 234 கோடி தொகுதி வளர்ச்சிக்குத்தானே ? M.L.A. வீட்டுக்குக் கொண்டு போவதற்காகவா கேட்கிறேன் ? தொகுதி வளர்ச்சிக்கு ஒரு கோடியாக கொடுத்து எங்களை கொஞ்சம் மானத்தோடு ஊரிலே உலவ விடுங்கள் என்று சொல்லி, இந்த வாய்ப்பினை வழங்கியதற்காக நன்றியைச் சொல்லி, அடுத்தமுறை கள்ளச்சாராயத்தைப் பற்றிப் பேசிக் கொள்ளலாம். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் பேசுகின்ற பொழுது, பள்ளிப்பாளையம், குமாரபாளையம் ஆகிய இடங்களிலே இப்பொழுது Water Board River Action Plan என்று எடுத்திருக்கிறது. அந்த River Action Plan-ல் அதாவது மாசுக் கட்டுப்பாடு வாரியம், அதேபோல குடிநீர் வடிகால் வாரியமெல்லாம் சேர்ந்து கட்டுகின்றபொழுது அவர்கள் ஒரு சுத்திகரிப்பு நிலையத்திற்கு ஒரு standard-ஐ இப்பொழுது வைத்திருக்கிறார்கள். அதிலே, சாயப் பட்டறையிலிருந்து வரக்கூடிய கழிவு நீரைக் கலப்பதற்கு நாங்கள் அந்தப் பணத்தைச் செலவிட முடியாது, அதற்குத் தனியாக நீங்கள் Plant போட வேண்டும் என்று சொல்கிறார்கள். இதெல்லாம் குடிசைத் தொழிலாகச் செய்து கொண்டிருக்கின்ற காரணத்தாலே அரசே அதற்கு மானியத்தைக் கொடுத்து அதற்குத் தனியாக ஒருTreatment Plant போடுவதாக இருந்தால், அதோடு இணைத்துப் போட்டு, ஏன் என்றால், வீட்டிலிருந்து வரக்கூடிய கழிவுநீரும், சாயப்பட்டறை நீரும் ஒன்றாக வந்து விழுகிறது. குமாரபாளையம், பள்ளிப்பாளையம் என்ற இரண்டு இடங்களிலும் நமக்குப் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த River Action Plan-லேயே நீங்கள் - தனியாக நமக்கு மானியமே வேண்டாம் அதிலே—அதிலே ஒவ்வொருவருக்கும், மத்திய அரசு கொடுக்க வேண்டிய மானியம், அதேபோல உங்களுக்குப் வங்கிக் கடன் எல்லாம் சொன்னார்கள். நீங்கள்—இணைத்துக் கொடுத்துவிட்டீர்கள் என்று

சொன்னால் சாக்கடை நீரை பிரிக்கவே முடியாது. ஆகவே, இதற்கு எல்லாம் சேர்த்து River Action Plan-லேயே சேர்த்து சானார்பாளையத்திலேயும், குமாரபாளையத்திலும் நிலம் கையகப்படுத்துவதற்கு இடத்தைத் தேர்வு செய்து இருக்கிறீர்கள். பள்ளிப்பாளையத்திலே இன்னும் இடம் கிடைக்கவில்லை. ஆகவே, இதையெல்லாம் மாண்புமிகு முதல்வரவர்கள் River Action Plan-லேயே சேர்த்து சானார்பாளையத்திலேயும் குமாரபாளையத்திலும் நிலம் கையகப்படுத்துவதற்கு இடத்தை தேர்வு செய்து இருக்கிறீர்கள். பள்ளிப்பாளையத்திலே இன்னும் இடம் கிடைக்கவில்லை. ஆகவே, இதையெல்லாம் மாண்புமிகு முதல்வரவர்கள் River Action Plan-லேயே சேர்த்துச்செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு நம்முடைய விவசாயத் துறை அமைச்சரவர்கள் சொல்கின்றபொழுது, இந்த ஆலை உரிமையாளர்கள் எல்லாம் இடைக்காலத் தடை வாங்கிவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். நாம் தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருக்கிறோம்: கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக நீங்கள் அறிவியுங்கள். ஆலை முதலாளிகள் எப்படியிருந்தாலும் stay vacate பண்ணி, நீங்கள் உடனடியாக அறிவிக்க வேண்டுமென்று...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *டாக்டர் வை. இராமசாமி.*

*நண்பகல் 2-10*

***டாக்டர் வை. இராமசாமி:** *சட்டப்பேரவைத் துணைத் தலைவரவர்களே, இவ்வாண்டு நம்முடைய சட்டமன்றத்திற்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த இந்த உரையை வரவேற்று விவாதத்திலே கலந்துகொள்வதற்கு வாய்ப்பளித்தமைக்காகத் தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய சிறப்பான திட்டங்கள் நாடு முழுவதும் போற்றப்படுகின்றன. அவற்றில் மிகவும் முக்கியமானது சமத்துவபுரம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், தொகுதி மேம்பாட்டு நிதி ஆகிய நான்கைப் பற்றியும் முக்கியமாக நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த ஜனவரித் திங்கள் 24 ஆம் நாள் அன்று பண்ருட்டித் தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள சமத்துவபுரத்தை முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்து பெருமைப்படுத்தினார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றியை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அவர்களோடு வந்து சிறப்பித்த அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*



அண்ணா மறுமலர்ச்சித் திட்டமும் நமக்கு நாமே திட்டமும் கடந்த 1997-98 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்ட சிறப்பான திட்டங்களாகும். அவற்றில் இதுவரை அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 424 ஊராட்சிகளில் சுமார் 57,086 ஊரக உள் கட்டமைப்புத் திட்டங்கள் சுமார் 358 கோடி ரூபாயில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டங்களைக் கொண்டுவருகின்றபோது, முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் கிராமப்புறத்தில் நல்ல அடிப்படை வசதிகள் இல்லாததாலும், தொழில் வளர்ச்சி இல்லாததாலும் மக்கள் பெரும்பாலும் நகரங்களுக்கு வந்து சேர்கிறார்கள். ஆகவே, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் அடிப்படை வசதிகளைக் கிராம மக்களுக்குச் செய்து கொடுப்போமேயானால், நகரங்களுக்கு வருகின்ற கிராம மக்களுடைய எண்ணிக்கை குறையும் என்ற அடிப்படையில் இது கொண்டுவரப்படுகிறது என்று சொன்னார்கள்.

அந்த அடிப்படையில் இப்போது இங்கே உறுப்பினர்கள் வேண்டிக்கொண்டதைப்போல, நானும், ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் முதல்வர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று அருள்கூர்ந்து கேட்டுக்கொள்கின்றேன். ஒவ்வொரு தொகுதியிலும் குறைந்தது 2-3 ஒன்றியங்கள் இருக்கின்ற காரணத்தால், ஒன்றியத்தில் இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை நாம் எடுத்துச் செய்கிறோம் என்றால், அடுத்து அதே தொகுதியில் இருக்கின்ற இன்னோர் ஒன்றியத்திலிருந்து புகார்கள் வருகின்றன. அவர்களைச் சமாதானப்படுத்துவதைவிட, முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கருணை கூர்ந்து ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஒன்றைத் தருவார்களேயானால், எங்களுக்கும் சுலபமாக இருக்கும், மக்களும் பயன்பெறுவார்கள்.

அதைப்போலவே, நமக்கு நாமே திட்டத்தைப் பொறுத்தவரையில், கடந்த இரண்டாண்டுகளில் 9121 பணிகள்தான் நடைபெற்று இருக்கின்றன. ரூ.43 கோடி செலவிலே இவை நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன. ஆகவே, அதிலே ஏதோ சிறப்பு இல்லாததைப்போல நம்முடைய உறுப்பினர்கள்கூட சொன்னார்கள்.

*"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து"*

என்று சொல்லக்கூடிய அளவில், முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தத் திட்டத்தைப்பற்றிச் சொல்கின்றபோது, தேவையால் உந்தப்பட்டு

மக்கள் பங்கு கொள்ளும் திட்டமாகும் என்று கூறியிருக்கிறார்கள். அதை ஆங்கிலத்தில் Demand, Driven and Participatory என்று சொல்லி இருக்கிறார்கள். மக்கள் வேறு வழியில் செய்ய முடியாத காரியங்களை, அரசே முன்னின்று அவர்களை அதில் பங்குகொள்ளச் செய்து செயல்படுகின்ற காரியமாகும் இது. ஆகவே, மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்கிற வகையில் மக்களே பங்கு கொள்வதைப் பொறுத்து, மக்களுடைய தேவையைப் பொறுத்து, இந்த நமக்கு நாமே திட்டம் வெற்றி பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொகுதி மேம்பாட்டு நிதியைப் பொறுத்தவரையில், எல்லோருமே இந்த நிதியை உயர்த்தவேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கையை நானும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு டாக்டர் முதல்வர் அவர்கள் அதற்கும் ஒரு முடிவு காண்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

அடுத்தது, அனைவருக்கும் கல்வி என்ற முறையில் இப்போது ஒன்றாவது வகுப்பு முதல் ஐந்தாவது வகுப்பு வரை இலவசப் பாட நூல் வழங்கப்படுவதும், கடந்த 1998-99-ல் 300 தொடக்கப் பள்ளிகள் ஆரம்பிக்கப்படுவதும் அதுபோல சமத்துவபுரங்களில் தொடக்கப் பள்ளிகள் ஆரம்பிப்பது என்பதை ஒரு நிபந்தனையாக வைத்திருப்பதாலும், அவையெல்லாம் அனைவருக்கும் கல்வி கி.பி.2000-க்குள் என்ற குறிக்கோளை நிறைவேற்ற உதவும் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது. அதுபோலவே, முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கிராமப் பகுதியிலிருந்து வரக்கூடிய மாணவர்களுக்கு உயர் தொழில்நுட்பக் கல்வியிலே 15 சதவீதம் ஒதுக்கித்தர வேண்டும் என்று ஆணை பிறப்பித்ததன் காரணமாக, இப்போது கூடுதலாகவே கிராமப்புற மாணவர்கள் பயன்பெற்றுக்கொண்டு வருகிறார்கள்.

அதுபோலவே கி.பி. 2000-க்குள் அனைவருக்கும் நல்வாழ்வு என்ற திட்டத்தின் மூலமாகக்கூட கடந்த 2-3 ஆண்டுகளில் 652 ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியிலேகூட 2 ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கக் கூடிய நிலையில் இருக்கின்றன. அதற்காக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு டாக்டர் முதல்வர் அவர்கள் மனிதனை மனிதன் சுமந்து செல்கின்ற கை ரிக்ஷாக்களை ஒழித்தவர்கள். அவர்களுடைய



மனதிலே இருந்து வந்த உறுதி காரணமாக அதைச் செய்தார்கள். இப்போது மனிதக் கழிவுகளை மனிதன் எடுக்கவும் சுமக்கவும் இருக்கின்ற இழிநிலையைப் போக்குவதற்காக ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டுவர இருக்கிறார்கள். தந்தை பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் கர்மவீரர் காமராஜர் அவர்களும் இப்போது இருந்தால் இந்த நேரத்தில் முதல்வர் அவர்களைக் கட்டியணைத்து உச்சிமோந்து அவர்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்திருப்பார்கள். அந்த வகையில் இது எல்லோரும் வரவேற்கக்கூடிய நல்ல திட்டமாக இருக்கிறது என்பதை நாட்டு மக்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள்.

பிற்பகல் 12-05

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் ஓரிரு விஷயங்களை மட்டும் சொல்லி முடித்துக்கொள்ள முனைகிறேன். தலைவர் கலைஞர் அவர்கள், பண்ருட்டி நான்கு முனை சந்திப்பின் வழியாக நிறைய தடவை சென்றிருப்பார்கள். அந்த நேரத்தில் போக்குவரத்தை நிறுத்தித்தான் நாங்கள் தலைவர் அவர்களைத் தரிசிப்பதற்கான வாய்ப்பு இருக்கும். அந்த அளவுக்குப் போக்குவரத்து நெரிசலான இடம். நான் நீண்ட நாட்களாக இதைச் சொல்லி வருகின்றேன். எனவே, நான்கு புறமும் செல்லுகின்ற அந்தச் சாலையை அகலப்படுத்தி, இடையிலே Median-தடுப்புக் கம்பிகளை எழுப்பி, அந்தப் பணியைச் செய்துகொடுக்க வேண்டுமென்று தலைவர் கலைஞர் அவர்களைக் கேட்டுக்கொள்வதற்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், அங்கே Automatic Signal அமைத்தால் போக்குவரத்தைக் கட்டுப்படுத்த சுலபமாக இருக்கும் என்பதால் அதையும், போக்குவரத்துக் காவலர்களையும் நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, Bye-pass Road. பண்ருட்டி வழியாகச் செல்லுகின்றவர்கள். அங்கேயுள்ள போக்குவரத்து நெரிசலைப் பார்த்துவிட்டு, அங்கே Bye-pass Road இருந்தால் நன்றாக இருக்குமே என்று நினைக்கக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது.

அதேபோல, தஞ்சாவூர், கும்பகோணம், சென்னை சாலையைப் பொறுத்தவரையில் அந்தச் சாலையையும், கிழக்குப் பகுதியிலே அதேபோல கடலூரிலிருந்து சித்தூர் வரை செல்லுகின்ற அந்தச் சாலையையும் Bye-pass சாலைகளாக ஆக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய பகுதியில் முந்திரித் தொழில் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. தஞ்சாவூர், திருச்சி புதுக்கோட்டை, இராமநாதபுரம் போன்ற வெளி மாவட்டங்களிலிருந்தும், அதுபோல செங்கற்பட்டு, திருவள்ளூர் ஆகிய இடங்களிலிருந்தும் முந்திரிக் கொட்டைகள் வரவழைக்கப்பட்டு, எங்கள் பகுதியில்தான் பதப்படுத்துகிறார்கள். எனவே, அதற்கான ஒரு தொழிற்சாலையை தலைவர் அவர்கள் நிறுவுவதற்கு ஏற்பாடு செய்வார்களேயானால், அந்தப் பகுதி மக்கள் தங்களுக்கு மிகவும் கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள். அந்தப் பகுதியிலே உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் பாண்டிச்சேரியிலே முந்திரிக் கொட்டை கொள்முதலுக்கு 2½ சதவீதம்தான் கொள்முதல் வரியாக இருக்கின்ற காரணத்தினால், பாண்டிச்சேரியிலே ஒரு R.C யை வாங்கி வைத்துக்கொண்டு பாண்டிச்சேரியிலிருந்து முந்திரிக் கொட்டைகள் கோளாவிற்குச் செல்வதுபோல பொய் Bill-களைத் தயாரித்து, புழக்கத்திலே விட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதனால், நம்முடைய அரசாங்கத்திற்கு வரும் வருமானம் தடைப்படுகிறது. தலைவர் அவர்கள் இதைக் கருத்திலேகொண்டு, அந்தப் பகுதியிலே முந்திரிக் கொட்டையைப் பதப்படுத்துவதற்கும், தரம் பிரிப்பதற்கும், வெளியிலே அனுப்புவதற்கும் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டுமென்றும் வெளியிலே ஏற்றுமதி செய்யக்கூடிய முந்திரிப் பருப்புக்கு கலைஞர் அவர்கள் வரி விலக்கு அளிக்க வேண்டுமென்றும் கேட்டு, இந்த வாய்ப்பினைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்ற வாய்ப்பாகக் கருதி, ஆளுநர் உரை மீதான விவாதத்திலே கலந்துகொள்ளச் செய்தமைக்கு நன்றியைத் தெரிவித்து, திருமதி சுப்புலட்சுமி செகதீசன் அவர்கள் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தை வரவேற்று, அமைகிறேன், நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கு. மனோகரன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பதினோராவது சட்டப் பேரவையின் ஏழாவது கூட்டத் தொடரில், ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் என்னையும் பேச அனுமதித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே' என்பதற்கேற்ப, வரவிருக்கின்ற பட்ஜெட் உரையின் தொடக்க முன்னோடிதான் இந்த



ஆளுநர் உரை என்பதை இங்கே நான் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

1999ஆம் ஆண்டில் நம்முடைய தமிழ்நாட்டில் பொருளாதார வளர்ச்சிக்கும், மக்கள் வாழ்க்கைத் தரத்திற்கும், இதுவொரு சிறந்த எடுத்துக்காட்டான உரையாக இருக்கிறது. அந்த வகையிலே ஆளுநர் உரையிலே தெரிவித்துள்ளதை நான் வரவேற்கின்றேன். ஏனெனில், தமிழை மட்டும் ஆராய்ந்தறிந்த தலைவரல்ல நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள். தமிழனையும், அவனுடைய கடந்த கால மற்றும் எதிர்கால நிலைமைகளையும் ஆராய்ந்து, அதற்கேற்ப வழங்கி வரும் திறம் வாய்ந்த நிர்வாகம், சிறப்பான நல்லாட்சி இவற்றைக் கருத்திற்கொண்டுதான் ஆளுநர் அவர்களே, அந்த உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழைப்பற்றி நன்கு அறிந்த தலைவராதலால்தான் தமிழ் மத்தியிலே ஆட்சிமொழியாக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தோடு பாரதிதாசனால் சொல்லப்பட்ட,

'தமிழுக்கும் அமுதென்று பேர்! - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!

என்ற வரிகளுக்கேற்ப, தலைவரின் தாரக மந்திரமாம்,

'வீழ்வது நாமாக இருப்பினும்,
வாழ்வது தமிழாக இருக்கட்டும்'

என்ற கொள்கை முழக்கத்திற்கேற்ப, மத்தியிலே தமிழ் மொழியை ஆட்சிமொழியாக ஆக்கவும் தொடர்ந்து இந்த அரசு பாடுபட்டு வரும் என்ற ஆளுநரின் அறிவிப்பு, தங்கத் தமிழ் நாயகனின் ஆட்சியிலே தேனான அறிவிப்பாகத் திகழ்கிறது என்றால் அது மிகையாகாது.

பிற்பகல் 12-10

சமூக நீதிக் கொள்கையிலே, சமூக நீதி காத்த வீராங்கனை என்று யார் யாரோ, யார் யாருக்கோ பட்டங்களையெல்லாம் சூட்டி, பாரே அதைக்கண்டு சிரித்த வேளையிலே தந்தை பெரியார் அவர்களின் இலட்சிய தீபத்தை கையில் எடுத்து, சமூக நீதிக் கொள்கையின்படி இடஒதுக்கீட்டினை நிர்ணயம் செய்யும் அதிகாரம் மாநிலங்களுக்கே வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையையும், சாதி சமய பேதங்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்காக இந்தியாவிலே முதன்முறையாக சமத்துவபுரங்களை நிறுவி அனைத்து மதத்தினரும் நல்லெண்ணத்துடனும் ஒற்றுமையுடனும் வாழ வழி செய்து ஜாதி எனும் மாயத் தீயை அழித்து சமூக நீதி மற்றும் சமத்துவபுரம் கண்ட சரித்திரத் தலைவராக

முதல்வர் அவர்கள் திகழ்கின்றார்கள் என்பதை நான் பெருமைப்பட இங்கே கூறிக்கொள்கின்றேன்.

நேர்மையான நல்லாட்சி வழங்குவது, அதைவிட சிறப்பான நிர்வாகத்தைத் தருவது என்று ஏழைகளிடம் வாக்கு பெற்று மத்தியிலே உள்ள கூட்டணி அரசு ஏழைகளின் வயிற்றில் அடித்த நேரத்தில், அரிசி, சர்க்கரை, சமையல் எரிவாயு உள்பட அத்தியாவசியப் பொருள்களின் விலையை உயர்த்தியபோது, 'ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற அண்ணா அவர்கள் வழி வந்த தாயுள்ளம் கொண்ட தலைவர் அவர்கள், தமிழகத்தில் அரிசி விலை உயர்த்தப்படமாட்டாது என்று அறிவித்து, ஏற்கெனவே ஆயிரம் கோடியை மானியமாக வழங்குகின்ற நிலையில் மேலும் 160 கோடியை வழங்கி, மானியத் தொகையை உயர்த்தி, அதனைச் சிறப்பாக ஆளுநர் உரையிலே குறிப்பிட்டது பெருமைப்படத் தகுந்த செயலாக இருக்கிறது. 'நீரின்றி அமையாது உலகு' என்ற வள்ளுவரின் வரிகளுக்கேற்ப நிலத்தடி நீர் குறைந்து வரும் இவ்வேளையில், தற்கால விஞ்ஞானிகள் நீர் வளத்தை அதிகரிக்க வேண்டும் என்று சொல்கின்ற நேரத்தில் நவீன கால சோழச் சக்கரவர்த்தியாக, அடைபட்ட கால்வாய்கள், தூர்ந்துபோன ஏரிகள், பாசனக் குளங்கள் அனைத்தையும் தூர் வாரவும், விவசாய உற்பத்தியை அதிகரிக்க 10 ஆயிரம் எக்டேரில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்ற திட்டத்தைத் தொடங்கி, சாலைகள், குளிர்பதன சேமிப்புக் கிடங்கு, தோட்டக்கலைப் பயிர் என்று விவசாயத்திற்குப் பல்வேறு வகைகளிலும் ஊக்கம் தந்து, தொடர்ந்து இலவச மின்சாரத்தையும் தந்து விவசாயிகளின் வயிற்றில் பால் வார்த்து வருகிறது இந்த அரசு. ஏற்கெனவே, பல்வேறு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, கரும்புக்குக் கட்டுப்படியான விலையையும்—அதேநேரத்தில் தனியார் ஆலைகள் மானியமாக எதையாவது வழங்கி வருவதால், விவசாயிகள் இப்போது கிராமப் பகுதிகளிலே சிறிது குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள் - அவர்களுடைய வேதனையைப் போக்குகின்ற வகையிலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள், 'மந்திரத்திலே மாங்காய் வருமா' என்று. இந்த ஆளுநர் உரையிலே, எந்தப் பொருளாதார வளர்ச்சிக்கும் இடம் இல்லை என்றார்கள். அவர்களுக்கு ஒன்றைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே, புரட்சித் தலைவி என்று பெயர்



பெற்றவர்கள் எல்லாம் ஐந்தாவது நிலையிலே வைத்திருந்த தொழில் துறையை, இரண்டரை ஆண்டு காலத்தில் புரட்சி செய்து இரண்டாவது இடத்திற்குக் கொண்டு வந்த தலைவர், நமது தலைவர் அவர்கள், மந்திரத்திலே மாங்காய் விழுந்ததா, இல்லையா என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதைப்போல, ஜாதிமத பேதங்கள் இப்போதும் தொடர்வதாக குறிப்பிட்டார்கள். ஜாதிமத பேதங்கள் தொடரக் கூடாது, இனம் மொழியால் சமுதாயம் பிரிக்கப்படக் கூடாது என்பதற்காக, போக்குவரத்துக் கழகங்களின் பெயர் மாற்றம், ஜாதியின் பெயரால் நடத்தப்பெறும் ஊர்வலங்களுக்குத் தடை, சமத்துவபுரம் என்று பல்வேறு நிலைகளிலே ஜாதியை ஒழிக்கப் பாடுபட்டவர் நமது முதல்வர் அவர்கள் என்பதை ஆளுநர் உரையிலிருந்து தெள்ளத் தெளிவாக நாம் உணர முடிகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

விலைவாசி உயர்வைப் பொறுத்தவரையிலே, விலைகளை எல்லாம் மத்திய அரசு மட்டும் கட்டுப்படுத்தாது, மாநில அரசும் அதற்குப் பொறுப்பு என்று எதிர்க்கட்சி உறுப்பினர் இங்கே குறிப்பிட்டார். மத்தியிலே கூட்டணி ஆட்சியை நடத்திக்கொண்டு ஏழைகளுக்கு உதவுவதாக அறிவித்துவிட்டு, இப்போது கூட்டணி அரசாங்கம் விலை உயர்வை செய்திருக்கிற நேரத்திலே, அதைக் கண்டித்து விலைக் குறைப்புச் செய்ய உருப்படியான எந்தக் காரியத்தையும் செய்யாமல், மாநில அரசைக் குற்றம் சாட்டுவது, கூட்டணியைத் தொடர்ந்து கொண்டு பேசுவது எந்த வகையில் நியாயம் என்பதை அந்த உறுப்பினர் உணர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

அதுபோல, தகவல் தொழில்நுட்பத்தைப் பொறுத்தவரையில் 320 கோடி ரூபாயில் கணினி மென்பொருள் பூங்கா உருவாக்கப்பட்டு இருக்கிறது. அதன்மூலமாக Internet-இல் உலக அளவில் தகவல் புரட்சி என்று தமிழை அதில் இணைத்து சுமார் 1,500 சமுதாய இணைய மையங்களும், படிப்படியாக 13,500 இணைய மையங்களும் ஏற்படுத்தி வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருவதாக இந்த ஆண்டு ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கின்றேன்.

மனிதநேயத்தின் நிலைப்பாடு தமிழகம், மனித நேயமிக்கத் தலைவர் முதல்வர் அவர்கள் என்பதற்கு எடுத்துக்காட்டு, மனிதக் கழிவுகளை மனிதன் எடுக்கும் அவலத்தினைப் போக்கும் திட்டம் என்பதை நான் இங்கு பெருமையோடு கூறிக்கொள்கிறேன். 1998-99-ல் ஊரகக்

குடியிருப்புக்கு முழுவதுமான வகையிலே 5,398 இடங்களிலும், தொடர்ந்து 6,300 குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 360 கோடி ரூபாய் செலவில் புதியதாக 104 பாலங்கள் கிராமப் பகுதியில் கட்டப்படும் என்ற நிலை உள்ளது. இப்போது தமிழகம், இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக, கிராமப் பகுதிகள் முன்னேற பாடுபட்டு வருவது இந்த ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறேன்.

கிராமப்புற மாணவர்களுக்கு பிளஸ் 2 வரை இலவச பஸ் பாஸ் வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கிராமப் பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்குத் தொழிற்கல்லூரியில் 15 சதவீத இட ஒதுக்கீடு வழங்கிருயிப்பதை, நானும் கிராமப் பகுதியைச் சேர்ந்தவன் என்ற வகையில் அவர்களின் அந்த அறிவிப்பை வரவேற்கிறேன்.

அதுபோல, பல்வேறு நிலைகளிலே இப்போது தமிழக அரசு பாடுபட்டுக் கொண்டு வருவதை இந்த ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனது தொகுதியைப் பொறுத்தவரையில் ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தர்மபுரி மாவட்டம், குடிநீர்ப் பிரச்சினையிலே மோசமான நிலையில் உள்ளதை அறிந்த மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சா அவர்களும், தர்மபுரி மாவட்டத்திற்கு 'ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம்' அமல்படுத்தப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். மாவட்ட மக்களின் சார்பாக அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிதியாண்டில் அதற்கு நிதி ஒதுக்கீடு செய்து அதை செயல்படுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி, மாவட்டத்தின் தலைநகராக இருந்தும், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், மாவட்ட அமர்வு நீதிமன்றம், கூடுதல் அமர்வு நீதிமன்றங்கள் கிருஷ்ணகிரியில் இயங்கி வருகின்றன. கூடுதல் அமர்வு நீதிமன்றத்தை தர்மபுரிக்கு மாற்றிட வேண்டி, உயர்நீதிமன்றம் உத்திரவிட்ட பின்பும் இன்னும் மாற்றாமல் சுணக்கம் காட்டப்பட்டு வருவதை, தயவுசெய்து மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும், அருள்கூர்ந்து கவனித்து இந்த நிதியாண்டில், உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதை அமல்படுத்த வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் காஞ்சனா கமலநாதன்.



**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பழமொழி சொல்வார்கள். 'கிடப்பதெல்லாம் கிடக்கட்டும், கிழவியைத் தூக்கி மணையில் வை' என்று. அந்த மாதிரி, தொகுதியைப் பற்றி கேட்பது அவர்களுடைய உரிமை, சாலை வசதி கேட்கட்டும், மற்ற வசதிகள் வேண்டுமென்று கேட்கட்டும், எதை வேண்டுமானாலும் கேட்கட்டும். Part, Part-ஆக எடுத்துப் பேசுவதற்கு, தர்மபுரி மாவட்டத்தின் தேவைகள் எத்தனையோ இருக்கும்போது, ஏன் Court, Court என்று அடிக்கடி கேட்கின்றார் என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். வேலைவாய்ப்பு அலுவலகம் கிருஷ்ணகிரியில் இருக்கக் கூடாது. அமர்வு நீதிமன்றம் கிருஷ்ணகிரியில் இருக்கக் கூடாது என்று உறுப்பினர் பேசும் போக்கை தயவுசெய்து மாற்றிக்கொள்ள வேண்டுமென்று, உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தர்மபுரி பகுதி மக்களின் நீண்ட காலக் கோரிக்கை, கிருஷ்ணகிரியிலே இயங்கி வரும் கூடுதல் அமர்வு நீதிமன்றத்தை தர்மபுரிக்கு மாற்ற வேண்டும் என்பது, உயர்நீதிமன்றத்திலே வழக்கு தொடுத்து, உயர்நீதிமன்றம் உத்தரவிட்ட பின்பும் நமது அரசில் 6 மாத காலமாக அது கிடப்பில் இருக்கிறது. அந்த உத்தரவினை தயவுசெய்து அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி நகரில் பல்வேறு நிலைகளில் இப்போது பல தேவைகள் இருப்பினும், இந்த அரசு சிறப்பாகச் செயல்பட்டுவரும் இந்த வேளையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தர்மபுரிக்கு வருகை தந்தபோது, 'டானிடா' திட்டத்தின், பெண் சிசு கொலை தடுப்பதற்கான நிகழ்ச்சியின் தொடக்க விழாவிற்கு வந்தபோது, தர்மபுரி தலைமை மருத்துவமனைக்கு சி.டி.ஸ்கேன் வசதி இந்த ஆண்டு செய்துத் தருவதாகக் கூறியிருக்கிறார்கள். தயவுசெய்து அதை நிறைவேற்றி எல்லோரும் எல்லாமும் பெற வேண்டுமென்ற எண்ணத்தோடு, சீராக, சிறப்பாக, அடக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்குச் சிறப்பானதொரு ஆளுநர் உரையை அளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் இந்த வாய்ப்பை அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், நன்றி தெரிவித்து, ஆளுநர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

*** திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரும்பான்மையாக இருந்த பீகார் அரசை அரசியல் நோக்கத்திற்காகக் கலைத்திருப்பதைக் கண்டித்து இந்த அவையின் கருத்தாகக் கொண்டு வந்திருக்க வேண்டும். அது ஆளுநர் உரையில் இடம் பெற்றிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

மத்திய அரசு அரிசி, கோதுமை, சர்க்கரை, உரம், சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலையை உயர்த்தியதை முழுமையாக இரத்து செய்ய வேண்டும். அதை இந்த அவையின் கருத்தாகச் சொல்ல வேண்டும். மத்திய அரசு விலை உயர்த்தியும், தமிழக மக்கள்மீது அதைத் திணிக்காமல் அரசு எடுத்த நடவடிக்கையைப் பாராட்டுகிறேன்.

அ.தி.மு.க. முன்னாள் முதலமைச்சர், அமைச்சர்கள்மீது விசாரணையில் உள்ள வழக்குகள் தனி நீதிமன்றங்களிலிருந்து சாதாரண நீதிமன்றங்களுக்கு மத்திய அரசு மாற்றியதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

கோலப்பன் குழு விவசாயத் தொழிலாளர்களுக்காக அளித்துள்ள அந்தப் பரிந்துரையை விரைவாக அமல்படுத்தப்படுவதற்கும், அந்தப் பரிந்துரைக்குப் பின்னால் விவசாயத் தொழிலாளர்களுக்கான சேமநலத் திட்டத்தை விரைவாக அமல்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

நில உச்சவரம்பு என்பதைப் பல காலங்களுக்கு முன்பே கொண்டு வந்திருந்தாலும், முறையாக அமல்படுத்தாத நிலை இருக்கிறது. எனவே, குவியலாக இருக்கின்ற நிலத்தைக் கண்டறிந்து, நில உச்சவரம்பைக் கொண்டு வந்து விவசாயத் தொழிலாளர்களுக்கு, நிலமற்றவர்களுக்கு விநியோகம் செய்யவேண்டும் என்று நான் அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அரசு 10 ஆயிரம் எக்டேர் தரிசு நிலங்களை ஏற்கெனவே எடுத்து, அதை மேம்படுத்துவதற்கு எடுத்துக் கொண்டிருக்கின்ற நடவடிக்கையை வரவேற்கிறோம். அதேநேரத்தில், அதைத் தனியார் முதலாளிகளுக்கோ மற்ற நிறுவனங்களுக்கோ வழங்காமல், சாதாரண நிலமற்றவர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோன்று, மின்சாரம் உற்பத்தி செய்வதைத் தனியாரிடம் ஒப்படைப்பதைக் கைவிட வேண்டும் அல்லது தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத நல்லிணக்கத்தை உருவாக்கிட அரசு எடுத்துவரும் நடவடிக்கையைப் பாராட்டுகிறோம். இந்தியாவின் ஒற்றுமையைப் பாதுகாக்க, மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் வழங்கச் செய்வது, அனைத்து மொழிகளையும் மத்தியில் ஆட்சிமொழியாக ஆக்க நடவடிக்கை எடுக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டம் - ஒழுங்கு குலைந்து விட்டதாக ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்தி ஆட்சியைக் கலைக்க அ.தி.மு.க. தலைமை எடுக்கும் முயற்சிகளை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

தமிழகத்தில் ஏற்கெனவே அமலில் உள்ள 69 சதவீத இடஒதுக்கீடு தொடர்ந்து அமல்படுத்தப்படுவதற்கு உரிய சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவ உதவி எளிய முறையில் கிராமப் பகுதிகளில் கிடைக்க, சித்தா, ஆயுர்வேதா, ஓமியோபதி மருந்துகள் கிராமப்புறங்களில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் மற்ற மருந்தகங்களுக்கும் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குழித்துறையிலே ஒரு அரசு மருத்துவமனை இருக்கிறது. அந்த அரசு மருத்துவமனை 100 வருடங்களுக்கு முன்பு திருவிதாங்கூர் சமஸ்தானமாக இருந்த காலத்திலே, Travellors' Bungalow-வாக இருந்தது. அது உடைந்து கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையிலிருக்கிறது. எனவே, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போது சொல்லியிருந்தேன். 30, 40 இலட்சம் ரூபாய் அனுமதித்தால் புதிய கட்டடம் கட்ட முடியும். அந்த வகையில் உதவி செய்ய வேண்டும்.

அதேபோன்று, கன்னியாகுமரி மாவட்டத்திலே நீண்டகாலமாக, பல்வேறு கோரிக்கைகளை நாங்கள் வைத்திருந்தாலும், அந்தப் பகுதியிலே ஒரு மருத்துவக் கல்லூரி வேண்டுமென்று கடந்த ஆண்டிலே வற்புறுத்தப்பட்டது. அதற்குத் தகுதியான இடம் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. ஆசாரிப்பள்ளம் பகுதியிலே அதற்குத் தேவையான இடம்

இருக்கிறது. அந்த வகையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த மாவட்டத்தினுடைய நீண்ட நாள் கோரிக்கை என்ற முறையிலே அந்த மருத்துவக் கல்லூரியை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, சாலை அமைத்தல், பராமரித்தல் போன்றவற்றைத் தனியாரிடம் வழங்கக் கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள். ஏற்கெனவே, ஒரு பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது. அந்த மாவட்டத்திலே மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது இரப்பர். அதனுடைய விலை வீழ்ச்சியின் காரணமாக மாவட்டத்தினுடைய பொருளாதாரம் சீர்குலைந்து போய் இருக்கிறது. எனவேதான், கடந்த வருடம் இந்தக் கோரிக்கையை வைத்தேன். இரப்பரைப் பயன்படுத்தி சாலையை அமைத்துக்கொள்ள நடவடிக்கை வேண்டும். அந்தவகையில் ஏற்பாடுகளைச் செய்யும்போது, தனியார் துறைக்கு நாம் சாலைப் பணியைக் கொடுத்தால், அதைப் பராமரிப்பதும், சாலையைச் செப்பனிடுவதும் சரியாக இருக்காது. ஏற்கெனவே, NABARD வங்கி மூலமாக நாம் சாலைகளைப் போடுகிறோம். அவர்கள் சொல்கின்ற அடிப்படையிலே வேலை செய்ய வேண்டும். அதனால் 6 மாதங்களில், போட்ட சாலை கெட்டுப் போகக்கூடிய சூழ்நிலையிருக்கிறது. இதற்குக் காரணம் பராமரிப்பிலே இருக்கின்ற குறைபாடுகள். ஆகவே, இவற்றைத் தனியாருக்கு வழங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

பிற்பகல் 12-25

உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் அதிகாரம், அதேபோல நிதி வழங்குதல். அதிலே ஒன்றைச் சொல்ல வேண்டும். சில அதிகாரங்கள் வழங்கப்பட்டாலும்கூட, அதில் மாதர்கள், பெண்கள் இருக்கின்ற பஞ்சாயத்துக்களில் இருக்கின்ற கொடுமை என்னவென்றால் அதிகாரிகள் அவர்களை மதிப்பதில்லை சமீபத்தில் புலியூர்சாலை பஞ்சாயத்தில் ஒரு பெண் அதனுடைய தலைவராக இருக்கிறார். ஒரு வேலையைப் பார்க்கச் சென்றபோது அங்கே இருக்கின்ற சமூக விரோதிகள் சேர்ந்து அடித்து, அவருடைய கழுத்திலேயிருந்த தாலிச் செயினைப் பறித்துச் சென்றார்கள். அந்தப் பகுதியைச் சேர்ந்த அருமனை போலீஸ் ஸ்டேஷனில் புகார் கொடுத்ததற்குப் பின்னாலே ஒரு F.I.R.-ஐ போட்டார்களே தவிர, எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளத் தயாராக இல்லை. எந்தக் காவல்துறை அதிகாரியும் விசாரிக்கவில்லை.



பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்படுகின்ற இந்த அரசு இப்படிப்பட்ட ஒரு கொடுமையை செய்த காவல் துறை அதிகாரிகள்மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் இங்கே நேற்றையதினம் சாராய ஊழல்பற்றி பேசும்போது, அருமனை போலீஸ் பற்றி சொன்னேன். இன்றைக்கு பத்திரிகையிலே ஒரு செய்தி, நம்முடைய வனத் துறைக்குச் சொந்தமான ஒரு சோதனைச் சாவடியிலே இருந்து துப்பாக்கியையும் தோட்டாக்களையும் பறித்துக் கொண்டு சென்றார்கள். இதேமாதிரி களியல் கிராமத்தில் இருக்கின்ற வனத் துறைக்குச் சொந்தமான சோதனைச் சாவடியிலே இருந்த காவலாளியைக் கட்டிவைத்துவிட்டு, அங்கே இருந்த 6 இலட்சத்துக்கும் அதிகமான மதிப்புள்ள மரங்களை எடுத்துச் சென்றார்கள். வழக்குப் பதிவு செய்தார்கள். ஆனால், அதிலே ஒரு எதிரியைக் கைது செய்துவிட்டு, அருமனை போலீஸ் இன்ஸ்பெக்டர் அந்த ஆளை அதிலிருந்து விடுவிப்பதற்காக 60 ஆயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கி இருக்கின்றார் என்று சொன்னால், எப்படி நல்ல பெயரை இந்த அரசு சம்பாதித்துக் கொள்ள முடியும்? இதிலே எல்லாம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று களியக்காவிளை சரகத்தில் வருகின்ற குழிவிளை என்ற பகுதியிலே தொடர்ச்சியான திருட்டு, 10 திருட்டுகள் நடந்தன. காவல்துறை நடவடிக்கை எடுக்காததால் ஊர்மக்கள் எல்லாம் சேர்ந்து கண்டனக் கூட்டம் நடத்தினார்கள். களியக்காவிளை காவல் நிலையத்திற்கு முன்னே ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். அந்த மாவட்டத்தினுடைய மாவட்ட பஞ்சாயத்தின் உதவித் தலைவர், ஏழு தேசம் பஞ்சாயத்தின் தலைவர், மெதுவும்பல் பஞ்சாயத்தின் தலைவர் மாதர்கள் எல்லாம் சேர்ந்து ஆர்ப்பாட்டம் நடத்தி, அமைதியான முறையிலே திரும்பிச் சென்றார்கள். தாசில்தார் அவர்கள் திருப்பி அனுப்பிவிட்டார். ஆனால், அந்த நேரத்திலே வந்த தக்கலை Dy.S.P.-யும் அதிரடிப் படையும் சேர்ந்து அந்த மாவட்ட பஞ்சாயத்தின் உதவித் தலைவரை அடித்து, மெதுவும்பல் பஞ்சாயத்தின் தலைவர், ஏழு தேசம் பஞ்சாயத்தின் தலைவர்—இவர்களை எல்லாம் அடித்தது மட்டுமல்ல, பெண்களையும் இம்சித்து இருக்கின்றார்கள். இதை மாண்புமிகு முதலமைச்சருடைய மேலான கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். இது கொடுமையிலும் கொடுமை. நியாயம் கேட்டதன் காரணமாக இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்து இருக்கிறது. அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சமத்துவபுரம் திட்டம்—இம்மூன்று திட்டங்களும் பாராட்டக்கூடிய திட்டங்கள். இவை அடித்தளத்திலே சில மாறுதல்களை ஏற்படுத்தி இருக்கின்றனவா என்று கேட்டால், ஏற்படுத்தி இருக்கின்றன; அதை வரவேற்கின்றோம். கடந்த வருஷத்திலே நான் இங்கே ஒரு கோரிக்கை வைத்தேன். விளவங்கோடு தொகுதியிலே தூத்தூர் பஞ்சாயத்திலே ஒரு கோடி ரூபாய்க்கு நீங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தேன். பின்னர் அதற்குக் கொஞ்சம் குறைத்து அனுமதி அளித்தீர்கள். நான் ஒரு பட்டியலை போட்டுக் கொடுத்தேன். முதலிலே குடிக்கத் தண்ணீர்; அப்புறம் மருத்துவமனை; அப்புறம் வீடுகள் கட்டுவது; அப்புறம் சாலைகள் என்று கொடுத்தேன். ஆனால், அவற்றிற்குப் பணத்தைக் குறைத்தார்கள். அவற்றிற்கு estimate எல்லாம் போட்டார்கள். *60* இலட்சமா, *50* இலட்சமா என்று கணக்குத் தெரியாது. யாரிடம் கேட்டாலும் அந்தத் தொகையைச் சொல்லமாட்டார்கள். அந்த அடிப்படையிலே அங்கு வீடுகள் கட்டுகின்ற பணி நடைபெற்றது. சமீபத்திலே *2* மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அந்தப் பகுதிக்கு வந்தார்கள்; கடலரிப்பைப் பார்ப்பதற்காக நம்முடைய சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் அவர்களும் நேரில் வந்து பார்த்தார்கள். அந்த வீட்டிற்கு செலவு செய்யப்பட்டிருக்கக்கூடிய பணம் இருக்கின்றதே, அது—ஒரு ரூபாயாக எண்ணி வைத்து அடுக்கி வைத்தால், அந்த வீட்டை விட பெரிதாக இருக்கும், அந்த அளவுகு அதிலே Commission அடிக்கப்பட்டு இருக்கின்றது; அந்த அளவுக்கு அதிலே கொள்ளை அடிக்கப்பட்டு இருக்கின்றது. இதற்கு நம்முடைய பணத்தைச் செலவு பண்ணி இருக்கிறோம்; ஒரு கோடி ரூபாய் செலவு பண்ணினோம். ஆனால், அதிலே முக்கால்வாசியாவது மக்களுக்குச் சென்றடைகின்றதா என்று நாம் பார்ப்போமேயானால், அது இல்லை. ஆகவேதான், இதிலே இருக்கின்ற தரகர் கூட்டம், Commissionகள்—இதுபோன்ற ஏற்பாடுகளைப் போக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதிலே ஒன்றுதான் தூத்தூர் பஞ்சாயத்து, அங்கே வீடுகள் கட்டி முடிக்கப்படவில்லை. நான் *7* பேருக்கு ஒரு பட்டியலைக் கொடுத்தேன். அவர்களுக்குச் செய்வதற்குத் தயாராக இல்லை. Commission வேண்டும் என்கிறார்கள். நான் Commission கொடுப்பதற்கோ, அதை கொடுக்கும்படி சொல்வதற்கோ தயாராக இல்லை. இப்படிப்பட்ட பஞ்சாயத்தை வைத்து நாம் எப்படி முன்னுக்கு போக முடியும்?



இதுபோன்றுதான் நம்முடைய சமத்துவபுரம் திட்டமும். என்னுடைய தொகுதியிலே களிங்கராஜபுரத்தில் அது நடந்து முடிந்து விட்டது. எல்லா வேலைகளும் முடிந்துவிட்டன. அதை ஆரம்பிக்கின்றபோது இந்த இடத்தைத் தேர்வு செய்கின்றோம் என்று ஒரு வார்த்தை என்னிடம் சொல்லி இருந்தால்—கடந்த *3* மாதங்களாக அங்கு கடுமையான மழை பெய்தது; அங்கே மழைத் தண்ணீர் கட்டி இருக்காது; -- தேவையான இடத்தை நாங்களும்கூட இருந்து தேர்வு செய்து இருப்போம். இந்த விவரங்களை சொல்வதற்குக்கூட நம்முடைய அதிகாரிகள் முன்வரவில்லை. முன்பெல்லாம் *2* மாதங்களுக்கு ஒரு தடவை D.D.C. கூட்டம் நடைபெறும். இதுபோன்ற விவரங்களை எல்லாம் எங்களுக்குச் சொல்லுவார்கள். நாம் சொல்ல வேண்டியதைச் சொல்வதற்கு இடம் இருக்கும். இப்போது அதற்கு வாய்ப்பில்லை. திட்டம் அருமையான திட்டம்தான். கோடிக்கணக்கான ரூபாயைச் செலவழிக்கிறோம். அது மக்களுக்கு முழுமையாகச் சென்றடைகிறதா என்று கேட்டால் இல்லை. என்னைக் கேட்டால் *50* சதவீதம்தான் மக்களைச் சென்றடைகிறது. இதைப் போக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

எங்கள் மாவட்டத்திலே தற்போது ஒரு சங்கடமான நிலைமை. இரப்பர் தொழிற்சாலை. நான் ஒன்றும் பெரிதாகக் கேட்கவில்லை. அங்கே மூலப்பொருள் இருக்கிறது. இரப்பர் விளையக்கூடிய வகையில் அங்கே மண் வளம் இருக்கிறது. தற்போது இரப்பர் விலை கிலோ *21* ரூபாய். *60* ரூபாயிலிருந்து *21* ஆகக் குறைந்திருக்கிறது. நம்முடைய போக்குவரத்துத் துறை பேருந்துகளுக்கு தேவையான டயர்களுக்கு, டியூப்களுக்குத் தேவையான இரப்பரை அங்கே உற்பத்தி செய்து எடுத்துக்கொள்ளலாம். இரப்பர் கழகம் இன்று மூடக்கூடிய நிலையில் உள்ளது. ஆகவே இதைப் போக்குவதற்கு வேறு வழி இல்லை. இரப்பர் தொழிற்சாலை ஆரம்பிக்க அதற்கு உதவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல இன்னொரு சங்கடமான நிகழ்ச்சி. ஏற்கெனவே இரப்பருக்கு விலை கிடையாது. மிகப் பெரிய பொருளாதார நெருக்கடி. இந்த நேரத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் *25,000* பேர் பாதிக்கக்கூடிய ஒரு சங்கடமான நிலைமை புதிதாகத் தோன்றியிருக்கிறது.

அங்கே தென்னங்கீற்று முடையப்பட்டு சென்னைக்கு வருகிறது. விற்பனைக்கு இங்கு வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில், தோவாளையிலிருந்து வருகிறது. சென்னைக்கு வரக்கூடாது என்று தற்போது தடை போடப்பட்டிருக்கிறது. அதனால் தோவாளை, அகஸ்தீஸ்வரம், கல்குளம் தாலுக்காக்களிலே இருக்கின்ற 25,000 மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். சாதாரண [illegible] தொழிலாளி, ஓலை முடையப்போனால் ஒன்றுக்கு அல்லது ரூ.10 கிடைக்கும். (மணியடிக்கப்பெற்றது) எங்கள் ஊரில் ஒரு பழமொழி சொல்வார்கள். மோசமான பழமொழி அது. பனை [illegible] தலையில் இடி விழுந்ததுபோல என்று சொல்வார்கள். அதுபோல இது இருக்கிறது. அந்த அளவுக்குச் சங்கடமான நிலைமை. ரப்பர் விலை வீழ்ச்சி, வருமானம் கிடையாது. வேலை கிடையாது. இந்தச் சூழ்நிலையில் இப்படிப்பட்ட நிலைமை [illegible] வீடுகளை அமைப்பதற்கு நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. அதை ஆதரிக்கிறோம். இதிலே கொஞ்சம் நிதானமாக நடந்துகொண்டு 3 ஆண்டு காலம், 1 ஆண்டு காலம், அங்கே நிலைமை சீராகும் வரை அதைத் தடுக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். அடுத்து மாடு வளர்ப்பு

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கிற குடிசைகளை அதுவரையில் தடுக்காமல் நீடிக்கவிடலாம். ஆனால் புதிது புதிதாக குடிசைகள் போட்டுக்கொண்டு, குடிசை மாற்று வாரியத்தின் வீடு கொடுத்தாலும் அதிலும் இருந்துகொண்டு, குடிசைகளும் போடுகிறார்கள். அதற்காக வரவழைக்கப்படுகின்ற தென்னங்கீற்றுகள் எல்லாம் தடுக்கப்படாவிட்டால் புதிய புதிய குடிசைகள் வந்துகொண்டே இருக்கும். சென்னை மாநகரிலே குடிசைகளே இல்லாத சூழ்நிலையை உருவாக்கவே இயலாது.

**திரு. டி மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இந்தப் பிரச்சினையிலே தலையிட்டதற்கு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தடுக்க வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் அங்கே 25,000 மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்து கொடுத்தால் உதவிகரமாக இருக்கும். மூன்று வருடங்களில் நிலைமை சீரடையும். அதுவரையில் இதற்கு அனுமதி அளிக்கலாமா இல்லையா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)



அடுத்து மாடு வளர்ப்பு, மாட்டு வண்டிப் பிரச்சினை, சம்பளத்தை முறைப்படுத்தித் தர வேண்டுமென்று பொறியாளர்கள் போராட்டம், கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம், கண் பார்வையற்றவர்கள் போராட்டம், இப்படியெல்லாம் ஏகப்பட்ட பிரச்சினைகள் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வருகிறது. அவற்றைச் சீராக பரிசீலிக்க வேண்டும்.

குளச்சல் துறைமுகம் இப்போது எனக்கு நம்பிக்கை இல்லை. *1981*-லே இந்த மன்றத்திலே நான் பேசினேன். Survey-யெல்லாம் பார்வையிலேயே இருக்கிறது. எல்லோரும் வந்து பார்த்துவிட்டுப் போகிறார்கள். Expert Committee யெல்லாம் வந்து பார்த்துவிட்டுப் போகிறது. என்ன செய்யப் போகிறார்கள் என்று தெரியாது. எனவே, குளச்சல் துறைமுகம், அங்கே இருக்கக்கூடிய மருத்துவக் கல்லூரிப் பிரச்சினை, இரப்பர் தொழிற்சாலை ஆகிய இந்தப் பிரச்சினைகளையெல்லாம் இந்த அரசு நிதானமாகப் பரிசீலித்து, அந்த மாவட்ட மக்களுக்கு உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பாலங்கள். (மணியடிக்கப்பெற்றது) ஒன்றைச் சொல்லி முடித்துவிடுகிறேன். நெல்லை மாவட்டத்தையும் கன்னியாகுமரி மாவட்டத்தையும் சேர்த்து 10 பாலங்கள். அதற்காக கான்டிராக் விட்டிருக்கிறார்கள். 4 முறை ஒப்பந்தம் கோரப்பட்டிருக்கிறது. எடுப்பதற்கு ஆட்கள் இல்லை. அது Package system முறையில் இருக்கிறது. ஒருவரும் எடுத்துச் செய்ய தயாராக இல்லை. அதனைத் தனியாக போடுங்கள் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். வள்ளவிலையில் இருந்து ஆரம்பித்து கணபதியான்கடவு, குழித்துறை மற்ற பாலங்கள் எல்லாம் அதற்குள் சேரும். 1997-ல் அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டம் இன்னும் அமல்செய்ய முடியாத நிலையில் இருக்கிறது. தனித்தனியாக auction விட்டோமென்றால் அந்த வேலைகள் விரைவில் முடிவடையும்.

*பிற்பகல் 12-35*

அதேபோல தொகுதிக்கு ஒரு குளம் என்று ஆரம்பித்தார்கள். அதிலே மிகப் பெரிய கொள்ளை, ஒரு குளத்திற்கு 4 இலட்சம் ரூபாய் என்றால், ஒரு இலட்சம் ரூபாய்க்குக்கூட வேலை நடந்திருக்காது. அது போல குளம். அந்த அளவுக்குச் சீர்கேடான நிலை இருக்கிறது. எனவே, அரசாங்கம் செலவழிக்கின்ற பணம் மக்களுடைய கைக்கு யதார்த்தமாகச் செல்வதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா.

* **திரு. என்.ஆர். அழகராஜா :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 11-வது சட்டப்பேரவையினுடைய 7-வது கூட்டத் தொடரில் ஆளுநர் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் உரையாற்றுவதில் மகிழ்ச்சியடைகிறேன். ஆளுநர் உரையில் இரண்டாவது பத்தியில் 'மக்களுடைய எதிர்பார்ப்புகளை உணர்ந்த பொறுப்புள்ள அரசு ஆற்றவேண்டிய கடமைகளைச் செய்ய அதிக நிதியை மத்திய அரசிடமிருந்து இந்த மாநில அரசு பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும்' என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

ஐக்கிய முன்னணி அரசு இருந்தபொழுது அங்கே அமைச்சராக இருந்த மரியாதைக்குரிய திரு. ப. சிதம்பரம் அவர்கள் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டத்தில் கறுப்புப் பணத்தை இந்த நாட்டின் உபயோகத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று திட்டத்தைத் தீட்டி, அதன் வாயிலாக 30 ஆயிரம் கோடி ரூபாய் கறுப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக மாற்றி, அதன் மூலம் மத்திய அரசுக்கு 10 ஆயிரம் கோடி ரூபாய் கிடைக்கக்கூடிய அளவுக்குச் செய்து, அதன் வாயிலாக கிட்டத்தட்ட 7700 கோடி ரூபாய் அளவுக்குப் பல்வேறு மாநிலங்களுக்கு உதவித் தொகை கிடைக்கக்கூடிய அளவுக்குச் செய்தார்கள். ஆனால் இப்போதுள்ள நிலை மாறுபட்ட நிலையாக இருக்கிறது என்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாட்டில் பொருளாதார நிலைமை மிகவும் மந்தமான நிலையில் இருப்பதாக அனைவரும் குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய ஆளுநர் உரையிலே அந்த வாசகம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த நிலைமை தொடரும் எனறு சொன்னால், தமிழகத்தில் இருந்து மட்டும் மத்திய அரசுக்குக் கிடைக்கக்கூடிய கலால் வரி, வருமான வரி போன்றவை கிட்டத்தட்ட 1500 கோடி ரூபாய்க்குக் குறைவாகக் கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே தமிழகத்திற்கு அதனால் கிடைக்கக்கூடிய வருமானமும், பங்குத் தொகையும் குறைவாகவே கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. மேலும், தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு தொழிற்சாலைகளும் மூடப்படும் நிலையில் இருக்கின்ற காரணத்தால், பல்வேறு தொழிற்சாலைகள் உற்பத்தியை குறைவாக செய்து வருவதால், அதன் மூலம் கிடைக்கக்கூடிய விற்பனை வரியும்கூட அதிகமான அளவிலே தமிழகத்திற்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறதா என்ற சந்தேகம் இருக்கிறது.



மேலும், மத்திய அரசு கடந்த மாதம் அத்தியாவசியப் பொருட்களின் விலையை உயர்த்தியதன் காரணமாக தமிழக அரசுக்குக் கிட்டத்தட்ட ஆண்டு ஒன்றுக்கு 162 கோடி ரூபாய் அதன் மூலம் அதிகமான செலவு. மேற்கொண்டு மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் தமிழக அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, கிட்டத்தட்ட 200,300 கோடி ரூபாய் அதிகமான செலவு தமிழக அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. இத்தனை செலவுகள் இருக்கின்றபோது, திட்டச் செலவு கடந்த ஆண்டு 4500 கோடி ரூபாய் அளவுக்கு இருந்தது. ஆனால் அந்த அளவுக்கு இந்த ஆண்டு முடியுமா என்பது சந்தேகமாக இருந்தாலும்கூட, மாண்புமிகு முதல்வர் அவர்களின் அனுபவத்தின் காரணமாக அவை சரி செய்யப்படும். சரிசெய்யப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்திற்கு திட்டச்செலவு 4500 கோடி ரூபாய் என்று சொன்னால், தமிழகத்தினுடைய மொத்த வருமானத்தில் கிட்டத்தட்ட 22 சதவிகிதம்தான் திட்டத்திற்காக செலவு செய்யக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன என்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். 22 சதவிகிதம் என்பதைக் காட்டிலும் வரக்கூடிய ஆண்டுகளில் பல்வேறு அனாவசிய செலவுகளைக் குறைத்து, நிர்வாகச் செலவுகளைக் குறைத்து, திட்டச் செலவிற்கான சதவிகிதத்தை அதிகப்படுத்துவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழக அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக கிட்டத்தட்ட 16,000 பேருந்துகள் ஓடுவதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சாதாரணமாக தனியார் பேருந்துகள் ஓடுகின்றபோது, பேருந்து ஒன்றுக்கு ஆண்டுக்கு அவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் இலாபம் கிடைப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் தமிழகத்தில் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக ஓட்டப்படுகின்ற 16,000 பேருந்துகளின் மூலம் கிடைக்கக்கூடியது இலாபம் இல்லை என்று சொன்னாலும்கூட, நட்டம் அதிகமாக இருக்கிறது. காரணம் என்னவென்றால், அதிகமான சம்பளச் செலவு என்று சொல்கிறார்கள். சாதாரணமாக பொதுமக்கள் பேசிக் கொள்வதெல்லாம் கடந்த ஆண்டுகளில் spare parts வாங்குவதில் பல ஊழல்கள் இருந்தன என்பதுதான். அப்படிப்பட்ட ஊழல்கள் இந்த ஆட்சியில் குறைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் அதிக இலாபம் கிடைப்பதற்கான வாய்ப்புகளை இந்த அரசு செய்து வருகிறது.

பிற்பகல் 12-40

இருந்தாலும் கடந்த ஆண்டு ஒரு கிலோ மீட்டருக்கு 8 பைசா என்று உயர்த்தியதை அநேக உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஆளுநர் உரையின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 4 பைசாவாகக் குறைத்திருக்கிறார்கள். அதனை அனைத்து மக்களும் வரவேற்றார்கள், நானும் வரவேற்கிறேன். கடந்த மாதம், டீசல் விலை ஒரு ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. சராசரியாக, ஒரு பேருந்துக்கு, ஒரு நாளைக்கு 100 லிட்டர் டீசல் என்று வைத்தால்கூட, 100 ரூபாய் இலாபம் கிடைக்கும். 16 ஆயிரம் பேருந்துகளுக்கு கணக்கிட்டுப் பார்த்தால் கிட்டத்தட்ட 50 கோடி ரூபாய் லாபம் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. அதிகச் சம்பளம் கொடுக்கப்படுகிறது என்பதை கணக்கிலே எடுத்துக்கொண்டாலும்கூட, இந்த இலாபத்தை வைத்து பல புதிய பேருந்துகளை வாங்குவதற்கு இந்த அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும். கிராமப்புறங்களிலே ஓடுகின்ற பேருந்துகளை எடுத்துக்கொண்டால் அநேக மக்கள் பேசிக்கொள்வது 'கடந்த ஆட்சியிலே மோசமான நிலை இருந்தது, இந்த ஆட்சியிலே சிறந்த முறையிலே பேருந்துகள் இருக்கும் என்று நம்புகிறோம்' என்பதாகும். அந்த சிறந்த நிலை இன்னும் ஏற்படவில்லை என்று கூறக்கூடிய அளவுக்கு நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக நான் கேட்டுக்கொள்வது, அதிக தூரம், நெடுந்தூரம் செல்லக்கூடிய பேருந்துகளையாவது உடனடியாக புதிய பேருந்துகளாக மாற்றுவதற்கு இந்த அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்பதாகும். ஏனென்றால், கிராமப்புறங்களிலே மிகவும் மோசமான பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன என்று மக்கள் மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, மாநில அளவிலே அனைவராலும் பாராட்டப்படக்கூடிய, மகிழ்ச்சி அடையக்கூடிய ஒரு திட்டம் அனைத்துப் பகுதிகளிலும் இருக்கின்ற வாய்க்கால்கள், குளங்கள் போன்றவை தூர் எடுக்கப்பட்டு, ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு சீர்செய்யப்படுவதாகும். இத்திட்டத்தை அனைவரும் பாராட்டுகிறார்கள். இது உள்ளபடியே சரியான ஒரு திட்டமாகும். அதற்காக வரக்கூடிய நிதி ஆண்டிலே அதிகமான நிதி ஒதுக்கப்படும் என்று ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை நான் உள்ளபடியே பாராட்டுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன். இத்திட்டத்தின் காரணமாக 98 இலட்சம் டன் அதிக உணவு உற்பத்தி



ஏற்படும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதே பத்தியில், இந்த ஆண்டு 10 ஆயிரம் எக்டேரில் -- கிட்டத்தட்ட 25 ஆயிரம் ஏக்கரில் – தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டம் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். ஆனால், வருவாய்த் துறை Survey-யின் அடிப்படையில் பார்த்தால் தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 4.9 இலட்சம் எக்டேர், அதாவது 12 இலட்சம் ஏக்கர் நிலம் Uncultivable Land என்று இருக்கிறது. அதேபோல், 3.5 இலட்சம் எக்டேர், அதாவது 8.6 இலட்சம் ஏக்கர் நிலம் Cultivable Waste என்று இருக்கிறது. இதை மொத்தமாக சேர்த்தால் 20 இலட்சம் ஏக்கர் வருகிறது. இந்த 20 இலட்சம் ஏக்கரிலே 25 ஆயிரம் ஏக்கர் மேம்படுத்தப்படும் என்று சொல்லியிருப்பது மிகவும் குறைவாக இருக்கிறது. அதனை அதிகப்படுத்த இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதிலே, எனக்குத் தெரிந்தவரையில், ஒரு சிலர் Waste Land Development Scheme வாயிலாக Expert Committee-யினுடைய அறிக்கையை பெற்று கூட்டுறவு வங்கிகள் மூலமாக கடன்களைப் பெறுவதற்கு முயற்சி செய்கிறார்கள். ஆனால், பல மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அதற்குச் சரியான முறையிலே பரிந்துரை செய்வதில்லை. மாவட்ட கூட்டுறவு வங்கிகள்கூட அதிலே அதிகமான கவனத்தை கடந்த காலங்களில் செலுத்தவில்லை. இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், நபார்டில் Re-Finance Scheme செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் கூட்டுறவு வங்கிகள் அதற்குப் போதுமான ஒத்துழைப்பு அளிக்கவில்லை என்றால் இந்தத் திட்டத்தைச் சரியான முறையிலே செயல்படுத்த முடியாமல் போய்விடும். ஆகவே, நான் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மூலமாக கேட்டுக்கொள்வது என்னவென்றால், இந்தத் திட்டம் ஒரு சிறந்த திட்டம், அனைவராலும் பாராட்டப்படக்கூடிய திட்டம், அதிகமான உற்பத்தியைத் தரக்கூடிய திட்டம் என்பதால் இந்தத் திட்டத்திற்கு போதுமான நிதி ஆதாரங்களைச் செலுத்த வேண்டும், கூட்டுறவு வங்கிகள் மூலமாக, நிலவள வங்கிகள் மூலமாக சரியான முறையில் கடன் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், மாவட்டங்கள்தோறும் வங்கிகளின் சேவை பற்றி நடைபெறுகின்ற மாதாந்திரக் கூட்டங்கள் வாயிலாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இதுகுறித்து தக்க பரிந்துரைகள் செய்து இத்திட்டத்திற்குப் போதுமான ஊக்கத்தை அளிக்கத் தேவையான முயற்சிகளை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-45*

அடுத்து, கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட பெருமழையின் காரணமாக பல்வேறு மாவட்டங்களில் வெள்ளச் சேதம் ஏற்பட்டது. வெள்ளச் சேதம் ஒரு சில மாவட்டங்களில் அதிகமாக இருந்தது. குறிப்பாக, மதுரை, திண்டுக்கல், தேனி, கன்னியாகுமரி, திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் வெள்ளத்தால் பல பகுதிகள் சேதம் அடைந்தன. குறிப்பாக என்னுடைய தொகுதியில் இருக்கின்ற பல்வேறு குளங்கள் வெள்ளத்தால் அரிக்கப்பட்டு சீரழிந்து போய்விட்டன. என்னுடைய பகுதியில் இருக்கின்ற நாராயண குளம், கருவேலங்குளம், தாடிச்சேரி கண்மாய், கொடுவிலார்பட்டி கண்மாய், சின்னமனூர், உடையகுளம், செங்குளம், வாலசமுத்திரம் கண்மாய், கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஏக்கர் பாசனப் பகுதியைக் கொண்ட உத்தமபாளையம் அணைக்கட்டு போன்றவை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. அதற்கு தமிழக அரசு இதுவரை கிட்டத்தட்ட 33 கோடி ரூபாய் அளவிற்குத்தான் நிதியொதுக்கீடு செய்திருக்கிறது. இதுசம்பந்தமாக, அங்கே பல்வேறு பகுதிகளிலே எடுக்கப்பட்ட Photo-க்களைக்கூட மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் அளித்திருக்கிறேன். அந்தப் பகுதியிலுள்ள வெள்ளச் சேதங்களை உடனடியாகச் சரிசெய்வதற்கு ஆவன செய்வதோடு மட்டுமல்லாமல், அதற்கு அதிக நிதியொதுக்கீடு செய்து தரும்படி நான் கேட்டுக் கொள்கிறேன். (*மணியடிக்கப்பெற்றது*).

இன்னும், இரண்டு விஷயங்கள். நகராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் அரசு மொத்த வருவாயிலே கிட்டத்தட்ட 8 சதவிகிதம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. மிகவும் நல்ல தொகைதான். நான் இல்லையென்று சொல்லவில்லை. அதன் மூலமாகக் கடந்த ஆண்டு 662 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டதாகவும், அதற்குப் பின்னால், வேறு மானியங்கள் வகைகளிலேயும், கிட்டத்தட்ட 539 கோடி ரூபாய் கொடுப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, இன்னும் பல நகராட்சிகளிலும், ஊராட்சிகளிலும் போதுமான அத்தியாவசியத் தேவைகளை உடனடியாகச் செய்து கொடுக்க முடியாத நிலைமைகள் இருக்கின்றன. அரசு மூலமாகக் கொடுக்கப்பட்ட பல்வேறு கடன்கள் நகராட்சிகளிலேயும் பேரூராட்சிகளிலேயும் இருக்கின்றன. அதன் மூலமாக, திருப்பிச் செலுத்தக்கூடிய அந்தப் பணமானது, ஆண்டொன்றிற்கு கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய் அளவிற்கு அரசுக்கு வருகிறது. அதை அரசு மீண்டும் பல்வேறு கடன்களாகக் கொடுக்கிறது. ஆகவே, இவ்வாறு செய்வதைக் காட்டிலும், தொழிற்சாலைகளுக்குக் கொடுப்பதைப்போன்று, அவர்கள் செலுத்த வேண்டிய கடன்



தொகையை ஐந்தாண்டு காலத்திற்கு நிறுத்தி வைப்பீர்களென்றால், ஓரளவிற்காவது அத்தியாவசியத் தேவைகளை அந்த நகராட்சிகளோ, ஊராட்சிகளோ செய்வதற்கு வசதியாக இருக்கும். எனவே, ஐந்தாண்டு காலம் வரிச்சலுகை என்பதுபோல, ஐந்தாண்டு காலத்திற்கு அவர்களது கடன்களைத் தள்ளி வைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கரும்பு விலையைப் பற்றிப் பேசினார்கள். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்கூடக் குறிப்பிட்டார்கள். ஆயிரம் ரூபாய் என்று நீங்கள் அறிவிக்க வேண்டுமென்று அவசியமே கிடையாது. நான் கேட்டுக் கொள்வதெல்லாம், கரும்பு ஆலைகளிலே உற்பத்திச் செலவு எவ்வளவு ஆகிறதோ, அந்த முழுத் தொகையையும் Ration-லே வழங்கும்போது பெற மத்திய அரசு அனுமதிக்கிறது. உதாரணமாக, கிலோ ஒன்றிற்கு உற்பத்திச் செலவு பத்து ரூபாய் என்று வைத்துக்கொண்டால், Ration-லே பன்னிரெண்டு ரூபாய் வாங்கிவிடுகிறோம். இதற்கு Supreme Court ஆணையே இருக்கிறது. ஆகவே, நீங்கள் ஆயிரம் ரூபாய் என்று அறிவிபபதைக் காட்டிலும், மொத்தமாக கரும்பு வெட்டுக் கூலியையும், லாரி வாடகையையும் நீங்கள் அவர்களுக்குக் கொடுக்கும்படி செய்தாலே போதுமானது. நீங்கள் ஆயிரம் ரூபாய் என்று அறிவிக்க வேண்டிய அவசியமே கிடையாது. இதுகுறித்து மத்திய அரசிலே ஒப்புக்கொள்கிறார்கள். Supreme Court-லும் அதற்கான ஆணை இருக்கிறது. எனவே, நீங்கள் ஆயிரம் ரூபாய் என்று அறிவிப்பதைக் காட்டிலும், — இன்றைக்குக் கிட்டத்தட்ட அறுநூற்றுச் சொச்சம் ரூபாய் வரும். ஒருசில ஆலைகளிலே Percentage கூட வரும், பத்து சதவிகிதம், பதினோறு சதவிகிதம் அவர்களுக்கு Recovery வந்தால், 750 ரூபாய், 800 ரூபாய் வரைக்கும் வரும் — நீங்கள் வெட்டுக்கூலியையும், லாரி வாடகையையும் முழுமையாக அந்த ஆலைகள் ஏற்றுக்கொள்ளும்படி செய்ய வேண்டுமென்று நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். (*மணியடிக்கப்பெற்றது*)

ஒன்றேயொன்று. எங்களுடைய பகுதியிலே பல சாலைகளைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். மிகவும் மகிழ்ச்சி. அதே நேரத்தில், பல ஆண்டுகளாக, கிட்டத்தட்ட 20 ஆண்டுகள், 30 ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டிருக்கிற இரண்டு மூன்று பாலங்கள் குறித்து நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்திருக்கிறேன். அவற்றை கொடுக்கும்படி இந்த மன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, குச்சனூரிலே சனீஸ்வரன் கோவில் இருக்கும் இடம். தமிழகத்திலும், இந்தியாவிலும் வேறு எங்கும் இதுபோன்ற கோவில்

கிடையாது. அந்தக் கோவில் இருக்கின்ற ஊரிலிருந்து, பெரியாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று பல ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கே ஒரு சிறிய பாலம் இருந்தது. அது 1992 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளச் சேதத்தின் காரணமாக இடிந்துவிட்டது. ஆகவே, மீண்டும் அந்தப் பகுதியில் ஒரு பாலத்தையும், எரசக்கநாயக்கனூர் செல்கின்ற பாதையில் ஒரு பாலத்தையும், சின்னமனூரிலிருந்து முத்தலாபுரம் செல்கின்ற பாதையில் ஒரு பாலத்தையும் அமைத்துக் கொடுப்பதோடு, இரண்டு வாரங்களுக்கு முன்னால் மாண்புமிகு முதல்வர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் எங்களுடைய பகுதிக்கு வருகின்றபோது, எங்களுடைய பகுதியிலுள்ள தேவைகள் குறித்து. அந்தப் பகுதியிலுள்ள முக்கியமான அணைக்கட்டுகள் குறித்தும் தெரிவித்திருக்கிறேன். அவற்றையும் இந்த நிதி அறிக்கையிலே சேர்த்து, எங்கள் பகுதியினுடைய வளத்திற்கு முழு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டு விடைபெறுகிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பி. வெங்கடசாமி.**

**Thiru B. Venkatasamy**: Hon. Deputy Speaker, Sir, I thank you for giving me this opportunity to express my views on the Address delivered by Her Excellency the Governor of Tamil Nadu, in this House. There are some salient features in the Address, viz., about controlling the caste clashes efficiently in the southern districts and about subsidising the essential commodities, i.e. rice, sugar and wheat, by the State Government for about Rs. 160 crores, eventhough the Central Government have increased the prices of these commodities.

*பிற்பகல் 12-50*

The Government have taken steps for improving irrigation by desilting all the Tanks in Tamil Nadu. The Government have launched a programme for wasteland development to be implemented next year, covering over 10,000 hectares. I welcome it. Similarly rice production is to be increased by developing the infrastructure facilities like roads and building cold storage facilities where the perishables could be preserved.

I also welcome the opening of 1,500 Internet centres which will provide information to the rural people and I am happy that 12,000 more such centres are to be set up in the next three years. This is expected to provide employment opportunities to 1,50,000 persons within three years.



An investment of Rs. 48,497 crores has been committed for industrial development, in the last 32 months. Now Tamil Nadu has reached the second position in the country in industrialisation from the fifth position it occupied earlier.

I welcome the Anna Marumalarchi Thittam and the scheme for giving water connections to rural houses. You have said that NABARD has sanctioned a sum of Rs. 702 crores for the development of roads which will ensure rapid development of the State. Mention has also been made of the Samathuvapuram Scheme and about fixing of minimum wages for agricultural labourers. It is commendable that you have given 30% rebate to the handloom sector and you have also made primary education compulsory. I welcome all these things.

At the same time I want to express some views which may be included in the schemes of the Government at the time of presenting the Budget. These will be useful to develop the economy of Tamil Nadu. I want to point out that agriculture should be declared an industry. Now a lot of agriculturists are leaving agriculture and going in for some other jobs as remunerative price is not given by the Government for their produce. Now tomato is sold at Rs. 1 or 50 paise per k.g. What is the assurance given by the Government to them for fixing a fair price ? Many people are going to lose their money if things remain the same. I therefore request the Hon. Chief Minister to see that the status of an industry is given to agriculture. Only then those people would be able to survive.

Regarding provision of employment opportunities, we find that a lot of educated people are without employment and all these communal clashes are a result of this unemployment in the entire State. I request the Government to give more job opportunities to the rural youth.

I am happy that nearly 4,000 crores of rupees have been invested in new industries but a lot of old factories have been closed. I request the Hon. Chief Minister to see that industries which are not working well should be encouraged to develop themselves. Recently our Labour Minister came to Hosur and called the representatives of all the closed industries and negotiated with them. Similar steps should be taken to know the problems of those industries and closed industries should be re-opened to give employment opportunities to the workers.

220162

The entire economy of the nation is in a dwindling stage. There is no money flow and the real estate business has come down. I request the Hon. Chief Minister to see that the reasons for such a state are found out and rectified.

Regarding sugarcane prices, Hon. Chief Minister has stated that in five years the agriculturists will be given a purchase price of Rs. 1000 per tonne of sugarcane. I request that every year an increase in the purchase price may be made proportionately and at the end of five years you can give Rs. 1000 per tonne. Sugarcane growers are suffering now and some increase can be made this year.

Regarding Special Courts to try corruption cases, I do not know why the persons who were in Government previously, are allergic to the Special Courts. What is the difficulty encountered by them? Let the court enquire and give a judgement. I condemn the action of the Central Government in shifting the cases which were before the Special Courts on the ground that the Tamil Nadu Government have no power in the matter. Everybody is interested only in setting right things and this Government has come forward to rectify the bad things of the past. Why should the Central Government try to transfer the cases before these Courts? Let the special Judges enquire fairly and give justice. I am really unhappy about the interference of the Central Government in matters connected with the State Government.

*பிற்பகல் 12-55*

Regarding Chennai Beautification Scheme, I came to know that Government is going to evict more people from the Adyar Buckingham Canal. Lot of pucca houses and buildings have been constructed there. I request the Government to see that eviction is minimised. If we evict, a lot of money will have to be spent. At the same time, minimum space should be taken near Buckingham Canal, whereby lot of houses will be saved. I request the Government to examine this.

It was stated - our friend was telling - that Cauvery water would be given to the entire Dharmapuri District from Hogenekkal. But, Thali, Kelamangalam, Sulagiri, Veppanapalli and Hosur blocks are not included in this scheme. Hon. Rural Development and Local Administration Minister who came to Hosur was also kind enough to promise that this scheme would be implemented. I request the Hon. Chief Minister and the Hon. Rural



Development and Local Administration Minister to see that Hogenekkal water is given to these 5 blocks in the next budget session.

As Hon. Member, Thiru I. Ganesan was telling, in Pallipalayam and Kumarapalayam, I have myself seen that nearly 500 dyeing units i.e. *சாயம் போடுகிற* factory has been closed completely. I came to understand that all those people who are depending on weaving, viz. weavers --- powerloomshave completely stopped -- nearly one lakh people have been rendered unemployed and lot of people are also migrating to other places. That is the position. I came to understand that there is a scheme to implement the reiver valley project at about Rs. 6 crores to each Panchayat. That is included in that point. This is alarming. *உட கடையிலே போய்ப்பார்த்தால் கூட வியாபாரம் இல்லை. பணமே இல்லை என்று சொல்கிறார்கள். அந்த அளவுக்கு* it has gone down. I request the Hon. Chief Minister to see that Kumarapalayam problem is rectified and lot of people are saved.

Regarding quarry lease, some people have taken quarry lease and the Government have declared that the quarries will be auctioned. How is it possible? They have developmed the quary taking mud and other things. They might have invested a lot of money. If you auction it, some other people will come and take the quarry by auction. They cannot bit and where can the previous lessees go? I request the Hon. Chief Minister to see that those who have taken the quarry lease earlier and developed it, must be allowed to continue and the other quarries may be auctioned. I request the Hon. Chief Minister to consider this.

Regarding terrorists, even though though they are in the jail, they say "I will see that the fellow's neck is cut down". What is this ? And at the same time it is being implemented also. If that fellow says in the Court that is implemented outside. So, this is a very serious thing. I request the Hon. Chief Minister to ensure that all these things do not take place in Tamil Nadu because Tamil Nadu has peace loving people. We are living in peace and request the Hon. Chief Minister to examine this and do the needful.

Regarding Anna Marumalarchi Thittam - all our people are actually very good. I have already told in the last session also that our Hon Chief Minister was adopting the real Gandhian principles by implementing the Anna Marumalarchi Thittam. It is true. But the quality of work should be little more improved as our Hon. Member Mani says. This must be observed. And at the same time Anna Marumalarchi Thittam should be implemented at least in one village in each block.

The MLA's Constituency Development Fund should be raised atleast to Rs. 50 lakhs. I request the Hon. Chief Minister to examine all these things.

There are economic imbalances. How to bring it down ? Due to economic imbalances, lot of people are becoming poor; lot of people are becoming rich. How to minimise and match this? I request the Hon. Chief Minister to see that at least in the coming Budget (The gong was sounded) -- I will finish within one minute -- I hope schemes are announced to minimise the economic imbalances before the reach and the poor Over all, the quality should be improved. We are doing lot of works.

*பிற்பகல் 1-00*

Regarding corruption, as I have preveously told in the House, corruption is rampant in the lower level and not in the higher level. Due to this you are getting a very bad name. You are not getting any 'Mamools' as in the previous Government. Your Ministers are really very good. You are doing excellent work. Why you should get a bad name because of these corrupt officials in Taluk offices and all other places? Last time also, after my speech in the Assembly on the orders of Hon. Chief Minister all the R.T.O. Offices in the entire State of Tamil Nadu were raided for one day and lot of people were caught during the raid. It was concluded on that day itself. Why should it be concluded within a day? Lot of corruption is there. So, I request the Hon. Chief Minister to make some plan in the interest of the people to cheak this corruption at least to some extent so that people will be very happy. Then only people will think that this Government is very good, as they are able to eradicate corruption. (The Gong was sounded) Thank you very much for giving me this opportunity.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.என். வல்லரசு.

***திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீது நான் சார்ந்திருக்கின்ற அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். கவர்னர் உரை வெறும் காகித அறிவிப்பல்ல. கவர்னர் உரை என்பது கலைஞர் அரசின் ஒரு காவியப் படைப்பு, பெரும் சாதனைகளின் தொகுப்பு, தமிழகத்தை மேம்படுத்த நல்ல பல கொள்கைகளையும் திட்டங்களையும் கொண்டிருக்கின்ற ஒரு பெட்டகம். சிலர் வெளியிலே இருந்து கொண்டு கவர்னர் உரையை வெறும் காகித அறிவிப்பு என்று சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால் உண்மையில், தமிழக



முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் வருகிற மார்ச் மாதம் 17 ஆம் தேதி தமிழக சட்டப் பேரவையிலே வழங்கவிருக்கின்ற பட்ஜெட் தமிழக மக்களை ஈர்க்கின்ற வகையிலே ஒரு தலைசிறந்த பட்ஜெட்டாக அமையும் என்பதற்கு ஒரு முன்னோடி விளக்க உரையாகத்தான் கவர்னர் உரை அமைந்திருக்கிறது என்றால் அது மிகையாகாது. வளர்ந்து வருகின்ற விஞ்ஞான உலகத்தில் தமிழகம் தனித்து விடப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக நவீன விஞ்ஞானியான தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் Internet மையங்களை உருவாக்கி ஒன்றரை இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற திட்டத்தை இங்கே வழங்கியிருக்கின்றார்கள்.

அதேபோன்று மின்சாரத் துறையில் 2500 மெகாவாட் மின்சார உற்பத்தி செய்யும் திட்டம், 300 பேர் உள்ள கிராமத்தில் புதிய தொடக்கப் பள்ளிகள், திருச்சி, தூத்துக்குடி போன்ற இடங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் போன்ற சிறப்பான, ஏராளமான திட்டங்களை உள்ளடக்கி இருக்கிற கவர்னர் உரையை வெறும் காகித அறிவிப்பு என்று சொல்வது நியாயமற்றது என்பது தமிழக மக்களுக்கு நன்கு தெரிந்திருக்கிறது. இப்படிக் கற்கண்டாக இனிக்கின்ற இந்த கவர்னர் உரை சிலருக்கு கசப்பாக இருக்கிறது என்றால் அதற்கு வெறும் அரசியல்தான் காரணங்களே தவிர வேறு அல்ல என்றுதான் சொல்ல வேண்டும்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் தொழில் துறையில் ஐந்தாவது இடத்தில் இருந்ததை, - நினைத்துப் பார்க்கவே ஆச்சரியமாக இருக்கிறது - கடந்த 32 மாதங்களில், 48,000 கோடி முதலீடு செய்து, இப்போது இரண்டாவது இடத்திற்கு உயர்த்தியிருக்கிறார்கள் என்றால் அது மாபெரும் சாதனையல்லவா? அதுமட்டுமல்ல இதே வேகத்தில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் செல்வார்களேயானால் அடுத்த ஆண்டே இந்தியாவிலே தமிழகத்திற்கு தொழில் துறையில் முதலிடம் என்ற நிலையை உருவாக்கிக் காட்டுவார்கள் என்ற ஆழமான நம்பிக்கையிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படிப்பட்ட நிலையில் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை நான் ஈர்க்க விரும்புகின்றேன். அதாவது மூடிக்கிடக்கின்ற ஆலைகளையும் திறக்க வேண்டிய நிலை நமக்கு ஏற்பட்டிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுடைய வாழ்வைச் சீர்படுத்துகின்ற வகையில் மூடிக் கிடக்கின்ற ஆலைகளையும் திறக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை மகாலட்சுமி மில்லையும் திறக்க வேண்டுமாய் நான் அன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

உணவு உற்பத்தியில் இமாலய சாதனையை கலைஞர் அரசு படைத்திருக்கிறது. ஒரு கோடி டன் உணவு தானிய உற்பத்தி என்பது ஒரு சாதனையல்லவா? அப்படிப்பட்ட இமாலய சாதனை உருவாவதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தவர்கள் தமிழகத்தினுடைய விவசாயிகள். அந்த விவசாயிகள், நாங்கள் உற்பத்தி செய்கின்ற நெல்லுக்கு உரிய விலை கிடைக்கவில்லை; நாங்கள் உற்பத்தி செய்கின்ற பருத்திக்கு நல்ல விலை கிடைக்கவில்லை; நாங்கள் உற்பத்தி செய்கின்ற கரும்புக்கு நல்ல விலை கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். எனவே, தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். நெல்லுக்கும் அரிசிக்கும் என்ன வித்தியாசம்? நெல்லின் உமி நீக்கப்பட்டவுடன் அது அரிசி ஆகிறது. நெல்லை அரிசியாக்குவதற்கு மிகப் பெரிய பொருளாதாரச் செலவு இல்லை. ஆனால் விவசாயிகளிடமிருக்கின்ற நெல் குறைந்த விலைக்குப் போகின்றது. அதே நேரத்தில் உமி நீக்கப்பட்ட அரிசியின் விலை பல மடங்கு உயர்ந்திருக்கிறது. தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு நவீன விஞ்ஞானி என்ற காரணத்தால், இந்த இடைப்பட்ட நிலையில் விவசாயிகளை அடித்து நொறுக்கிக் கொண்டிருக்கின்ற இடைத்தரகர்கள் யார் என்பதைக் கண்டறிய வேண்டும். விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

பிற்பகல் *1-05*

அதுமட்டுமல்லாமல், உயர்மட்டக் குழு ஒன்று அமைக்க வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். விவசாயிகளுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஓர் உயர்மட்டக் குழு அமைக்க வேண்டுமென்று நான் விவசாயிகளுடைய சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

வெள்ளையருடைய ஆட்சிக் காலத்திலே ரேகை சட்டத்திற்குட்பட்ட பிரமலைக் கள்ளர் சமுதாயத்திற்கு கள்ளர் சீரமைப்புத் துறை ஏற்படுத்தப்பட்டது. அவற்றில், வேலைவாய்ப்பில் பிரமலைக் கள்ளருக்கு முன்னுரிமை என்ற சலுகை வழங்கப்பட்டது. ஆனால், இடைக்காலத்தில் ஏனோ விடுபட்டுவிட்டது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்னுடைய கோரிக்கையை ஏற்று, இந்தக் கள்ளர் சீரமைபபுத் துறையில், பிரமலைக் கள்ளருக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை என்கின்ற ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க



அரசாணையை வழங்கி, அந்த பிரமலைக் கள்ளர் சமுதாயத்திற்கு மறுவாழ்வு வழங்கியிருக்கிறார்கள். 200 புதிய ஆசிரியர்களுக்கு நியமன உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, நான் கூறியபடி 2 கோடி தேவர் இன மக்கள் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1968 ஆம் ஆண்டு கலைஞராகத் திகழ வேண்டும் என்று விரும்புகிறார்கள். அது வடிவில் இல்லாவிட்டாலும்கூட, உருவத்தில் இல்லாவிட்டாலும்கூட, உணர்வால், எண்ணத்தால், இன்றைய தினம் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தொடர்ந்து 1968 ஆம் ஆண்டு கலைஞராகத்தான் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள், நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது. முக்குலத்தோருக்கு மட்டுமல்ல, எக்குலத்தோருக்கும் ஒரு தலைசிறந்த முதல்வராக தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள் திகழ்ந்து கொண்டிருப்பதை இதன் வாயிலாக எங்களால் உணர முடிகிறது.

இன்று மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருக்கு 20 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. வடக்கே வன்னியர் சமுதாயம், தெற்கே 2 கோடி தேவர் சமுதாயம் ஆகிய இரு பெரும் சமுதாயங்கள் இடம் பெற்றிருக்கிற காரணத்தினால், 20 சதவிகித இட ஒதுக்கீட்டை 30 சதவிகிதமாக உயர்த்தித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உயர் நீதிமன்றம், தலைமைச் செயலகம் மற்றும் பிற துறைகளில் உள்ள உயர் பதவிகளில் 2 கோடி தேவர் இன மக்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். தமிழக முதல்வர் அதைக் கவனத்தில் கொண்டு, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே முதல் சுதந்திரப் போராட்ட வீரர், மாமன்னர் பூலித் தேவருக்கு சிலையும் அமைத்துக் கொடுத்து, கோட்டையையும் கட்டிக் கொடுத்த கலைஞர் அவர்களை நான் மனமாரப் பாராட்டுகிறேன். அதேபோல், இந்திய சுதந்திரத்திற்காக 11 வருட காலம் சிறைத் தண்டனை அனுபவித்து, சுதந்திரத்திற்காகப் பாடுபட்டது மட்டுமல்லாமல் வாய்பூட்டு சட்டத்திற்கு ஆளாக்கப்பட்ட தேவர் திருமகன், மதுரை மீனாட்சியம்மன் ஆலையத்திற்கு பல்லாயிரக்கணக்கான ஆதிதிராவிடர் மக்களை அழைத்துச் சென்று ஆலயப் பிரவேசம் செய்து வைத்த தேசியத் தலைவர், முத்து இராமலிங்கத் தேவர் வாழ்ந்த மதுரை திருநகர் வீட்டை நினைவகமாக அரசு அறிவித்து, அவருக்கு நினைவாலயம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய உசிலம்பட்டித் தொகுதியில் அசுவமாநதி அணைத் திட்டம் நிறைவேற்றித் தரப்படும் என்று தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் உசிலம்பட்டியில் பசும்பொன் தேவர் சிலை முன்பு உறுதியளித்தார்கள். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் அங்கே உறுதியளித்தார்கள். எனவே, அந்த தொட்டப்ப நாயக்கனூர் வட்டாரத்து 30 கிராம மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையில் அசுவமாநதி அணைத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய உசிலம்பட்டித் தொகுதியில் தொழிற்சாலைகளே இல்லை. எனவே, நம்முடைய சட்டமன்றத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அளித்த உறுதிப்படி தொழிற்சாலைகளே இல்லாத என்னுடைய உசிலம்பட்டி தொகுதிக்கு தொழிற் கூடங்களை அமைத்துத்தர வேண்டுமாய் ஒரு கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்தித்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். உசிலம்பட்டி நகரத்தில் ஏறக்குறைய 40 ஆயிரம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த 40 ஆயிரம் மக்களுக்கும் மிகப் பெரிய குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. உசிலம்பட்டி பஸ் நிலையம் சீர்குலைந்திருக்கிறது. எனவே, உசிலம்பட்டி தொகுதியில் தலைவிரித்தாடுகின்ற பிரச்சினையான குடிநீர்ப் பிரச்சினையையும், பேருந்து நிலையப் பிரச்சினையையும் தீர்த்து வைக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய உசிலம்பட்டி தொகுதியில் உசிலம்பட்டி பஸ் Depot-வில், போக்குவரத்துத் துறையில் 45 பஸ்கள்தான் தொடர்ந்து 20, 25 ஆண்டுகளாக இருக்கின்றன. அதிலேகூட 7 பஸ்கள் பழுதாகிவிட்ட காரணத்தினால், புதிய மாற்று பஸ்கள் இல்லாமல், மக்கள் பல்வேறு கஷ்ட நிலைமைகளுக்கு ஆளாகியிருக்கிற காரணத்தினால், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் 5 புதிய பஸ்களை விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பொதுக் கூட்டத்திலே பேசுவது போன்று பேசினால் எப்படி? நான் மணியடித்த பிறகும், என்னைப் பார்த்து கையைக் காண்பிக்கக் கூடாது. சீக்கிரமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. பி.என். வல்லரசு:** இங்கே மாண்புமிகு தமிழகத்தினுடைய உணவுத் துறை அமைச்சர், கூட்டுறவுத் துறை அமைச்சர் பம்பரமாகச் சுழன்று பணியாற்றினாலும், அனைத்துத் தரப்பு மக்களிடமும் இருக்கின்ற



ration கடைப் பிரச்சினை இப்போது பெரிய பிரச்சினையாக இருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் மேல்மட்டத்தில் கடுமையாக உழைக்கிறீர்கள். ஆனால், ration கடை ஊழியர்கள் நமது எண்ணத்தையும், முதலமைச்சர் அவர்களுடைய எண்ணத்தையும், உங்களுடைய எண்ணத்தையும் மக்களிடம் பிரதிபலிக்கிறார்களா என்றால், இல்லவே இல்லை. இதனால் ஓட்டு வங்கி பாதிக்கப்படும் ஆபத்தான சூழ்நிலையை ஏற்படுத்துகின்ற நிலை இந்த ration கடை ஊழியர்களிடத்திலே இருக்கின்ற காரணத்தினால், அந்தச் சீர்கேடுகளை எல்லாம் களைய நீங்கள் முறைப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசிமுடியுங்கள்.

**திரு. பி.என். வல்லரசு:** ரேஷன் கடைகளைச் சீர்திருத்த வேண்டுமாய் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இங்கே திராவிட முன்னேற்றக் கழக அரசு பல்வேறு வெடிகுண்டுச் சம்பவங்களை எல்லாம் தாண்டி, பல்வேறு சாதிக் கலவரங்களை எல்லாம் தாண்டி, சட்டம்-ஒழுங்கு நிலைநாட்டுவதில் சீராக உயர்வு பெற்று, தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்து வருகின்ற இந்த நேரத்தில், திடீர் சகோதரிகள் சிலர் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று கூறிய போதிலும்கூட அதை மறுத்திட்ட பிரதமர் வாஜ்பாயைப் பாராட்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உரையை முடியுங்கள் என்று சொன்ன பிறகு, புதிய கருத்து ஆரம்பித்தீர்கள் என்றால், எப்படி முடிக்க முடியும்? (குறுக்கீடு) இதையெல்லாம் அனுமதிக்க மாட்டேன், நீங்கள் உட்காருங்கள். அடுத்து திரு. ரா. சேதுநாதன்.

***திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையை வரவேற்று கருத்துக்களை வழங்குவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, சில கருத்துக்களைச் சொல்ல நான் விழைகின்றேன்.

வருகின்ற பட்ஜெட்டிற்கு ஒரு முகப்புரையாக இந்த கவர்னர் உரையை நான் கருதுகின்றேன். முகப்புரையே அனைத்துத்

தலைவர்களாலும் இங்கே பாராட்டப்பட்டிருக்கிறது. முகப்புரையே இவ்வளவு பாராட்டு பெற்றிருக்கிறது என்று சொன்னால், விளக்க உரை எவ்வளவு பாராட்டு பெறும் என்று எண்ணுகின்றபொழுது மார்ச் மாதம் ஒரு மகிழ்ச்சிகரமான மாதமாக இருக்குமென்றுதான் நான் கருதுகின்றேன். நான் பார்த்த வரையில் தமிழகத்தில் எத்தனையோ தலைவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். நாளைய தேர்தலைப் பற்றியும், வாக்கு வங்கிகளைப் பற்றியும் எண்ணிய தலைவர்கள் ஏராளம். ஆனால் நாளைய சமுதாயத்தைப் பற்றிச் சிந்திக்கின்ற ஒப்பற்ற ஒரு தலைவர் இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கின்ற காலத்தில் நாங்களும் வாழ்கின்றோம் என்று எண்ணுகின்றபொழுது அதைவிட ஒரு மகிழ்ச்சி எங்களுக்கு இல்லை, மக்களுக்கும் இல்லை. அதற்கு எடுத்துக்காட்டாக ஒரு சிலவற்றைச் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகின்றேன்.

இலவச bus pass திட்டம். யாரும் கேட்கவில்லை தலைவர் அவர்களே. ஒரு தாய்கூட அழுதால்தான் பால் கொடுப்பாள். ஆனால் அழாமலேயே பால் கொடுக்கின்ற ஓர் ஆற்றல்மிக்க ஓர் அற்புதத் தாயாக இந்த நாட்டு மக்கள் உள்ளத்தில் நல்ல இடத்தைப் பெற்றிருக்கிறீர்கள் என்று நான் ஒரு வாய் ஜாலத்திற்காகச் சொல்லவில்லை. நாட்டு மக்கள் நெஞ்சாரப் பாராட்டுகின்றார்கள், இலவச bus pass திட்டத்தை.

அதேபோல் 8-வது படித்தால் ரூ. 10,000 என்று சொன்னீர்களே அது எதற்காக என்று கேட்டார்கள். நாளைய பிள்ளைகள் - ஓர் ஒளிமிக்க சமுதாயத்தைப் படைக்க வேண்டும். இந்த நாட்டிற்கு நல்ல குடிமகனை உருவாக்குவதற்கு ஒரு தாய் 8-வது படித்தால்தான் நல்ல பிள்ளைகளைப் பெற்று, படிக்க வைத்து, இந்த நாட்டிற்கு அர்ப்பணிக்க முடியும் என்ற அந்த எண்ணத்தை உங்கள் உள்ளத்திலே தூண்டியது யார் என்று கேட்டார்கள். அது எனக்குத் தெரியாது என்று சொல்லி விட்டேன்.

அதேபோல கிராமத்து மாணவர்களுக்கு 15 சதவீதம். எப்படிப்பட்ட திட்டங்கள்! அனைத்துத் தலைவர்களுமே இங்கே பாராட்டிய திட்டங்கள். அனைத்துக் கிராமங்களுக்கும் பள்ளிகள் என்று சொன்னீர்கள். நாளைய சமுதாயத்தைப் பற்றிச் சிந்தித்துச் சொன்ன அந்தக் கருத்தை நாட்டு மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்; நல்லவர்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த ஆளுநர் உரையிலே பார்க்கின்றபோது தொழில் துறையில் தமிழகம் 5-வது இடத்திலேயிருந்து 2-வது இடத்திற்கு வருவதாக அறிவிப்பு வந்திருக்கிறது. நான் சொல்கிறேன், இல்லை முதல் இடத்தில்



இருக்கிறது தமிழகம் என்று. ஒன்று. இலவச மின்சாரம் இந்தியாவிலேயே எந்த மாநிலமும் கொடுக்காத ஓர் அற்புதத் திட்டம். விவசாயிகளுடைய உள்ளத்திலே பால் வார்க்கின்ற ஒரு திட்டம் இலவச மின்சாரத் திட்டம். எத்தனையோ தாலிகள் மார்வாடிக் கடைகளுக்குச் சென்ற காலங்கள் மாறி, இலவசமாக விவசாயிகளைத் தட்டி, நீர் இறைத்து, நெஞ்சார விளைவித்து, இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்ற அற்புதமான திட்டம், இந்தியாவிலேயே முதல் திட்டம்.

அடுத்து இலவச திருமண உதவித் திட்டம், சமத்துவபுரத் திட்டம். எத்தனையோ மேடு பள்ளங்கள் இருக்கின்றன இந்த நாட்டிலே. எத்தனையோ சோதனைகள் இருக்கின்றன இந்த நாட்டில். சமதர்மப் பூங்காவை உருவாக்க வேண்டுமென்ற உயரிய உள்ளத்தோடு சமத்துவபுரத் திட்டம், இந்தியாவின் முதல் திட்டம்.

அதேபோல் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். வாழ்த்துகிறார்கள் தலைவர்கள். வேண்டுகிறார்கள். ஓர் ஒன்றியத்திற்கு ஒன்று என்று இருப்பதை இப்போது இரண்டு வேண்டுமென்று கேட்கிறார்கள். எவ்வளவு அருமையான திட்டம்? நாட்டு மக்கள் நலம் நாடிய திட்டம். நாளைய சமுதாயம் பாராட்ட வேண்டிய திட்டம்.

நான் இன்னும் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இதுவரையில் என்னுடைய தொகுதியில் மூன்று கிராமங்களில் 15,000 மக்களுக்கு 90 சதவீதம் மன நிறைவை ஏற்படுத்தியிருக்கிறது. ஒன்றையாவது இவர்கள் உருப்படியாகச் செய்தார்களா என்று கேட்பார்கள். ஆனால் இதுநாள்வரை ஏறத்தாழ 15,000 மக்கள் இந்தத் திட்டத்தால் பயன் பெற்றிருக்கிறார்கள். இன்னும் இரண்டு ஆண்டு காலத்தில் 10,000 பேர். இந்த நாட்டிலே 25,000 பேர் அந்த ஒரு தொகுதியிலே மட்டும் பயன்பெறுகிறார்கள் என்று சொன்னால் இதை நல்ல மக்கள், நாட்டு மக்கள் பாராட்டுகிறார்கள். இன்னும் அடுத்த 5 ஆண்டுகாலம் மக்கள் வாய்ப்பு அளித்தால் 25,000 பேர்கள் பயனடைவார்கள். மொத்தம் இருப்பதே 1,50,000 வாக்குகள். இந்த 5 ஆண்டில் 25,000 பேர், அடுத்த 5 ஆண்டில் 25,000 பேர், தொடர்ந்து இந்த ஆட்சி 4 முறை இருந்தால் ஒரு தொகுதி தன்னிறைவு பெற்றுவிடும் என்பதில் சந்தேகம் இல்லை.

பிற்பகல் 1-15

அதேபோல குடிசைமாற்று வாரியத் திட்டம். இந்தியாவிற்கே முதல் திட்டம். அதைப்போல மக்களுடைய திட்டங்கள் ஏராளம் ஏராளம் சொல்ல நேரம் இல்லை. இப்படிப் பார்க்கின்றபோது இந்தியாவில் தமிழகம் முதலிடத்தை பெற்றிருக்கிறது. தொழில் துறையில்

வேண்டுமென்றால் இரண்டாவது இடத்தினை பெற்றிருக்கலாம். செல்வத்துள் செல்வம் கல்விச் செல்வம் என்பார்கள். தமிழ்நாட்டுத் தாய் ஈன்றெடுத்த செல்வங்களுக்கு கல்விச் செல்வத்தைக் கொடுப்பதற்கு நீங்கள் ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிகள் திறக்கப்படும் என்று அறிவித்தீர்கள். அந்தத் திட்டம் கண்ணொளியைத் திறக்கின்ற திட்டம். நாளைய சமுதாயம் உங்களைப் பாராட்ட வேண்டும்; வாழ்த்த வேண்டும்; போற்ற வேண்டும். அந்த உயரிய திட்டத்தை நான் பாராட்டுகிறேன்.

அதேபோல அரிசி, கோதுமை, சர்க்கரை, சமையல் எரிவாயு விலையை கவலைப்படாமல் ஏற்றிவிட்டார்கள். நாட்டு மக்களைப் பற்றி எண்ணிப் பார்க்காமல் ஏற்றிவிட்டார்கள். ஆனால் நீங்கள் எண்ணிப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். மத்திய அரசு அந்தச் சுமையை நாட்டு மக்களுக்குச் சுமத்தினாலும் நான் சுமத்த மாட்டேன், நானே என்னுடைய இதயத்தில் தாங்கிக்கொள்கிறேன்; என் அறிவாற்றலால் அதைச் சரிசெய்து விடுகிறேன் என்று சொல்லி 160 கோடி ரூபாயைச் சரி செய்கின்ற ஆற்றல் படைத்த தலைவர் அவர்களே, இந்த நாட்டு மக்கள் உங்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல 142 இலட்சம் பேர்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன, பாராட்டுகிறோம், மகிழ்கிறோம். மக்களும் மகிழ்கிறார்கள். ஆனால் ஒருசில இடங்களிலே ஒரு சிலருக்கு அட்டைகள் கிடைக்காமல் இருக்கின்றன. அவர்கள் அங்கே சோதனைக்கு வந்தபோது அந்த அட்டை கேட்டவர்கள் அங்கு இல்லை என்பதால் அவர்களுககு மறுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அதையும் ஆய்வு செய்து உணவுத் துறை அமைச்சர் அவர்கள் விடுபட்டவர்களுக்கு அட்டைகள் வழங்கி அவர்களுடைய உள்ளங்களிலேயும் மகிழ்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன.

கணினி Internet வளர்ச்சியில் இந்தியாவிற்கே வழி காட்டும் முதல் மாநிலம் இது என்று சொன்னால் மிகையாகாது. யாரும் அதைக் குறை சொல்ல மாட்டார்கள் என்று கருதுகின்றேன். ஆனால் உலகத் தரத்தில் ரூபாய் 320 கோடி செலவிலே கணினி மென்பொருள் பூங்கா உருவாக்கி இந்த நாட்டு மக்களுக்கு, படித்த இளைஞர்களுக்கு, தொழில் நுட்பம் கற்ற இளைஞர்களுக்கு 1½ இலட்சம் பேர்களுக்கு நீங்கள் வேலைவாய்ப்பைக் கொடுக்கிறீர்கள். போற்றக்கூடிய திட்டம் என்று



இளைஞர்கள் எல்லாம் படித்தவர்கள் எல்லாம், தொழில் நுட்பம் கற்றவர்கள் எல்லாம் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல சாரம் இல்லாமல் வீடு எப்படிக் கட்ட முடியும்? மின்சாரம் இல்லாமல் எப்படி வாழ முடியும்? ஆனால் அதிலும் நீங்கள் விட்டுவைக்கவில்லை. நமக்கு முன்னால் ஆண்டவர்கள் Current-ஐப் பற்றிக் கவலைப்படவில்லை. Currency-ஐப்பற்றிக் கவலைப்பட்டார்கள். ஆனால் நீங்கள் Current-ஐப் பற்றிக் கவலைப்பட்டு நாட்டுக்கு 2000-2001-ல் 2500 மெகாவாட் மின்சாரத்தைக் கையிருப்பு அளவிற்கு உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்து முயற்சித்துக் கொண்டிருக்கிறீர்கள். அதற்கு இந்த நாட்டு மக்களுடைய ஒத்துழைப்பு என்றைக்கும் உண்டு என்று மக்கள் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

விட்டீர்களா பொதுப்பணித் துறையை? ஏரிகளைத் தூர் வாருகின்ற திட்டம். வரத்துக் கால்வாய்களைச் செயல்படுத்துகின்ற திட்டம். (மணியடிக்கப்பெற்றது) அந்தக் கால்வாய் வழியாக அன்று தோட்டத்திற்குக் Currency-களை வடிகட்டியவர்கள் எல்லாம் உண்டு. ஆனால் இன்றைக்கு வரத்துக் கால்வாய் உண்மையிலேயே நாட்டு மக்களுடைய விவசாயத்திற்குப் பயன்படுகின்ற கால்வாயாக இருக்கிறது. இன்னும் ஏரிகள் பலப்படுத்தப்படுகின்றன.

விவசாயத் துறையைப் பொறுத்தவரையில் கழிவுநீர்க் குட்டைகள் கிராமத்திற்குத் தண்ணீர் பிரச்சினையைத் தீர்க்கின்ற திட்டங்கள் அற்புதமான திட்டங்கள்.

இன்னும் பேச வேண்டும் என்று ஆர்வம் இருந்தாலும் மணியடித்த காரணத்தால் என்னுடைய ஒரே ஒரு கருத்தைச் சொல்லி நான் முடிக்கிறேன். சமத்துவபுரம் முதல்வர் அவர்களுடைய சிந்தனையில் உதித்த சமதர்ம பூங்கா. ஏற்றத்தாழ்வுகளை நீக்க வந்திருக்கின்ற அற்புதத் திட்டம். அருமையான திட்டம்.

அதேபோல உள்ளாட்சித் துறை சொல்லவே தேவையில்லை. கிராமத்துச் சாலைகளை மக்கள் பாராட்டுகிறார்கள். இந்தச் சாலைகள் எல்லாம் இவ்வளவு காலம் எங்கே சென்றன ? இந்தப் பணம் எங்கே சென்றது என்று கேட்கிறார்கள். அற்புதமான தார்ச் சாலைகள், கான்கிரீட் சாலைகள். குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்கிற எழுச்சிமயமான திட்டம்.

நெடுஞ்சாலைத் துறை அதைவிட அருமையான சாலைகளை நாட்டு மக்களுக்கு அளிக்கிறது. 104 பாலங்கள் நாட்டினுடைய மேடு

பள்ளங்களைப் போக்குவதற்காக எப்படி நீங்கள் சமத்துவபுரம் அமைக்கின்றீர்களோ அதேபோல மேடு பள்ளங்களைப் போக்குவதற்காக 104 பாலங்கள் NABARD திட்டத்தின்கீழ் வெகு வேகமாக செயல்படுகின்ற ஓர் அற்புதம் இந்த நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சொந்தத் தொகுதியைப் பற்றி ஒருசில பிரச்சினைகளைச் சொல்லிவிடுகிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

*பிற்பகல் 1-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சொல்லவும் கூடுவதில்லை, சொல்லும் திறனும் தமிழுக்கில்லை' என்று பாடின பாரதி இன்றைக்கு இருந்திருந்தால், பாரதியின் மொழியிலே 'பலே, பாண்டியா' என்று தமிழக முதல்வா அவர்களைப் பாராட்டியிருப்பான். *(மேசையைத் தட்டும் ஒலி)* தமிழால் முடியும் என்று தமிழ் இணையம் கண்ட தமிழக முதல்வர் அவர்களுக்கு நான் என்னுடைய இதயம் கனிந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்ளப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் தமிழ்நாட்டைக் கணினிமயமாக்க முன் வந்திருக்கிற அவர்கள் முயற்சி, தகவல் தொழில்நுட்ப நெடுஞ்சாலையிலே அவர்கள் எடுத்து வைத்திருக்கிற முதல் அடி என்று நான் எண்ணி அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தக் கணினியை, முதன்முறையாக நம்முடைய சட்டமன்ற விவாதங்களைக் கணினிமயமாக்குவதற்கு நீங்கள் பயன்படுத்த வேண்டுமென்று உங்களை நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு வேண்டிய கருவிகளெல்லாம் இங்கே இருந்தும்கூட, விவாதங்கள் இன்னும் கணினிமயம் ஆக்கப்படவில்லை என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

வழக்கமாக, ஆளுநா உரை என்று சொன்னால் அதிலே சில செய்திகளை மட்டும்தான் கோடிட்டுக் காட்ட முடியும். மற்றவற்றையெல்லாம் வரவு-செலவுத் திட்டத்திலேதான் சொல்வது வழக்கம். இருந்தாலும்கூட, இந்த ஆளுநர் உரையிலே நீர்ப்பாசனத் திட்டங்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்லி இருக்கலாமோ என்று நான் கருதுகிறேன். பல நீர்ப்பாசனத் திட்டங்கள், அவிநாசி நீர்ப்பாசனத்



திட்டம், வீராணம் திட்டம், பாண்டியாறு புன்னம்புழா திட்டம், கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் இவற்றினுடைய முன்னேற்றமெல்லாம் எந்த அளவிலே இருக்கிறது என்பதை இந்தச் சட்டமன்றத்திற்கு, இதிலே கோடிட்டுக் காட்டியிருந்தால் அது உறுப்பினர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கோவைக்கு வருகின்றபோதெல்லாம், சின்ன வேடம்பட்டிக் குளம் என்று ஒரு குளம் இருக்கிறது, அதிலே தண்ணீரே நிரம்புவது இல்லை, ஊற்றுக் கால்வாயை விரிவுபடுத்த வேண்டுமென்று பல முறை நான் கேட்டிருக்கிறேன். இனியாவது அதைச் செய்வதற்கு நீங்கள் சரியான முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, தென் மாவட்டங்களிலே அச்சன்கோவில்-பம்பா திட்டமானது ஏற்கெனவே பரிசீலனையில் இருக்கிறது. நீங்கள், இந்தத் திட்டங்கள் குறித்து கேரள அரசோடு எந்த அளவிற்குப் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறீர்கள்; அதனுடைய முன்னேற்றம் என்ன என்பதைத் தயவு செய்து இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது மத்திய அரசு -- Urban Land Ceiling Act -- நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்தை எடுத்துவிட்டது. தமிழக அரசும் அதேபோல செய்யப் போகிறதா, இல்லையா என்பதைத் தெரிவிப்பது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். *(குறுக்கீடு)* எடுத்துவிட வேண்டுமென்று நான் என்னுடைய வேண்டுகோளாக அதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டம் நீக்கப்பட்டால் வீடுகள் கட்டுவது இன்னும் அதிக அளவிலே பெருகும். அதன் மூலமாகப் பல பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆளுநர் உரையிலே தொழிலைப் பற்றி அதிகமாகச் சொல்லப்படவில்லை. கோவை போன்ற நகரங்களிலே இது மிக வேகமாக நசிந்து வருவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நாள்தோறும் பல ஆலைகள் மூடப்பட்டு வருகின்றன. இன்றைக்கு பஞ்சாலைகளைப் புனரமைப்பதற்கு மத்திய அரசு 25,000 கோடி ரூபாய் கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதைக்கூட Composite

Mill-க்கு மட்டும் கொடுக்காமல், நூற்பாலைகளுக்கும் கொடுக்க வேண்டும். அதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்ளும் அதே சமயத்திலே, ஜவுளி அந்தர்களை உற்பத்தி செய்கின்ற ஆலைகளுக்கு ஊக்கம் அளிக்கின்ற முறையிலே வெளிநாட்டிலேயிருந்து second hand இயந்திரங்களைத் தருவிப்பதைத் தடை செய்ய வேண்டுமென்று நீங்கள் மத்திய அரசைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

அதுமட்டும் அல்லாமல், நான் பழைய ஆளுநர் உரைகளைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன். அந்த அரசு சொன்ன வாசகங்களை நான் இங்கே சொல்லவில்லை. மத்திய அரசு ஒப்புதல் அளித்திருக்கிற சில திட்டங்களை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

குறிப்பாக, Aeromatic Project என்ற ஒரு திட்டம் 2,000 கோடி ரூபாயில் வருவதாகவும், அதற்கு மத்திய அரசு அனுமதி கொடுத்திருப்பதாகவும் 1993 ஆம் ஆண்டு சொல்லப்பட்டது. ஆனால், ஒன்றை அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அந்தத் திட்டம் எந்த நிலையிலே இருக்கிறது? வருமா? வராதா என்று உங்களுடைய பதிலுரையில் சொல்ல வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இது தவிர, Southern Peninsular Gas Grid Bombay High-யிலிருந்து குழாய் மூலமாக Gas தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்து அதன் மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்வது, எந்த நிலையிலே இருக்கிறது என நான் உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அந்தத் திட்டத்தை ஆராய்ந்து நீங்கள் அவசியம் அமல்படுத்த முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டுப் பொறியியல் வல்லுநர்கள் மிகச் சிறந்தவர்கள்தான். ஆனால், எங்களுடைய மாவட்டத்திலே, எங்களுக்குத் தண்ணீர் பில்லூரிலிருந்து வரவேண்டும், பில்லூரிலிருந்து தண்ணீர் வருகிற குழாயில் உடைப்பு இல்லாத நாளே கிடையாது. 785 அடி உயரம் உள்ள பக்ராநங்கல் அணையைக் கட்டிய அதே இன்ஜினியர்கள் அமைத்துள்ள குழாய்களில் உடைப்பு இருக்கிறதே என்பதை எண்ணிப் பார்த்தால் வேதனையாக இருக்கிறது. பக்ராநங்கல் அணையில் ஒரு சின்னக் கசிவுகூட இல்லை; ஆனால் இந்தச் சின்னக் குழாய்களில் உடைப்பு இருக்கிறது. இப்படி நாள்தோறும் குழாய்களில் உடைப்பு



ஏற்படுகிறது என்று சொன்னால் அது யாருடைய குறை என்பதை நீங்கள் கண்டறிய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்று சொன்னால் அந்தப் பொறியாளர்தான் பொறுப்பு ஏற்க வேண்டும்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கடைசியாக தமிழ்நாட்டை ஆண்டபோது, ஒரு சட்டமன்ற உறுப்பினர் இருந்தார். அவர் 10 இலட்சம் ரூபாய் செலவிலே மாநகராட்சிக்கு ஒரு கட்டடம் கட்டிக் கொடுத்தார். 10 வருடத்திற்கு முன்னாலே கட்டிக் கொடுத்தார். அந்தக் கட்டடம் ஒரு நாள்கூட குழந்தைகளால் பயன்படுத்தப்படவில்லை; பாழடைந்திருக்கிறது. அங்கு சமூக விரோதிகள் இருந்துகொண்டு சமூக விரோதக் காரியங்களைச் செய்து கொண்டிருக்கின்றனர். அதை இடிக்க வேண்டும் என்று பல முறை உத்தரவு போட்டார்கள். இருந்தாலும்கூட, அதிகாரிகள் அதற்குச் செவிசாய்க்கவில்லை என்பதை நான் இங்கே மிகுந்த வேதனையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) அது மாநகராட்சிப் பள்ளி.

இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் 234 தொகுதிகளிலேயும் நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் இருப்பதாகச் சொன்னார்கள். நான் இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மாநகராட்சி எல்லையிலே இருக்கிற சட்டமன்றத் தொகுதியிலே அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் இல்லை. எங்கள் தொகுதியில் இல்லை. கோவைக்கு இல்லை. (குறுக்கீடு) சரி. மேயரைக் கேட்டுக்கொள்கிறேன். நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், அதற்குப் பதிலாக தொகுதி வளர்ச்சி நிதியை 35 இலட்சம் ரூபாயிலிருந்து ஒரு கோடி ரூபாயாக உயர்த்திக் கொடுத்து உத்தரவிட்டால் அது பயனுள்ளதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

இவைதவிர, மாநகராட்சிக்கு அரசிடமிருந்து ஏறத்தாழ 62 கோடி ரூபாய் வரவேண்டியிருக்கிறது.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நேரத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** சரி. மாநகராட்சியினுடைய மொத்த வருமானமே 130 கோடிதான். ஆனால், கல்வித் துறையிலேயிருந்து ரூ. 13.57 இலட்சம் - reimbursement வரவேண்டும். மின்சார இலாகாவிலிருந்து 26 கோடி ரூபாய் வரவேண்டும். reimbursement

தான். தாட்கோவிலிருந்து 14 கோடி ரூபாய் வரவேண்டும். சொத்து வரி 4 கோடி 25 இலட்சம் ரூபாய் வர வேண்டும். இவைபோல மாநகராட்சிக்கு ஒட்டுமொத்தமாக அரசிடமிருந்து 62 கோடி ரூபாய் வரவேண்டும். பல ஆண்டுகளாக இவை வரவில்லை. இவற்றை விரைவிலே கொடுப்பதற்கு அரசு உத்தரவிட வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மத நல்லிணக்கம். உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், இந்த மத நல்லிணக்கக் கூட்டங்கள் நடக்கின்றன, ஆனால், அந்தக் கூட்டங்களுக்கு வருகின்ற நபர்கள் எல்லோருமே 70 வயதுக்கு மேற்பட்டவர்கள்தான். அவர்கள் ஒவ்வொரு முறையும் வருகின்றபோது பைபிள், குரான், தேவாரம் ஆகியவற்றிலிருந்து சில வாசகங்களைப் படிக்கிறார்கள். அதற்கு மேலே ஒன்றுமே நடப்பதில்லை. ஆனால், இந்த மதப் பிரச்சினைக்கு யார் காரணம்? 19 முதல் 25 வயதுடைய இளைஞர்கள்தான் காரணம். படிப்பறிவு இல்லாத, வேலையில்லாத இளைஞர்கள்தான் இதற்குக் காரணம். ஆகவே, இந்த மத நல்லிணக்கம் வெற்றிகரமாக நடைபெற வேண்டும் என்று சொன்னால், பாதிக்கப்பட்ட இளைஞர்கள் இருக்கிறார்களே, அவர்களை அழைத்து அவர்களுடைய குறைகளைக் கேட்டு தீர்வு கண்டால் இதில் வெற்றி காண முடியும் என்பதை நான் உங்களுக்கு அன்போடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கல்வியைப் பொறுத்தமட்டிலே......

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின்முன் அனுமதியுடன் இன்னும் ஒரு நிமிஷம் அவையை நீட்டிக்கிறேன்

**திரு. வி.கே. லட்சுமணன்:** கல்வியைப் பொறுத்தமட்டிலே அரசினுடைய உதவி பெறாத கல்லூரிகளிலே ஆசிரியர்களுக்குச் சம்பளம் குறைவாகக் கொடுப்பதாக இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களுக்குச் சம்பளம் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அதை அரசிலிருந்து வாங்க முடியாது. மாணவர்கள்தான் கொடுக்க வேண்டும். ஆகவே, மாணவர்களின் சுமை அதிகமாகும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசு ஒன்று செய்யலாம். இனிமேல் அரசு உதவிபெறும் கல்லூரிகளிலே புதிதாகப் பாடத் திட்டங்கள் தொடங்குகின்றபொழுது அந்த எல்லாப் பாடத் திட்டங்களும் சுய நிதி பாடத் திட்டங்களாக இருப்பதாக நாம் ஏற்பாடு செய்தால் அந்தப் பாடத் திட்டங்களுக்கான ஆசிரியர்களுக்கு



அரசு கொடுக்க வேண்டிய அவசியமில்லை. அதை அந்தக் கல்லூரியே மாணவர்களிடம் வசூல் செய்து கொடுத்து விட முடியும். ஆகவே, ஒருமுறை நாம் எல்லா உதவிபெறும் கல்லூரிகளையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னோம். அதற்குப் பிறகு தனியார் கல்லூரிகளையும் ஏற்றுக் கொண்டோம். அதற்குப் பின்னால் வேலை செய்கிற ஆசிரியர்களுக்கு U.G.C. Scale கொடுக்க வேண்டுமென்று சொல்கிறோம். அப்படி அதிகமான தொகையைக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறபொழுது யார் கொடுப்பது அந்தத் தொகையை? ஆகவே, அதிகமான மாணவர்களைச் சேர்ப்பதற்குப் பல்கலைக்கழகம் ஒத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு பாடத் திட்டத்திலேயும் அதிக மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு பல்கலைக்கழகம் ஒத்துக்கொள்ள வேண்டும். அந்தப் பணத்தை மாணவர்களிடத்திலிருந்து வாங்கி ஆசிரியர்களுக்குக் கொடுக்கலாம். ஆகவே, இந்தச் சிக்கலை அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதோடு உரையை முடியுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இந்த வாய்ப்பினைக் கொடுத்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (23-2-1999) காலை 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.32 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

51. 21-10-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட வணிக வரிகள் துறையின் II (1)/வ.வ/156/98 ஆம் எண் நாளிட்ட அறிவிக்கையில் மாற்றம் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 23-12-1998 ஆம் நாளிட்ட 338 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

52. 1997-98 ஆம் ஆண்டிற்கான மாநகர் போக்குவரத்துக் கழகத்தின்

(சென்னை கோட்டம்-1) இருபத்தாறாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

53. 1997-98 ஆம் ஆண்டிற்கான மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் (சென்னை கோட்டம்-2) ஐந்தாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

54. 1997-98 ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழுவின் பதினொன்காவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

55. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்-1) லிமிடெட்டின் இருபத்தி ஏழாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

56. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்-2) லிமிடெட்டின் இருபத்தி நான்காவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

57. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (மதுரை கோட்டம்-3) லிமிடெட்டின் பதினைந்தாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

58. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம் கோட்டம்-1) லிமிடெட்டின் இருபத்தி ஏழாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

59. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக்



கழகம் (கும்பகோணம் கோட்டம்-2) லிமிடெட்டின் பதிமூன்றாம் ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

60. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம் கோட்டம்-3) லிமிடெட்டின் ஆறாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

- ஏதுமில்லை -

2 20 162

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

**தவணைத்தாள்.**

சே எண் : ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S-F 259A-6—1,00,000—30-1-84.